விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுகள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஆவணி 13 புதன்கிழமை (29.08.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 253

## திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்தை எதிர்த்து

# முல்லையில் மாபெரும் கண்டனப் போராட்டம்

### ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு எதிர்ப்பு தெரிவிப்பு



(முல்லைத்தீவு) முல்லைத்தீவு மாவட்டத்தில் மகாவலி அதிகார சபையினால் மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று மாபெரும் கண்டனப் போராட்டம் நடைபெற்றது. இப்போராட்டத்தில் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் கலந்து கொண்டு தமது எதிர்ப்பினை வெளியிட்டிருந்தனர். (23-ம் பக்.)

## ஜனாதிபதி இன்று நேபாளம் பயணம்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்றையதினம் நேபாளத்திற்கு பயணமாகவுள்ளார்.

நேபாளம் தலைநகர் காத்மண்டுவில் இடம்பெறவுள்ள வங்காள விரிகுடா விளிம்பு நாடுகள் ஒத்துழைப்பு அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காகவே அங்கு பயணமாகின்றார். 23

## சர்வதேசத்தை ஏமாற்றவே காணாமல்போனோர் அலுவலகம்

### அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு

(யாழ்ப்பாணம்)

காணாமல்போனோரை கண்டறிவதற்கான அலுவலகம் மக்களின் நீதிக்கான கோரிக்கையை நிறைவேற்றுவதற்காக அமைக்கப்பட்டதல்ல என தெரிவித்துள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு, சர்வதேசத்தை ஏமாற்றுவதற்கே அமைக்கப்பட்டுள்ளது என்றும் அதனை சர்வதேசத்துக்கு எடுத்துக் காட்டுவதற்கும் நீதி கோரவும் நாளை இடம்பெறும் போராட்டத்தில் கலந்துகொள்ளுமாறு 23

## வடக்கில் குடிப்பரம்பலை மாற்ற சிங்கள தலைமைகள் நடவடிக்கை

### சித்தார்த்தன் எம்.பி குற்றச்சாட்டு



(பனிக்கன்குளம்)

இந்த நாடு சுதந்திரமடைந்த நாள் தொடக்கம் சிங்கள தலைமைகள் மிகத்தெளிவான கொள்கையுடன் வடகிழக்கில் இருக்கக்கூடிய தமிழ் மண்ணை முழுமையாக குடிப்பரம்பலை மாற்றவேண்டும் என்ற நோக்கத்துடன் செயற்பட்டு வருகின்றனர் என 23

## பிரதமர் ரணில் – அமெரிக்கத் துணை செயலாளர் சந்திப்பு



(வியட்நாம்)

பிரதமர் ரணில்விக்கிரமசிங்கவுக்கும் அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் 23

## ஆட்சேர்ப்பு பரீட்சையில் கைத்தொலைபேசி திடீர் சோதனையில் 8பேர் அகப்பட்டனர்

### கொழும்பில் இருந்து யாழ் வந்த விசேட குழு அதிரடி

(யாழ்ப்பாணம்)

தகவல் தொழில் நுட்பம் மற்றும் தொடர்பாடல் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சையில் கையடக்கத் தொலைபேசி வைத்திருந்தவர்களிடம் அவை பறிமுதல் செய்யப்பட்ட சம்பவம் நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடல் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை நேற்று நாடளாவிய ரீதியில் நடைபெற்றது.

இதன்போது கொழும்பிலிருந்து விசேட பரிசோதனைக்குழு ஒன்று யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்து, பரீட்சை மண்டபங்களுக்குச் சென்று பரீட்சார்த்திகளை சோதனையிட்ட போது 8பேர் கையடக்கத் தொலைபேசி வைத்திருந்தமை கண்டறியப்பட்டதுடன் அத்தொலைபேசிகள் பறிமுதல் செய்யப்பட்டு இரகசியப் பொதியில் சேர்க்கப்பட்டு சீல் வைக்கப்பட்டது. 23

## பொலிஸார் மீது இளைஞர்கள் தாக்குதல்

### மணியந்தோட்டத்தில் நேற்றிரவு சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மணியந்தோட்டம் பகுதியில் நடமாடும் சேவையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மீது இனம் தெரியாத நபர்கள் தாக்குதல் மேற்கொண்டதில் பொலி 24

## உழவு இயந்திரம் தடம்புரண்டு 23 வயது இளைஞர் உயிரிழப்பு

### கிளிநொச்சி ஊரியான் பகுதியில் சம்பவம்

(பரந்தன்)

கிளிநொச்சி ஊரியான் பகுதியில் உழவியந்திரம் தடம்புரண்டதில் ஊரியான் பகுதியை சேர்ந்த 23 வயதான சியாந் என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்

குறித்த சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

நேற்றுக் காலை 8.30 மணியளவில் மண் ஏற்றிச் சென்ற வேளை ஆறு ஒன்றில் இறங்கி ஏறிய போது தடம் புரண்டதில் உழவு இயந்திர சாரதியான குறித்த இளைஞர் உயிரிழந்துள்ளார்.

உடனடியாக அருகில் இருந்தவர்கள் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதித்த போதும் அவர் சம்பவ இடத்திலேயே 24

## காணி விடுவிப்பு தாமதிக்கலாம்

### மீள்குடியேற்றத்துறை தகவலில் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்திடம் போதிய நிதி இல்லாததன் காரணமாக, வடக்கு கிழக்கில் பாதுகாப்பு தரப்பிடம் இருக்கின்ற காணிகளை விடுவிக்கும் செயற்பாடுகள் மேலும் தாமதிக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

மீள்குடியேற்றத்துறை 23

## மாகாண சபைகள் தொடர்பான எல்லை நிர்ணய குழு சபாநாயகரால் நியமிப்பு

(கொழும்பு)

மாகாண சபைகளுக்கான எல்லை நிர்ணய அறிக்கை தொடர்பில் ஆராயும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐவர் குழுவில் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளையும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தக் குழு சபாநாயகர் கரு ஜயசூரியவால் நேற்று நியமிக்கப்பட்டது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை தலைவராகக் கொண்ட இந்தக் குழுவில் யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொன்.பால 24

# மக்களைக் குடியேற்றும் அதிகாரம் மகாவலி அதிகார சபைக்கு இல்லை

## மாவை சேனாதிராசா தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

மகாவலி அதிகார சபைக்கு நீர் வழங்குவதற்கு அதிகாரம் இருக்கலாம் ஆனால் மக்களை மீளக்குடியேற்றுவதற்கோ புதியவர்களை குடியேற்றுவதற்கோ இடமளிக்க முடியாது என இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

மகாவலி திட்டம் ஊடாக தமிழர்களின் பிரதேசங்களில் சிங்கள மக்களை கொண்டு வந்து குடியேற்றுவதற்கு அரசு நீண்டகாலமாகவே திட்டமிட்டு காமினி திஸநாயக்க அமைச்சராக இருந்தபோது வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்களில் அதன் ஆவணங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இந்த பிரச்சினை இன்று நேற்று ஆரம்பித்த விடயம் அல்ல. அமைச்சர் காமினி திஸநாயக்காவின் திட்டப்படி நாற்பதாயிரம் சிங்கள குடும்பங்களை முல்லைத்தீவில் குடியேற்றுவது தான். அந்த ஆவணம் எங்களிடம் இருக்கின்றது. ஒரு இலட்சம் ரூபா ஒவ்வொரு குடும்பத்திற்கும் கொடுக்கும் திட்டம் அந்த நாட்களில் எங்கள் தலைவர்கள் நடத்திய போராட்டங்கள் பேச்சுக்களினால் மூவாயிரம் குடும்பங்களுடன் அது நிறுத்தப்பட்டுள்ளது. அல்லது இந்த பிரதேசம் முழுக்க சிங்கள தேசமாக மாறி இருக்கும். இப்போது ஆறாயி ரம் சிங்கள மக்கள் குடியேறியுள்ளதாக அறிவித்துள்ளார்கள். இதுபற்றி ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாங்கள் குறிப்பிட்டுள்ளோம். இந்த விடயம் குறித்து ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியிடம் சம்பந்தனும் நானும் திட்டவட்டமாக சொன்னோம். நீர்ப்பாசனத்திற்காக நீரினை வழங்குவது பிரச்சினை இல்லை அதோடு தென்னிலங்கை மக்களை நீங்கள் குடியேற்றக் கூடாது என்று வாதாடி இருக்கின்றோம். அது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது.

சில நாட்களுக்கு முன்னர் மயிலிட்டியில் ஜனாதிபதிக்கு முன்னால மகாவலி பற்றி நான் பேசினேன். நேற்றும ஜனாதிபதி செயலகத்தில் நாங்கள் பேசினோம். நீங்கள் நடவடிக்கை எடுக்காமல் இருக்கின்றீர்கள் என்று பேசினோம். அவர் உடனடியாக மகாவலி சபை தலைவருடன் தொலைபேசியில் பேசினார். எங்களிடம் சொல்லி இருக்கின்றார் தான் நேரடியாகவே வந்து மகாவலி அபிவிருத்தி தலைவர்கள் சொல்லுவது சரியா அல்லது கூட்டமைப்பு நாங்கள் சொல்லுவது சரியா என்று பார்ப்பேன். அப்படி தவறுகள் இடம் பெற்று வெளியில் இருந்து குடியேற்றப்படுபவ ர்களை நான் தடுத்து நிறுத்துவேன் என்று நேற்றும் வாக்குறுதி தந்துள்ளார் அவர் இங்க வந்து பார்த்தால் பார்க்கட்டும்.

இன்று வடக்கில் படையினரால் மட்டு மல்ல பல அமைப்புக்களினால் நிலங்கள் அபகரிக்கப்படுகின்றது. முன் எப்போதும் இல்லாத அளவிற்கு இப்போது அமைப்புக்கள் வந்து தங்களுக்கு சொந்தமானது என்று அறிக்கை விடுகின்றார்கள். இதனை மாற்றி அமைக்க வேண்டும் மகாவலி சபைக்கு நீர் வழங்குவதற்கு அதிகாரம் இருக்கலாம் ஆனால மக்களை மீள குடியேற்றுவதற்கோ புதியவர்களை குடியேற்றுவதற்கோ இடமளிக்கக் கூடாது என்று நாங்கள் திட்டவட்டமாக சொல்லி வைக்கின்றோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-281)

# தேரர்களுக்கு விசேட நீதிமன்றம்

(கொழும்பு)

தேரர்களின் வழக்குகளை விசாரிக்க தனியான நீதிமன்றம் தேவை. அத்தோடு. பௌத்த நீதிமன்றத்தை நிறுவுவதற்காக சட்ட ரீதியான அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்றும் கோரி ராமாஞ்ஞ மகா பீடத்தினால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

நேற்று மாலை 3 மணியளவில் பௌத்தா லோக மாவத்தையில் அமைந்துள்ள விபஷண சாவனா மத்திய நிலையத்திலிருந்து அமைதிவழிப் பேரணியாக ஆரம்பித்த பௌத்த பிக்குகளின் பேரணி 4 மணியளவில் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தை அடைந்தது.

அதன்பின்னர் கோமல்பேர சோபித தேரர் தலைமையிலான குழு தனது கோரிக்கைகள அடங்கிய மகஜரை ஜனாதிபதியிடம் கையளித்தது.

இந்த பேரணியானது சுமார் 250 வரையிலான தேரர்களின் பங்கேற்புடன் இடம் பெற்றதுடன் தேரர்கள் மீதான வழக்குகளை விசாரணை செய்வதற்கென தனியான நீதிமன்ற கட்டமைப்பை உருவாக்க வேண்டும் எனக்கோரியும் அதற்கான சட்ட ரீதியான அதிகாரத்தை பெற்றுத்தர கோரும் வகையிலான பதாகையை ஏந்திய வண்ணம் அமைதிவழிப்பேரணி ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ இல்லத்தை அடைந்தது. (ம)


## PHARMACIST'S EXTERNAL EXAMINATION - 2018

இந்த வருடத்திற்கான மருந்தியலாளர் வெளிவாரி பரீட்சை 17.11.2018ஆம் திகதி நடைபெறும். இப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 13.09.2018ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.


14.10.2017ஆம் திகதிநடைபெற்ற சென்ற வருடத்திற்கான பரீட்சையில் இலங்கை முழுவதிலும் 288 பரீட்சார்த்திகள் சித்தியடைந்துள்ளார்கள். இவர்களில் வடக்கு. கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த எமது கல்லூரியில் பயின்ற 23 தமிழ் மாணவர்கள் அடங்குவர்.

- இப்பரீட்சைக்கான மீட்டல் வகுப்புகள் 01.09.2018ஆம் திகதி ஆரம்பமாகிறது.
- 2019 /2020ஆம் ஆண்டு பரீட்சைக்கான புதிய வகுப்புகள் 01.12.2018ஆம் திகதி ஆரம்பமாகும்.
- CERTIFICATE IN PHARMACY புதிய வகுப்புகள் (6 மாதகால கற்கைநெறி) 03.10.2018 ஆரம்பமாகும்.

மேற்படி பரீட்சைக்கான வகுப்புகள் நடைபெறும் இடம்:-Jaffna College ( Under Graduate Dept.), 464, Hospital Road, Jaffna. மேலதிகதொடர்புகள்:Nehru Sir :- 0776256292.

(5511)


## மரண அறிவித்தல்



### செல்லையா நடராசா (இளைப்பாறிய அதிபர்)

குப்பிளாணைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா நடராசா கடந்த (25.08.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா-ஆச்சிமுத்து தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை-இராசம்மா தம்பதிகளின் மூத்த மருமகனும், காலஞ்சென்ற நாகேஸ்வரியின் (இளைப்பாறிய ஆசிரியர்) அன்புக் கணவரும், காலஞ்சென்ற நிர்மலா மற்றும் நித்தியா, கலா, காலஞ்சென்ற கண்ணன் மற்றும் ராணி, கிருஷ்ணா, கோபு, லக்கி, முருகன், குமார், சிவஜனனி ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற சிறிதரன் மற்றும் தனபாலசுந்தரம், வாமதேவன், இராசகுலேந்திரன், ரஜனி, மாதங்கி, பிறேமதாஸ், கௌசி, பிரேமினி, அம்பிகைபாகன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கோபி (லண்டன்), சஞ்சீவன் (பிரதேச செயலகம்-கோப்பாய்), அரிகரன் (அரசாங்க மரக்கூட்டுத்தாபனம்), அபிராமி (பிரதேச சபை உறுப்பினர்-வலி.தெற்கு), கோபிகா (லண்டன்), சாரங்கா (லண்டன்), லாவண்யா (லண்டன்), அரவிந்தன், ஆரூரன் (பிரான்ஸ்), ஹரிஷ் (லண்டன்), மதுரா (அமெரிக்கா), அபிராஜி, லக்ஷிகா (சுவிஸ்), ஐங்கரன், ஆதிகஜன் (லண்டன்), ரிஷி (லண்டன்), கார்த்திகா (லண்டன்), ஆரணி (சுவிஸ்), ஆதித்தன் (கனடா), ஆரூரன் (கனடா), வேணுகோபால் (சுவிஸ்), அபினா (லண்டன்), அர்ச்சனா (லண்டன்) ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற முத்துச்சாமியின் சகோதரனும், காலஞ்சென்ற வள்ளியம்மை மற்றும் சிவகாமசுந்தரி, சீதாலக்சுமி, ஜெயலக்சுமியின் மைத்துனரும், தவமணி, கணேசலிங்கம், காலஞ்சென்ற பவளராணி மற்றும் நாகேஸ்வரி, நாதன் ஆகியோரின் சிறிய தந்தையும், ஜஸ்சு, அபிஷா, அபினா, சபரீஷ், சர்வின், ரிஷிகேஷ், சன்விக்கா, அபிஷா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (29.08.2018) புதன்கிழமை மு.ப 10.00 மணியளவில் குப்பிளான் ஞானபதி இல்லத்தில் நடைபெற்று பின்னர் குப்பிளான் காடாகடம்பை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சஞ்சீவன்:0776913253, அபிராமி:0773434657, ஐங்கரன்:0765473626**

**தகவல்:- பேரப்பிள்ளைகள்**

(5512)

## ஆத்மசாந்திக் கிரியை அழைப்பு



21.08.2018 அன்று இறைபதம் அடைந்த எமது தாயார்

**ஸ்ரீமதி நாகபூஷணி சோமசுந்தரக்குருக்கள்**

அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் திகதிகளில் இடம்பெறும்.

**30.08.2018-வியாழக்கிழமை- தசாகம்**

**31.08.2018-வெள்ளிக்கிழமை- ஏகோதிஷ்டம், மாசியம், சபிண்டீகரணம்**

**01.09.2018-சனிக்கிழமை கிரகயக்ஞம்**

இத் தினங்களில் நடைபெறும் எமது தாயாரின் ஆத்மசாந்திக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

"சோமராகம்"
323/8D கோவில் வீதி, நல்லூர்.

(சி-3672)

இவ்வண்ணம்:குடும்பத்தினர்

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

## கண்ணீர் அஞ்சலி

### சிற்பகாமணி ஸ்தபதி ஆறுமுகம் துரைராஜா



திருநெல்வேலி காளி கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும் எமது தேவஸ்தானத்தின் தேரினையும் மஞ்சத்தையும் உருவாக்குவதற்கு அளப்பரிய சேவை செய்து ஆலய வரலாற்றில் நீங்கா இடம்பிடித்த

**விஸ்வப் பிரம்மஸ்ரீ ஆறுமுகம் துரைராஜா**

ஆச்சாரியார் காலமானதையிட்டு அவர்களுக்கு வண்ணை குளம்கரை மருதடி ஸ்ரீகாமாட்சி அம்பாள் தேவஸ்தானம் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எல்லாம் வல்ல காமாட்சியின் அருள் கிடைக்க வேண்டுகின்றோம்.

**அன்னையின் சேவையில் தர்மகர்த்தா சபையினர்**

(சி-3668)

# தமிழனே விழித்திடு மகாவலியை எதிர்த்திடு!

## ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்றுதிரண்டு முல்லையில் நேற்று மாபெரும் போராட்டம்


























முல்லைத்தீவு மாவட்டத்தில் மகாவலி அதிகார சபையினால் மேற்கொள்ளப்படும் நில ஆக்கிரமிப்புக்கு எதிராக நேற்று முல்லையில் ஒன்றுகூடிய ஆயிரக்கணக்கான மக்கள் "தமிழனே விழித்திடு மகாவலியை எதிர்த்திடு" என்ற கோசத்துடன் மாபெரும் கண்டனப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். மகாவலி எதிர்ப்பு தமிழர் மரபுரிமை பேரவையின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இந்தக் கண்டனப் போராட்டமானது நேற்றுக்காலை முல்லைத்தீவு பி. டபிள்யூ.டீ சந்தியில் ஆரம்பித்து முல்லைத்தீவு நகர் ஊடாக பேரணியாக சென்று முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தை அடைந்தது. அங்கு முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரிடம் நில ஆக்கிரமிப்பு தொடர்பாக மகஜர் ஒன்றை கையளித்ததுடன், மாவட்டச் செயலகத்துக்கு எதிரே அமைந்துள்ள முல்லை. பொது விளையாட்டு மைதானத்தில் ஒன்றுகூடி தமது எதிர்ப்பினை வெளியிட்டனர். இதில் சிவில் சமூக அமைப்பின் பிரதிநிதிகள், மக்கள் பிரதி நிதிகள் கலந்து கொண்டு தமது கண்டன உரைகளை நிகழ்த்தியிருந்தனர். இந்த மாபெரும் போராட்டத்துக்கு வடக்கு கிழக்கிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டதுடன், மதகுருமார்கள், சிவில் அமைப்புக்கள், அரசியல் பிரமுகர்கள், பல்கலை. மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு தமது எதிர்ப்பினையும் கண்டனத்தையும் வெளியிட்டனர். (இ-2-9-281)

## புதுக்குடியிருப்பு அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி கோவில்

## மாபெரும் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பின் இறுதி முடிவுகள்

| | | |
|---|---|---|
| 1ம் பரிசு | 9253 | செல்வராணி |
| 2ம் பரிசு | 4561 | ராதிகா புடவையகம் |
| 3ம் பரிசு | 6970 | - |

| | | |
|---|---|---|
| 1ம் ஆறுதல் பரிசு | 5724 | - |
| 2ம் ஆறுதல் பரிசு | 3989 | - |
| 3ம் ஆறுதல் பரிசு | 6154 | - |
| 4ம் ஆறுதல் பரிசு | 4375 | நிறோகா 10ம் வட்டாரம் |
| 5ம் ஆறுதல் பரிசு | 866 | Top selection (PTK) |
| 6ம் ஆறுதல் பரிசு | 2170 | - |
| 7ம் ஆறுதல் பரிசு | 2751 | நாகரத்தினம் |
| 8ம் ஆறுதல் பரிசு | 1935 | விதுசன் |
| 9ம் ஆறுதல் பரிசு | 8380 | கஜவரதன் |
| 10ம் ஆறுதல் பரிசு | 2493 | Rock - Drilling Work |

**சைவ அறநெறிக் கழகம்**
புதுக்குடியிருப்பு
அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி கோவில்

(C-3671)


# மாறாத 'வெள்ளி' சிந்து

## இறுதியில் மீண்டும் சொதப்பல்



வெள்ளி வென்ற சிந்து (இடது) அருகில் வெண்கலம் வென்ற சகநாட்டு வீராங்கனை சாய்னா

இந்தோனேஷியாவில் 18ஆவது ஆசிய விளையாட்டு நடக்கிறது. இதன் பெண்கள் பட்மிண்டனில் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டி நேற்று நடந்தது.

இந்தியாவின் இளம் வீராங்கனை, 'நம்பர் 3' இடத்திலுள்ள சிந்து, உலகின் 'நம்பர் 1' வீராங்கனை சீன தைபேவின் தய் ஜு இங்கை எதிர்கொண்டார்.

இதற்கு முன் இருவரும் விளையாடிய 12 போட்டிகளில் 3ல்தான் சிந்து வெற்றி பெற்றிருந்தார். கடைசியாக விளையாடிய 5 போட்டிகளிலும் சிந்து தோற்றிருந்தார். இதனால்தானோ என்னவோ, மீண்டும் மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

இவர் முதல் செட்டை 13-21 என இழந்தார். தொடர்ந்து அடுத்த செட்டிலும் ஏமாற்றிய சிந்து 16-21 என நழுவவிட, ஆசிய விளையாட்டில் கைப்பற்ற வேண்டிய முதல் தங்கமும் கை நழுவியது. முடிவில் சிந்து 13-21, 16-21 என்ற நேர் செட்களில் வீழ்ந்தார்.

இருப்பினும் ஆசிய விளையாட்டு பட்மிண்டன் அரங்கில் தனிநபர் பிரிவில் முதன் முதலாக வெள்ளி வென்ற இந்திய நட்சத்திரம் ஆனார்.

**9** கடந்த 2016ல் ஹொங்கொங் ஓபன் இறுதியில் தோற்றார். அடுத்து ரியோ ஒலிம்பிக் (2016) இறுதியில் வீழ்ந்தார். பின், உலக சம்பியன்ஷிப் (2017, 2018), கொமன்வெல்த், தற்போது ஆசிய விளையாட்டு என இவர் விளையாடிய 14 இறுதிகளில் 9ஆவது முறையாக தோற்றுள்ளார்.

## ஹலெப் அதிர்ச்சி



யு.எஸ் ஓபனில் 'நம்பர் 1' வீராங்கனை ருமேனியாவின் சிமோனா ஹலெப், தரவரிசையில் 44ஆவது இடத்திலுள்ள எஸ்டோனியாவின் கனேபியை சந்தித்தார்.

முதல் செட்டை 2-6 என இழந்த ஹலெப், அடுத்த செட்டையும் 4-6 என பறி கொடுத்தார். முடிவில், ஹலெப் 2-6, 4-6 என வீழ்ந்தார்.

யு.எஸ்., ஓபன் வரலாற்றில் 'நம்பர் 1' வீராங்கனை முதல் சுற்றில் தோற்றது இதுவே முதல் முறை. மற்றைய போட்டிகளில் வீனஸ் வில்லியம்ஸ் (அமெரிக்கா), முகுருஷா (ஸ்பெயின்) வெற்றி பெற்றனர்.


# மாவட்டச் செயலகம், கிளிநொச்சி

## குடிசார் வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்டச் செயலாளரினால் பின்வரும் விபரங்களைக் கொண்ட குடிசார் வேலைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

| இல | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்த பெயர் | மதிப்பீட்டுத் தொகை | வேண்டப்படும் ICTAD தரம்/ பதிவு | கேள்விப் பிணைப் பணம் செல்லுபடியாகும் காலம் | மீளளிக்கப் படாத கட்டணம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | KN/EB/11/ Con/Pro/24 | உருத்திரபுரம் கமநல சேவைகள் நிலையத்திற்கு உட்பட்ட ஊற்றுப் புலம்குளம் புனரமைத்தல் | 19.9 மில்லியன் (வரி நீங்கலாக) | C6 or C5 Building | ரூபா 200.000.00 வங்கிப் பிணை 26.12.2018வரை | ரூபா 3500.00 |
| 2 | KN/EB/11/ Con/Pro/25 | கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்க மூன்றுமாடி வர்த்தக கட்டடம் நிர்மாணம் | 6.7 மில்லியன் (வரி நீங்கலாக) | C7 Irrigation and Drainage Canals | ரூபா 67,000.00 வங்கிப் பிணை 26.12.2018வரை | ரூபா 3500.00 |

1. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்ததாரர்களும் கேள்வி கோருவதற்கு தகுதியுடையவராவர்.
   I. நிர்மாணப்பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தால் இக்ராட் (ICTAD/CIDA) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்ததாரரை பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்ததாரர் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.
   II. இக்ராட் (ICTAD/CIDA) வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்தங்களை மேற்கொண்ட ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டும்.
   III. நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 04/2016 (i) இலக்க 16.03.2016ஆம் திகதிய நிதிச் சுற்றறிக்கைக்கு அமைவாக வடக்கு மாகாணத்தைச் சார்ந்தவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.
   IV. ஒப்பந்ததாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்திறனுக்கு உட்பட்டு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் இருக்கக்கூடாது.
2. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த கேள்விதாரர்கள் கேள்விகள் தொடர்பான மேலதிக தகவல்களை கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக் கிளையில் பெற்றுக் கொள்ளலாம். (தொ.பே.இல:-0212285357, பக்ஸ் இல:-0212283966)
3. கேள்வி ஆவணங்களை 30.08.2018ஆம் திகதியிலிருந்து 12.09.2018ஆம் திகதிவரை முற்பகல் 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணிவரை வேலைநாட்களில் கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக் கிளையில் பெற்றுக் கொள்ளலாம்.
4. இரு அரக்கு முத்திரை இடப்பட்ட உறைகளில் (மூலப்பிரதி, பிரதி) தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும், கேள்வி கோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் அது தொடர்பாக பந்தி 5இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஒப்படைத்தல் வேண்டும்.
5. அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாவும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "KN/EB/11/Con/Pro....." என ஒப்பந்த இலக்கம் குறிப்பிடப்பட்டு தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, மாவட்டச் செயலகம், கிளிநொச்சி எனும் விலாசத்திற்கு 13.09.2018ஆம் திகதி பிற்பகல் 02.00 மணிக்குமுன் கிடைக்கப் பெறல் வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.
6. கேள்விகள் தயாரிப்பு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாகமாட்டார்.
7. கேள்வி தொடர்பான முதற்கூட்டம் (Pre bid meeting) 07.09.2018ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.
8. தாமதமாக கிடைக்கும் விலையிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**சுந்தரம் அருமைநாயகம்,**
திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரும்,
அரசாங்க அதிபர் /மாவட்டச் செயலாளர்,
கிளிநொச்சி மாவட்டம்.

(C-3670)

## மகாவலி அபிவிருத்தித்திட்டம் குறித்து யாழ்.பல்கலையில் இன்று கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

"இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் மகாவலி அபிவிருத்தித் திட்டம் தொடர்பாகவும் அதனால் முல்லைத்தீவு மக்கள் எதிர்கொள்ளவிருக்கும் சவால்கள் தொடர்பிலும்" யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்ட மாணவர் சங்கம் கருத்தரங்கு ஒன்றினை இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழகத்தின் கலைப்பீட 207 ஆம் இலக்க விரிவுரை மண்டபத்தில் நடத்துகிறது.

இதில் பேச்சாளர்களாக, சட்டத்துறைத் தலைவர் குமார வடிவேல் குருபரன், தமிழர் மரபுப் பேரவையின் இணைத் தலைவர் நவநீதன் மற்றும் சட்டத்துறை மாணவர் தனஞ்சயன் ஆகியோர் பங்கேற்பர். (இ)

## 30 இலட்சம் ரூபாய் பெறுமதியான வனப்பகுதிகள் 6 மாதத்தில் அழிப்பு

(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த ஆறு மாதங்களில் சுமார் 30 இலட்சம் ரூபா பெறுமதியான வனப் பகுதிகள் அழிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட வன அதிகாரி டபிள்யூ எம்.எச்.விஜயரட்ண தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரச வனங்களிலிருந்து சட்ட விரோதமாக மரங்களை வெட்டியமை தொடர்பாக 45 குற்றங்கள் பதிவாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரியபுல்லுமலை மற்றும் வாழைச்சேனை ஆகிய வன வட்டார அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் போது இந்தக் குற்றச் செயல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அதன்படி குற்றச் செயல்களில் ஈடுபட்ட சந்தேகத்தின் பேரில் 20 பேர் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தாா்.

மட்டக்களப்பு வன வட்டாரப் பிரிவில் 18 குற்றங்களில் 13 சந்தேக நபர்களும் பெரியபுல்லுமலை வன வட்டாரப் பிரிவில் 18 குற்றங்களில் 3 சந்தேக நபர்களும்வாழைச்சேனை வன வட்டாரப் பிரிவில் 9 குற்றங்களில் 4 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் அந்த அதிகாரிமேலும் தெரிவித்தார்.(இ-7)

## வைத்திய நிபுணர் நியமனம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத் தியசாலைக்கு பொது வைத்திய நிபுணராக தென் பகுதியைச் சேர்ந்த வைத்தியர் சிஹான் என்பவர் மத்திய சுகாதார அமைச்சினால் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் தனது கடமைகளை கடந்த 20 ஆம் திகதி பொறுப் பேற்றுக் கொண்டுள்ளார்.

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலைக்கு அண்மையில் மத்திய சுகாதார அமைச்சர் ராஜித விஜயம் செய்த நிலையில் இந்த பொது வைத்திய நிபுணர் நியமனம் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலைக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. கடந்த மாதம் சாவகச் சேரி ஆதார வைத்தியசாலையில் சட்ட வைத்திய அதி காரி, குழந்தை வைத்தியர், சத்திர சிகிச்சை நிபுணர் ஆகியோர் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்ட மையும் குறிப்பிடத்தக்கது.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அண்மையில் திறந்து வைக்கப்பட்ட இரத்த சுத்திகரிப்பு நிலையம், இவ்வருட இறுதியில் திறந்து வைக் கப்படவுள்ள விபத்து தீவிர சிகிச்சைப் பிரிவு ஆகியவற்றுக்கான வைத்தியர், தாதி யர் உள்ளிட்ட ஆளணி பற் றாக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு வைத்தியசாலை அத்தியட்சகர் ப.அச்சுதன் தொடர்ந்து மத்திய சுகாதார அமைச்சிடம் கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அதன் பயனாக வைத்தியசாலையின் ஆளணி பற்றாக்குறை சிறுது சிறிதாக நிவர்த்தி செய்யப்பட்டு வருகின்றது. (இ-30)

## இலங்கைக்கான ஜப்பான் தூதுவராக அகிரா நியமனம்

(கொழும்பு)

இலங்கைக்கான புதிய ஜப்பான் தூதுவராக அகிரா சுகியாமா நியமிக்கப்பட்டுள்ளார்.ஜப்பான் அரசாங்கத்தின் அமைச்சரவைக் கூட்டத்தின் போதே புதிய தூதுவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அகிரா சுகியாமா, நியூயோர்க்கில் ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தரப் பணிக்கான அமைச்சராகவும் வெளியுறவுத்துறை அமைச்சின் நெறி முறைத் தலைவராகவும் முன்னர் பணியாற்றியவராவார். (இ-7)

## மரண அறிவித்தல்



### திருமதி பத்மலோசினிதேவி மகேசன்


இடைக்காடு அச்சுவேலியைச் சேர்ந்த திரு.இளையதம்பி மகேசன் (ஓய்வுநிலை பொறியியலாளர், சீமெந்து கூட்டுத்தாபனம்) அவர்களின் பாசமிகு மனைவி பத்மலோசினிதேவி 27.08.2018 அன்று காலமானார். அவர் அமரர்கள் பண்டிதர் சின்னத்துரை பாக்கியம் தம்பதியரின் மகளும், அமரர்கள் இளையதம்பி செல்லம்மா தம்பதியரின் மருமகளும் வாசவன் (அவுஸ்திரேலியா), மகிபன் (கனடா), ரமேஸ் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், யசோதா, கல்பனா, தர்சிகா ஆகியோரின் அன்பு மாமியும், ஜனனி, கண்ணன், அபிஷேக், அர்ஜீன், அனோக்ஷா, தர்சிகா, அபிராமி ஆகியோரின் அன்புப் பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 30.08.2018 நாளை வியாழக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவர்களின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக இடைக்காடு சாமித்திடல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (சி-3662)

இடைக்காடு, அச்சுவேலி. தொ.பே:021 223 1637

தகவல்: இ.மகேசன்-கணவர்

## கண்ணீர் அஞ்சலி



அமரர். **இரத்தினம் கந்தசாமி**

எமது கல்லூரியின் பிரதி அதிபர் திரு. S.செந்தில்குமரன் அவர்களின் அன்பு மாமனார் அமரர் திரு.இ.கந்தசாமி அவர்களின் மறைவையிட்டு அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(3505)

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி.


BRITISH COLLEGE OF ENGLISH

IELTS Academic + General
IELTS Life Skills

Cambridge English Courses
- Cambridge Preliminary Test (PET) (B1)
- Cambridge First Certificate in English (FCE) (B2)
- Cambridge Advanced English (CAE) (C1)

- 2004 ஆம் ஆண்டு எமது கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்து இதுவரை சுமார் 5000 மாணவர்கள் IELTS இல் சித்தியடைந்து UK, Australia, Canada, USA போன்ற நாடுகளில் நிரந்தரமாக வசித்து வருகின்றனர்.
- A1, பரீட்சையில் சுமார் 750 இற்கு மேல் City & Guilds மற்றும் IELTS - Life Skills பரீட்சையில் நமது நாட்டு இல்லத்தரசிகள் சித்தியடைந்து UK ல் வசித்து வருகின்றனர்.

University of Cambridge Certificate வாழ்நாள் முழுவதும் பயன்படுத்தக்கூடியவை. F.C.E - CAE இல் சித்தியடைந்திருந்தால் IELTS ற்குப் பதிலாக அவற்றை உலகத்தின் பல பல்கலைக்கழகங்களுக்கு பயன்படுத்தலாம்.

வகுப்புக்கள் நடைபெறும் இடம்
JAFFNA COLLEGE UNDERGRADUATE DEPARTMENT
NO.464, Hospital Road, Jaffna. 021 222 0384 077 880 3887


## இராசி பலன்

**மேடம்:** வழக்கத்தைவிட கூடுதல் நேரம் பணிபுரியும் நிலை ஏற்படலாம், பொழுது போக்கு விடயங்களில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், சுப செலவுகள் ஏற்படலாம்.

**இடபம்:** மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், பொதுவாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**மிதுனம்:** கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், அரசு வழியில் அனுகூலமுண்டு, தொழில் மேன்மையுண்டு.

**கடகம்:** மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வம்பு வழங்குகளைச் சமாளித்து வளம் காண்பீர்கள்.

**சிம்மம்:** உறவினர்களின் மனக் கசப்பிற்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது, வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், ரோக பயமுண்டு.

**கன்னி:** மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, காரிய அனுகூலமுண்டு, நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**துலாம்:** நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தலைமைப் பதவிகள் உங்களைத் தேடி வரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையலாம்.

**விருச்சிகம்:** பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் இடம்பெறலாம், மகிழ்ச்சி கூடும் நாள், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**தனுசு:** பாசம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், மனதில் இனம்புரியாத சந்தோசம் கிடைக்கும், தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள்.

**மகரம்:** தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் கிடைக்கும், வருமானம் திருப்திதரும்.

**கும்பம்:** நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த கவலைகள் தீரும், கோரிக்கைகள் நிறைவேறும். நாள்.

**மீனம்:** பக்குவமாக நடந்து பாராட்டு பெறும் நாள், திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், புதியவர்களின் நட்பு கிடைக்கும்.

கிரகநிலை: சந் | புத, ராகு | சூரி | சுக் | குரு | சனி | செவ், கேது

சந்திராஷ்டமம்: பூரம், உத்தரம்

29.08.2018
ஆவணி 13, புதன்கிழமை
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
திருதியை முன்னிரவு 8.38 மணிவரை
உத்திரட்டாதி முன்னிரவு 6.46 மணிவரை
சுபநேரம் 4.35-6.05 மணிவரை
இராகுகாலம் 12.05-1.35 மணிவரை

வளவன்

### சர்வதேச தினத்தை முன்னிட்டு

# காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதிகோரி யாழ்.செயலகம் முன் நாளை மாபெரும் பேரணி

(கரணவாய்)

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட செயலகம் முன்பாக மாபெரும் பேரணி மேற்கொள்ளப் படவுள்ளது. யாழ்.மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடும் குடும்பங்களின் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தப் பேரணி நாளை வியாழக்கிழமை மேற்கொள்ளப்படவுள்ளது.

நாளை வியாழக்கிழமை (ஓகஸ்ட்- 30) சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினமாகும்.

இதனை முன்னிட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான தீர்க்கமான முடிவை வேண்டி இப் பேரணி இடம்பெறவுள்ளது.

காணாமல் போன உறவுகளைத் தேடியலையும் இக் குடும்பங்களின் அவலத்தைக் கருத்திற் கொண்டு யாழ். மாவட்டம் உள்ளிட்ட ஏனைய மாவட்டங்களிலும் காணாமல் போன உறவுகளின் குடும்ப உறவுகள் இப் பேரணியில் கலந்து கொண்டு வலுச் சேர்ப்பதுடன், இதை சர்வதேச சமூகத்தின் கவனத்திற்கு கொண்டுவர ஒத்துழைக்குமாறும் யாழ்.மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடும் குடும்பங்களின் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.(இ-60)

## உத்தியோகத்தர்கள், மாணவர்கள் கௌரவிப்பு









(யாழ்ப்பாணம்)

சமூகவலுவூட்டல் நலன் புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சின் கீழுள்ள இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் கல்வி காப்புறுதி திட்டத்தில் இணைந்து கொண்டுள்ள யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான புலமைப் பரிசில் மற்றும் உத்தியோகத்தர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் யாழ். மாவட்டத்தில் மேற்குறித்த புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் ஐந்து ஏ சித்திகளை பெற்ற 90 மாணவர்களுக்கு 5 ஆயிரம் தொடக்கம் 50 ஆயிரம் ரூபா வரையில் புலமைப்பரிசில் வழங்கப்பட்டது. அத்துடன் சணச அபிவிருத்தி வங்கியூடாக கல்வி உபகரணங்கள் மற்றும் கொள்வனவு கூப்பன்கள் என்பனவும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

அத்துடன் தேசிய பாதுகாப்பு சபையின் காப்புறுதி திட்டத்தை சரியான முறையில் செயற்படுத்திய 67 அரச உத்தியோகத்தர்களுக்கு நினைவுப் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன், கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக இலங்கை பாது காப்பு சபையின் பொது முகாமையாளர் திருமதி பி.எச். கே.டி.சில்வா கலந்துகொண்டதுடன் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், தேசிய பாதுகாப்பு சபையின் பணிப்பாளர் தர்மலிங்கம் புஸ்கரன் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ-9-101)

## மரக்கன்று நாட்டல்



(கரணவாய்)

நடமாடும் சேவையை முன்னிட்டு மருதங்கேணி பிரதேச செயலகத்தில் மரக்கன்றுகள் நாட்டப்பட்டன.

ஜனாதிபதி செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நடமாடும் சேவை நேற்று முன்தினம் திங்கட்கிழமை மருதங்கேணி பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

நடமாடும் சேவையினை முன்னிட்டு பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் மரக்கன்றை நாட்டினார். (இ-60)

## சங்கடஹர கணபதி விரதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நாளை 30 ஆம் திகதி சங்கடஹர கணபதிவிரத பூசை நடைபெறும்.மாலை 4.30 மணியளவில்மூலமூர்த்தி பூஜை வசந்த மண்டபப் பூசை நடைபெற்று விநாயகர் பெருமான் வீதிவலம் வருவார். (இ)

## 10 ஆவது ஆண்டு பரிசளிப்பு

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி ரவீன்ஸ் EMC கல்வி நிறுவனத்தில் க.பொ. த.சாதாரண தர மாணவர்கள் பங்கு பற்றும் முன் ஆயத்தமில்லா ஆங்கிலப் பேச்சும் 10 ஆவது ஆண்டு பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 2 ஆம் திகதிஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் அல்வாய் மாலைசந்தை ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலய திருமண மண்டபத்தில் ரவீன்ஸ் EMC நிர்வாகி ப.ஈஸ்வரநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கணக்கியல்துறைப் பேராசிரியர் பி.நிர்மலதாசன் கலந்து கொள்வார். பரிசில்களை திருமதி தாரணி நிர்மலதாசன் வழங்குவார். (இ-60)




## கொடிகாமம்-பருத்தித்துறை வீதி எப்போது காப்பெற் வீதியாகும்?

*08.06.2018 ஆம் திகதிய வலம்புரி குறைகேள் அரங்குப் பகுதியில் கொடிகாமம்-பருத்தித்துறை வீதி எப்பொழுது காப்பெற் வீதியாகும் எனும் பொதுமக்கள் கேள்விக்கு 21.06.2018 ஆம் திகதிய வலம்புரி பதிப்பில் மேலதிக திட்டப்பணிப்பாளர் (யாழ். மாவட்ட மூலோபாய நகர அபிவிருத்தி திட்டம்) மகிழ்ச்சிகரமான செய்தியை வெளியிட்டிருந்தார். அதாவது ஜூலை மாதம் இறுதியில் வேலைகள் ஆரம்பிக்க முடியும் எனத் தெரிவித்திருந்தார். உண்மையிலேயே தென்மராட்சி மக்களுக்கு இது மகிழ்ச்சிகரமான செய்தி தான்.*

*ஏனெனில் இராணுவ ஆக்கிரமிப்பின் பின் வடமாகாணத்தில் உள்ள பெருந்தெருக்கள் தொடக்கம் சிறுவீதிகள் வரையான அனைத்து வீதிகளின் வேலைகளும் பல இடங்களில் முடிவடைந்த நிலையிலும் சில இடங்களில் வேலைகள் நடைபெற்றுக் கொண்டும் இருக்கின்றன. ஆனால், எமது வீதி மட்டும் பலகாலங்களாக குன்றும் குழியுமாக காணப்படுகின்றன.*

*தற்பொழுதும் வீதியின் சில சில இடங்களில் ஒட்டுவேலைகள் போன்று ஆங்காங்கே தார்கற்களை கொண்டுவந்து ஒட்டிக்கொண்டிருக்கின்றனர். இது வீதியினை இன்னும் சீரின்மை ஆக்குகின்றது. மேலதிக திட்டப் பணிப்பாளர் அவர்களே ஜூலை மாதம் முடிவடைந்து ஓகஸ்ட் மாதமும் முடிவடையும் நிலையில் உள்ளது.*

*தாங்கள் மனமுவந்து எமது வீதியை மக்கள் பாவனைக்கு ஏற்ற வீதியாக மிக விரைவாக புனரமைக்க மாட்டீர்களா?*

**பொதுமக்கள் சார்பில்**
**தணிகை**

## ஞான சம்பந்தர் கலைமன்ற 56 ஆவது ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

புலோலி கிழக்கு ஞான சம்பந்தர் கலைமன்றத்தின் 56ஆவது ஆண்டு விழா எதிர்வரும் 8ஆம் திகதி சனிக்கிழமை 8.30 மணியளவில் மன்ற அரங்கில் மன்றத் தலைவர் செ. சுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெறும்

இதில் பிரதம விருந்தினராக கொழும்பு பல்கலைக் கழக முன்னாள் சட்ட பீடாதிபதியும் கொழும்பு பல்கலைக்கழக சிரேஷ்ட சட்ட விரிவுரையாளரும் சட்ட ஆலோசகருமான நாகநாதன் செல்வக்குமாரன் கலந்து கொள்வார். (இ)

# இலங்கை இராணுவத்தினரை அழைத்து இனப்படுகொலை குறித்து விசாரணை!

## ஐ.நாவுக்கு அரசு சாதகமான சூழலை ஏற்படுத்துகிறது என்கிறார் சரத் வீரசேகர



(கொழும்பு)

மியன்மாரின் உயர்மட்ட இராணுவத் தலைவர்களுக்கு எதிராக இனப்படு கொலை விசாரணையை முன்னெடுக்க ஐ.நா. அழைத்துள்ளதை போன்று இலங்கைக்கும் ஏற்படும். இதற்கான வழிமுறைகளை அரசாங்கமே ஏற்படுத்திக் கொடுக்கும் என தெரிவித்த முன்னாள் பிரதியமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர, மேற்குலக நாடுகள் இலங்கைக்கு எதிராக முன்வைத்த குற்றச்சாட்டுக்களை நிராகரிக்கும் எவ்வித முன்னேற்றகரமான நடவடிக்கைகளையும் அரசாங்கம் இதுவரையில் மேற்கொள்ளவில்லை எனவும் தெரிவித்தார்.

"மியன்மாரின் உயர்மட்ட இராணுவத் தலைவர்களுக்கு எதிராக இனப்படுகொலை குற்றச்சாட்டினை விசாரிக்க ஐ.நா. அழைத்துள்ளமையானது எமது நாட்டிற்கும் எச்சரிக்கை விடுப்பதாகவே காணப்படுகின்றது. இலங்கையில் இறுதி யுத்தத்தின் போது போர்க் குற்றங்கள் இடம்பெற்றதாகவும் இனப்படுகொலை இடம்பெற்றதாகவும் பொய்யாக குற்றச்சாட்டுக்களை மேற்குலக நாடுகளும் புலம்பெயர் அமைப்புக்களும் முன் வைத்தன.

அடுத்த மாதம் ஐ.நா. சபையில் இடம்பெறவுள்ள மனித உரிமை கூட்டத் தொடரில் இலங்கை பாரிய எதிர்ப்புக்களை சந்திக்க நேரிடும். மேற்குலக நாடுகள் எமக்கு எதிராக பாரிய அழுத்தங்களை பிரயோகிக்கத் தயாராகவே உள்ளன. ஆனால் உள்ளக அறிக்கையினை மேற்கொள்வதாக குறிப்பிட்ட அரசாங்கம் எவ்வித முன்னேற்றகரமான நடவடிக்கைகளையும் இதுவரையில் மேற்கொள்ளவில்லை.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர அரசாங்கத்தின் எவ்வித அனுமதியும் இன்றி ஐ.நாவின் கருத்துக்களுக்கு சம்மதம் தெரிவித்தமையே பாரிய பிரச்சினைகளை தோற்றுவித்துள்ளது. கடந்த காலங்களில் இடம்பெற்ற மனித உரிமை கூட்டத் தொடரில் இலங்கைக்கு சாதகமாக சில அரச சார்பற்ற அமைப்புக்களும் இயக்கங்களும் மாத்திரமே குரல் கொடுத்தன. அரசாங்கம் எவ்வித பொறுப்பும் இல்லாமல் செயற்பட்டது.

ஐ. நா.அரசாங்கத்திற்கு வழங்கிய கால அவகாசம் நிறைவுறும் தறுவாயிலே காணப்படுகின்றது. இலங்கைக்கு விஜயம் செய்யும் பிரதிநிதிகளிடம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர். சர்வதேச விசாரணையினையே கோருகின்றனர்.

ஆகவே, இவ்விடயத்தில் அரசாங்கம் மந்தகரமாக செயற்பட்டால் மியன்மார் நாட்டு இராணுவ அதிகாரிகளுக்கு ஏற்பட்ட நிலைமை, நாளை எமது நாட்டு இராணுவத்தினருக்கும் ஏற்படும்" என சரத் வீரசேகர எச்சரித்துள்ளார். (இ-7)

## யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை நடத்தும் 96 ஆவது சர்வதேச கூட்டுறவுதினவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கூட்டுறவுச்சபை நடத்தும் 96 ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழா யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் எதிர்வரும் 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ்.மாவட்ட கூட்டுறவு சபைத் தலைவர் தி.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ.வாகீசன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் எ.ஜெயசீத், யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.மோகன் ஆகியோர் கலந்து கொள்வர்.

கௌரவ விருந்தினர்களாக யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் வீ.கே. அருந்தவநாதன், வடமாகாண பனை, தென்னைவள அபிவிருத்திச் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் வ.தெய்வேந்திரம், யாழ்.மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசத் தலைவர் செ.செல்வராசா, யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் வே.தவச்செல்வம், யாழ். மாவட்ட கால்நடை வளர்ப்போர்கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் க.மகாதேவன், யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவு சங்கங்களின் சமாசத் தலைவர் ப.கேசவதாசன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ)


குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



**மனைவி நலவேட்பு நாள்**

*"தாய்க்கோர் தாய்மையாய் தந்தைக்கோர் சிந்தையாய் கருவைப்புறம் தந்து அன்னையாகி துணைவனை அகம் ஏந்தி தாரமாகி நிற்பதை உணர்த்திய அருளாசான் வேதாத்திரி மகரிஷி அவர்கள் வழிவந்த திருநாளாம் மனைவி நல வேட்பு நாள் இன்று"*

காலம்:- 30.08.2018 நேரம்:- பிற்பகல் 5.00 மணி

இடம்:- அறிவுத்திருக்கோவில், யாழ்ப்பாணம்.

தலைமை:- மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி சி.முருகானந்தவேல் அவர்கள் (தலைவர், யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை)

பிரதம தம்பதியினர்:- திரு.திருமதி ஐ.தயானந்தராஜா (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர்)

**நிகழ்ச்சி நிரல்**

- இறைவணக்கம், குருவணக்கம், தவம்
- சிறப்பு தம்பதியினர் அறிமுகம்
- வரவேற்புரை: மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி வே.பாஸ்கரன் அவர்கள் (பொருளாளர், யாழ் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை)
- தலைமை உரை: மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி சி.முருகானந்தவேல் அவர்கள் (தலைவர், யாழ் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை)
- அறிமுக உரையும் காந்த பரிமாற்ற நிகழ்வும் மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி உழவன் முத்துவேல் அவர்கள் (தமிழ்நாடு, இந்தியா)
- பிரதம தம்பதியினர் உரை: திரு. திருமதி ஐ. தயானந்தராஜா அவர்கள் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர்)
- அனுபவ உரை
- நன்றியுரை: துணைப்பேராசிரியர் த.நந்தகுமாரன் அவர்கள் (செயலாளர், யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை)

எவ்வுயிரும் தோன்றுதற்கு ஏற்றதொரு திருவழியாய் வல்லமையாய் பெண்ணினத்தை வடிவமைத்த நிகழ்விற்கு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இத்துடன் தொடர்ந்து பயிற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதையும் அறியத் தருகின்றோம்.

அகத்தாய்வு 1ம் நிலை 01.09.2018 சனி மற்றும் 02.09.2018 ஞாயிறு ஆகிய தினங்களில் காலை 9.00 மணிக்கு நடைபெறும்.

யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவில் இல.81, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. இல. 021 222 2772


### வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்காக

## அம்பாறையில் நடைபெறவுள்ள கவனயீர்ப்பு போராட்டத்தில் ஒன்றிணையுமாறு அழைப்பு

(திருக்கோவில்)

நாளை 30ஆம் திகதி அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவிலில் நடைபெறவுள்ள சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தின கவனயீர்ப்புப் போராட்டத்தில் அனைத்து உறவுகளையும் ஒன்றிணையுமாறு அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவி தம்பிராசா செல்வராணி அழைப்பு விடுத்துள்ளார். சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தின கவனயீர்ப்புப் போராட்டம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இம்முறை, காணாமல் ஆக்கப்படுவதற்கு இடமளியோம் என்ற தொனிப்பொருளில் இது தொடர்பிலான நிகழ்வுகள் சர்வதேச ரீதியில் நடைபெறவுள்ளன.

ஆனால் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விசாரணைகளுக்கு யுத்தம் முடிவடைந்து இவ்வளவு காலமாகவும் தீர்வுகள் கிடைக்கவில்லை.

அதுமட்டுமன்றி அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டிருக்கின்ற காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகத்தின் செயற்பாடுகள் அனைத்தும் போலியான முறையிலேயே நடைபெறுகின்றன. இதனால் நாம் அந்த அலுவலகத்தை முற்று முழுதாக புறக்கணிக்கின்றோம்.

அத்துடன் நாளை 30 ஆம் திகதி அம்பாறை மாவட்ட தம்பிலுவில் மத்திய கல்லூரிக்கு முன்னால் நடைபெறவிருக்கும் சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தின கவனயீர்ப்பு போராட்டத்தில் அனைத்து உறவுகளும் ஒன்றிணைய வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## இந்தியப் பெருங்கடலில் அமைதியை உருவாக்க வியட்நாம் அரசு விருப்பம்



(வியன்னா)

இந்தியப் பெருங்கடலை அமைதியானதும் செழிப்பானதுமாக உருவாக்க வேண்டும் என, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம், வியட்நாமின் துணை பிரதமர் பாம் பின் மின் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்தியப் பெருங்கடல் கருத்தரங்கில் கலந்து கொண்டிருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வியட்நாமின் துணைப் பிரதமர் பாம் பின் மின்னைச் சந்தித்து கலந்துரையாடியபோதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பின்போது, இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகத்தை மேலும் வலுப்படுத்தவும் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி எதிர்வரும் 2020 ஆம் ஆண்டில் இரு நாடுகளுக்கிடையிலான வர்த்தகத்தை ஒரு பில்லியன் டொலராக அதிகரிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# மணலாறு மண் பறிபோனால் தமிழர் தேசம் பறிபோனதற்கு சமன்

## தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி தலைவர் தெரிவிப்பு



(பனிக்கன்குளம்)

**மணலாறு மண் பறிபோனால் தமிழர் தேசம் பறிபோனதற்கு சமன் என தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.**

முல்லைத்தீவில் மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் பெயரில் மேற்கொள்ளப்பட்டு வரும் சிங்களக்குடியேற்றங்களை தடுத்து நிறுத்தக் கோரி நேற்று முற்பகல் 11 மணியளவில் முல்லைத்தீவில் மாபெரும் கண்டனப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இப் போராட்டத்தில் பங்கு பற்றி உரையாற்றி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் மகிந்த ராஜபக்ஷ தான் தமிழ் இன அழிப்பை செய்கின்றார். அவருடைய ஆட்சியினை விழுத்தினால் தமிழ்மக்களுக்கு ஒரு அரசியல்தீர்வு கிடைக்கும்என்பதை மட்டுமல்ல பொறுப்புக்கூறலும் நிச்சயமாக கிடைக்கும். ஒரு சர்வதேச விசாரணை கூட கிட்டும் என்று மக்களை நம்பவைத்து இந்த ஆட்சியை மாற்றியதன் பிற்பாடு இன்று இந்த நல்லாட்சி என்று எம்மவர்கள் கூறிய தன் பின்பும் இன அழிப்பின் முக்கியமான அங்கம் நிலப் பறிப்பு இப்போதும் நடை பெற்றுக்கொண்டிருக்கின்றது.

இவ்வாறு இருந்தால் எம்மக்கள் ஆழமாக சிந்திக்க தொடங்கவேண்டும். இது ஒரு ஆட்சி சம்பந்தப் பட்ட விடயமா? அல்லது இனஅழிப்பு சம்பந்தப்பட்ட விடயமா? இது ஒரு இன அழிப்பு சம்பந்தப்பட்ட விடயமாக இருந்தால் ஒரு ஆட்சியை விழுத்தினால் புதிய ஆட்சி வந்தால் இன அழிப்பை தடுக்கலாமா? என்று நாங்கள் கேள்வி எழுப்ப வேண்டும். ஒரு ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் எமக்கு நன்மை கிடைக்கும் என்று நம்பி இன்று நடுத்தெருவில் நிற்கின்றோம்.

அப்படியாக இருந்தால் இந்த ஏமாற்றத்திற்கு தொடர்ச்சியாக நடைபெறும் இன அழிப்பிற்கு பின்னால் இருக்கக்கூடிய தத்துவத்தை அந்த கொள்கையினை நாங்கள் சரியாக விளங்கிக் கொள்ள வேண்டும். சிங்களவர்களை பொறுத்தமட்டில் இந்த இலங்கைத்தீவு சிங்களபௌத்த நாடு. அவர்களுக்குத்தான் சொந்தம் என்று நினைக்கின்றார்கள்.

இன்று வடகிழக்கில் தமிழர் ஒரு தேசமாக வாழக் கூடாது என்பதில் அவர்கள் மிகத்தெளிவாக இருக்கின்றார்கள்.

இது ஆட்சி சம்பந்தப்பட்ட விடயம் அல்ல. அவர்கள் இனம் சார்ந்த அடிப்படைக் கொள்கை. எந்த நபர் மாறினாலும் அந்த கொள்கை ஒன்று தமிழ் தேசத்தினை பொறுத்தமட்டில் நாங்கள் போராடினால் எங்கள் உரிமைகளை பெறலாம். ஏதோ 16 இல் தீர்வு 17 இல் தீர்வு 18 இல் தீர்வு என்றும் இப்ப 19 இல் தீர்வு வரும் என்று கூறித் தமிழர்களை ஏமாற்றக் கூடாது. நாங்கள் இதில் தெளிவாக இருக்கவேண்டும்.

மணலாறு மண் பறிபோனல் தமிழர் தாயகம் பறிபோனதற்கு சமம். தென் தமிழ் தேசத்தினை பறித்துக் கொண்டிருக்கின்றார்கள். அது முடிவிற்கு வர இருக்கின்றது. அந்த தேசத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பதற்கு மணலாறு நிலத்தொடர்பை சிதைக்க அது நிச்சயமாக உறுதிப்படுத்தப்படும்.

தமிழ் இனத்தினையும் தமிழ்தேசத்தினையும் பொறுத்தவரையில் இது முல்லைத்தீவு மண்ணை சார்ந்த பிரச்சினை அல்ல. தமிழ் தேசத்தினை சார்ந்த பிரச்சினை. தமிழரின் இருப்பு சார்ந்த பிரச்சினை. இந்த இடத்தில் தமிழர்களின் ஆழத்தை புரிந்து கொள்ளாமல் நடந்து கொள்வோமாக இருந்தால் இந்த இனம் அழியும்

முல்லைத்தீவு மண் பறிபோனால், மணலாறு மண் பறிபோனால் தமிழ் தேசம் பறிபோனதற்கு சமம் என்பதை விளங்கிக் கொண்டு போராடுகின்ற அனைத்து மக்களும் அணி திரண்டு இந்த இன அழிப்பிற்கு எதிராக தொடர்ந்தும் நம்பி ஏமாறாமல் நாங்கள் செயற்படாமல் இருக்கும் வரைக்கும் இந்த இனம் அழியும். அதனை தடுத்து நிறுத்த வேண்டும். அந்த தடுப்பிற்கு முதல் புள்ளியாக இது அமையவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (2-281)

# தொன்றுதொட்டு மகாவலித்திட்டம் தமிழர்களுக்கு ஆக்கிரமிப்பின் அறிகுறியே

**மகாவலி எதிர்ப்பு தமிழர் மரபுரிமை பேரவையின் இணைத் தலைவர்களில் ஒருவரான விஜயகுமார் நவநீதன் தெரிவிப்பு**

(பனிக்கன்குளம்)

தொன்றுதொட்டு இன்று வரை மகாவலித் திட்டம் தமிழர்களுக்கு எதிராகவுள்ளது என மகாவலி எதிர்ப்பு தமிழர் மரபுரிமைகளின் பேரவையின் இணைத் தலைவர்களில் ஒருவரான விஜயகுமார் நவநீதன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவில் மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் பெயரில் மேற்கொள்ளப்பட்டு வரும் சிங்களக்குடியேற்றங்களை தடுத்து நிறுத்தக் கோரி நேற்று முற்பகல் 11 மணிளவில் முல்லைத்தீவில் மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது மாவட்ட செயலகம் முன் இடம்பெற்ற மகாவலி தொடர்பான விளக்கவுரை நிகழ்த்தும் கூட்டத்தில் இப் போராட்டத்தை ஒழுங்கமைத்த மகாவலி எதிர்ப்பு தமிழர் மரபுரிமை பேரவையின் இணைத் தலைவர்களில் ஒருவரான விஜயகுமார் நவநீதன் கருத்து தெரிவிக்கையில்,

சிங்கள மக்களை பொறுத்தவரை மகாவலி திட்டம் பல வரப்பிரசாதங்களை பெற்றுத்தருவதாக இருந்தாலும் தமிழர்களை பொறுத்த வரையில் மகாவலி திட்டம் ஆக்கிரமிப்பின் அறிகுறியே.

தொன்றுதொட்டு இன்று வரை மகாவலி திட்டம் தமிழர்களுக்கு எதிராக எவ்வாறு பயன்படுத்தப்பட்டது என்பதற்கு பல வரலாற்றுச் சான்றுகள் உண்டு.

கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் மற்றும் கருநாட்டுக்கேணி உள்ளிட்ட கிராமங்கள் 1984 ஆம் ஆண்டு வலுக்கட்டாயமாக இடம்பெயரச் செய்யப்பட்டு அப்பகுதி மக்களின் வாழ்வாதார நிலங்களை சிங்கள மக்களுக்கு வழங்கும் நோக்கோடும் 1988 ஆம் ஆண்டும், 2007 ஆம் ஆண்டும் அரச ஆணைக்கு அமைவாக கொக்கிளாய் உட்பட 34 கிராமங்கள் மகாவலி திட்டத்துக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது என்றார். (2-281)




# 'முதியோர்களுக்கான அரசாங்க சேவை' விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்

(மன்னார்)

முதியோர்களுக்கான அரசாங்க சேவை தொடர்பில் கிராம அலுவலர்கள் மற்றும் வெளிக்கள சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் முதியோர்களுக்கான தேசிய செயலகம் மற்றும் சமூக நலன்புரி அமைச்சு ஆகியவற்றின் அனுசரணையுடன் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் நடைபெற்றது.

மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்ச்சித்திட்டத்தில் கிராம அலுவலர்கள், வெளிக்கள சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உட்பட முதியோர் சங்க பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது முதியோர்களுக்கான அரச சேவை தொடர்பில் விழிப்புணர்வு கருத்துக்களை மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து தொற்றாநோய் தொடர்பிலான விழிப்புணர்வு கருத்துக்களை வைத்திய கலாநிதி டெனி வழங்கினார்.(2)

# தொடர்ச்சியாக மீட்கப்படும் மனித எச்சங்கள் அடுத்தகட்ட நடவடிக்கையை ஆராய்வதற்கு உயர்மட்ட கலந்துரையாடல் இவ்வார இறுதிக்குள்



(மன்னார்)

மன்னார் சதொச வளாகத்தில் தொடர்ச்சியாக சந்தேகத்திற்கு இடமான மனித எச்சங்கள் மீட்கப்பட்டு வருகின்றன. குறித்த வளாகத்தில் நேற்றுடன் 59 ஆவது தடவையாக அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

விசேட சட்ட வைத்திய அதிகாரி மற்றும் தொல்லியல்துறை பேராசிரியர் தலைமையில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்ற நிலையில் நேற்றைய தினம் அகழ்வுப் பணிக்காக மேலதிக அதிகாரிகள் இணைக்கப்பட்டுள்ளனர்.

இதுவரை குறித்த வளாகத்தில் 102 மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டதுடன் 95 மனித எச்சங்கள் குறித்த வளாகத்தில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளன. மேலதிகமாக காணப்படும் 7 மனித எச்சங்களை அப்புறப்படுத்தும் பணிகள் நேற்று இடம் பெற்ற போதும் குறித்த மனித எச்சங்களின் கீழ் மேலும் அதிகளவிலான மனித மண்டையோடுகள் காணப்படுவதனால் அப்புறப்படுத்தும் பணிகளை முழுவதுமாக முடிப்பதில் தாமதம் காணப்படுகின்றது.

இதுவரை அப்புறப்படுத்தப்பட்ட மனித எச்சங்கள் குறித்த வளாகத்திலேயே சுத்தப்படுத்தப்பட்டு அடையாளப்படுத்தப்பட்டு வரையப்பட்டு பொதி செய்யப்படுகின்றது.

குறித்த மனித புதை குழி தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கைகளை ஆராய்வதற்காக உயர்மட்ட கலந்துரையாடல் ஒன்று இவ்வார இறுதிக்குள் ஏற்பாடு செய்யபப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் குருதி சுத்திகரிப்பு நிலையம் திறப்பு





(பனிக்கன்குளம்)

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் முதற் தடவையாக குருதி சுத்திகரிப்பு சிகிச்சை நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஞா.குணசீலன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு குருதி சுத்திகரிப்பு நிலையத்தை நேற்று நண்பகல் திறந்து வைத்தார்.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் வரலாற்றில் இதுவரை காலமும் குருதி சுத்திகரிப்பு நோயாளிகள் வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் வைத்திய சாலைகளுக்கே அனுப்பி வைக்கப்பட்டனர்.

வைத்தியசாலையின் பணிப்பாளர் மற்றும் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் உள்ளிட்ட பலரின் கூட்டு முயற்சியினால் வடக்கு மகாகாணத்தில் இறுதியான குருதி சுத்திகரிப்பு நிலையமாக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் இந் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

இனிவரும் நாட்களில் குருதி சுத்திகரிப்புக்குட்படும் நோயாளிகள் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் தங்களது சிகிச்சையை பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்படுகின்றது.

தொடர்ந்து இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் மகப்பேற்று மருத்துவர் இன்மை தொடர்பில் கருத்து தெரிவிததார்.

குறித்த பிரச்சினை தொடர்பில் பேச்சுவார்த்தை இடம்பெற்று வருவதாகவும் ஒரு வாரத்திற்குள் தீர்வு எட்டப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (2-281)

# தமிழர்களின் நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுவதற்கு எதிராக ஜனாதிபதிக்கு நேற்று மகஜர் கையளிப்பு

(பனிக்கன்குளம்)

மகாவலி அபிவிருத்தி அதிகார சபை உள்ளிட்ட பல்வேறு திணைக்களங்களினால் தமிழர்களின் நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுவதற்கு எதிராக மகாவலி எதிர்ப்பு தமிழர் மரபுரிமை பேரவையினால் நேற்று முற்பகல் 11 மணியளவில் முல்லைத்தீவில் மாபெரும் கண்டனப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இப்போராட்டம் பி. டபிள்யூ.டீ. சந்தியிலிருந்து ஆரம்பமாகி முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தைச் சென்றடைந்தது.

இதன்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு அனுப்பி வைக்குமாறு மகஜர் ஒன்று முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபருக்கு பேரணி ஏற்பாட்டாளர்களினால் கையளிக்கப்பட்டது.

அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு.

மகாவலி அபிவிருத்தி திட்ட செயற்பாடுகள் தொடர்பாக முல்லை.மாவட்ட மக்களின் அதிருப்தியை தெரியப்படுத்தல் எனும் தலைப்பிடப்பட்ட மகஜரின் விபரம் வருமாறு.

01) மகாவலி எதிர்ப்பு மரபுரிமை பேரவையினராகிய நாங்கள் முல்லை மாவட்ட சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் கிராம மட்ட அமைப்புக்கள் சார்பாக எமது அதிருப்தியினைத் தெரிவிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். மகாவலி திட்டத்தினால் இழைக்கப்படுகின்ற அநீதிகள் மற்றும் எமது மக்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புக்கள் தொடர்பாக தங்களுக்கு தெரியப்படுத்த வேண்டிய வரலாற்றுக் கடமையை நாம் தவற விட விரும்பவில்லை.

02) மணலாறு (வெலி ஓயா) பிரதேச செயலாளர் பிரிவை மையப்படுத்தி வட மத்திய, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் எல்லைகளை உள்ளடக்கிய வகையிலே மகாவலி "எல்" வலயத்திட்டத்தின் கீழ் பாரிய உட்கட்டுமான அபிவிருத்தி வேலைகள் நடைபெறுவதனை நாமறிவோம். 2009 போர் முடிவடைந்த பின்னர் மகாவலி "எல்" வலயத்தின் கீழ் மணலாறு பிரதேச செயலாளர் பிரிவில் 6 ஆயிரம் சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளன. இக்குடியேற்றங்களுக்காக 1984 ஆம் ஆண்டு பலவந்தமாக விரட்டியடிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு சொந்தமான 2 ஆயிரம் ஏக்கர் காணிகளும் மேலும் பல ஆயிரம் ஏக்கர் காணிகளும் சிங்கள மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு காணி உறுதிப்பத்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

குடிநீர் வழங்கல், மின்சாரம், போக்குவரத்து, சுகாதாரம், சுயதொழில் வாய்ப்புக்கள் மற்றும் கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக 3 ஆயிரம் மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட நிதி மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மணலாறு பிரதேச செயலாளர் பிரிவில் செலவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தினூடாக தமிழர்களுக்கு எந்தப் பயனும் இன்றுவரை கிடைக்கவில்லை.

03) முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்ட எல்லைகளை உள்ளடக்கிய மணலாறு பிரதேச செயலகப் பிரிவானது திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்வதற்கும், வடகிழக்கின் எல்லைகளை துண்டாடி வடக்கையும் கிழக்கையும் நிரந்தரமாகப் பிரிப்பதற்கான அரசின் தந்திரோபாய நடவடிக்கையாகவே நாம் கருதுகின்றோம்.

04) முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவின் பெரும் பகுதிகள் மகாவலி அரசாணையின் கீழ் ஏற்கனவே மகாவலி "எல்" வலயத்திற்குள் உள்ளடக்கப்பட்டிருந்தாலும் மகாவலி தனது நடவடிக்கைகளை மணலாறு பிரதேச செயலாளர் பிரிவோடு மட்டுப்படுத்தியிருந்தது.

அண்மையில் கருநாட்டுக்கேணி, கொக்குத் தொடுவாய் மற்றும் கொக்கிளாய் பகுதிகளில் சட்ட விரோதமாக மீன்பிடியில் ஈடுபட்ட 8 சிங்கள மீனவர்களுக்கு மகாவலி அதிகாரசபையினால் காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டதனூடாக மகாவலி அதிகார சபையானது கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவினுள் தனது காணி அதிகாரத்தினை பிரயோகிக்க ஆரம்பித்துள்ளது.

05) மகாவலி "எல்" வலைய மற்றும் முன்மொழியப்பட்டுள்ள மகாவலி "கே", "ஜே" வலயங்கள் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்வதற்கும் வடக்கு மாகாணத்தின் சனத்தொகையை கட்டமைக்கப்பட்ட ரீதியில் மாற்றியமைப்பதற்குமான அரசின் முயற்சியாகவே நாம் கருதுகின்றோம்.

06) மேலும் தொல்லியல் திணைக்களம் திட்டமிட்ட வரலாற்றுத் திரிபுகளை மேற்கொள்வதோடு தமிழர்களின் கலாசார மற்றும் சமய முக்கியத்துவம் மிக்க இடங்கள் பழைமைவாய்ந்த பௌத்த விகாரைகளாக உண்மைக்கு புறம்பாக பிரகடனப்படுத்தி வருகிறது.

செம்மலை நீராவி பிள்ளையார் ஆலயம் பழைமை வாய்ந்த பௌத்த விகாரையாகப் பிரகடனப்படுத்தப்பட்டமை அண்மைய உதாரணமாகும்.

07) முல்லைத்தீவின் ஆயிரக்கணக்கான ஏழை மீனவர்களின் வாழ்வாதார மூலமாக இருக்கின்ற நந்திக்கடல் மற்றும் நாயாறுக் களப்புக்கள் மீன்பிடி செயற்பாடுகளுக்கு தடை விதிக்கப்பட்டு இயற்கைப் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இது ஆயிரக்கணக்கான ஏழை மீனவர்களின் வருவாய் உழைப்பையும் வாழ்வாதாரத்தையும் மோசமாகப் பாதிக்கும் செயற்பாடாகும்.

08) ஜனாதிபதியே! போருக்குப் பின்னரான இயல்பு வாழ்க்கைக்கு திரும்புவதற்கு முல்லை. மாவட்ட மக்கள் சிக்கல் நிறைந்த இடர்பாடுகளை சந்தித்து வருகின்றார்கள். அரசின் புதிய கட்டுப்பாடுகள் மற்றும் சட்ட திட்டங்கள் காரணமாக எமது மக்கள் சொல்லொணாத் துன்பங்களை எதிர் கொண்டுள்ளார்கள்.

09) உங்களுடைய தலைமைத்துவத்தின் கீழ் இந்த நாட்டின் குடி மக்களான எமக்கு கருத்துக்களை வெளிப்படையாகத் தெரியப்படுத்துவதற்கும் நிம்மதிப் பெருமூச்சு விடுவதற்கும் எமக்கு அருகதையிருப்பதாகவே கருதுகின்றோம்.

எமது கோரிக்கைகள்

i. மகாவலித் திட்டத்தின் நன்மை, தீமைகள், சவால்கள் மற்றும் சிக்கல் தன்மைகளை கருத்திற் கொண்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற மகாவலி திட்டச் செயற்பாடுகளை உடனடியாக நிறுத்துமாறும் வடக்கின் ஏனைய பகுதிகளில் விஸ்தரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள திட்ட முன்மொழிவுகளை கைவிடுமாறும் தங்களை விநயமுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

ii. கொக்கிளாய், கொக்கத்தொடுவாய் மற்றும் கருநாட்டுக்கேணி கடற்கரையில் சட்டவிரோதமாக தங்கியிருக்கும் சிங்கள மீனவர்களுக்கு மகாவலி அதிகார சபையால் வழங்கப்பட்டுள்ள காணி அனுமதிப்பத்திரங்கள் உடனடியாக மீளப்பெற வேண்டும்.

iii. 1984 வலுக்கட்டாயமாக இடம்பெயரச் செய்யப்பட்ட தமிழ் மக்களுக்கு சொந்தமான, நீதிக்கு புறம்பாக சிங்கள மக்களுக்கு பிரித்து வழங்கப்பட்ட 2ஆயிரம் வாழ்வாதார நிலங்கள் அதன் உண்மையான உரிமையாளர்களான தமிழ் மக்களுக்கு மீள வழங்க வேண்டும்.

iv. தமிழர்களின் மரபுரிமையை திட்டமிட்டு சீரழிக்கும் நோக்குடன் மாவட்ட அரசாங்க அதிகாரிகளையும் கிராமிய அமைப்புக்களையும் கலந்துரையாடாது வரலாற்று திரிபை ஏற்படுத்தும் நோக்கோடு தன்னிச்சையாக செயற்படும் தொல்லியல் திணைக்களத்தின் நீதிக்குப் புறம்பான செயற்பாடுகள் உடன் நிறுத்தப்பட வேண்டும்.

v. வடக்கையும் கிழக்கையும் நிரந்தரமாக பிரிக்கும் நோக்கோடு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த வடகிழக்கு எல்லைக் கிராமங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை உடன் நிறுத்த தவறும் பட்டசத்தில் அது இனநல்லிணக்கத்தை மிக மோசமாக பாதிக்கும்.


vi. ஏழை மீனவர்களின் வாழ்வாதாரத்தை கருத்திற் கொண்டு இயற்கைப் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நந்திக்கடல், நாயாற்றுக் களப்புக்கள் மீண்டும் சட்ட ரீதியாக மீன்பிடி நடவடிக்கைகளுக்கு அனுமதியளிக்கப்பட்ட வேண்டும்.

ஜனாதிபதியே! நிறைவாக எமது கோரிக்கைகளை ஏற்று நியாயமான தீர்வினை வழங்குவதனூடாக சமாதானம் நல்லிணக்க முயற்சிகளுக்கு உரமூட்டுமாறு தங்களை தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-281)




## புனரமைக்கப்பட்ட குளம் சார்ந்த பகுதியில் இரவு நேரங்களில் இனந்தெரியாதவர்கள் அட்டகாசம்

## இருக்கைகள் சேதம்



(மன்னார்)

மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்துக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி உதவியுடன் அபிவிருத்திக்கான ஒன்றிணைவு எனும் கருப்பொருளில் மன்னார் மாவட்டத்தில் பல்வேறு குளங்கள் புனரமைப்பு செய்யப்பட்டன.

அதன் அடிப்படையில் மன்னார் மூர்வீதி, காட்டு பள்ளி பிரதான வீதியில் அமைந்துள்ள குளம் புனரமைப்பு செய்யப்பட்டு அழகுபடுத்தப்பட்டுள்ளதோடு, அப்பகுதியில் சிறுவர்கள் விளையாடுவதற்கான விளையாட்டு ஊஞ்சல், சறுக்கு விளையாட்டு என்பன அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் அப்பகுதியில் மாலை நேரத்தில் பொது மக்கள் பொழுது போக்கிற்காக வருகின்ற போது அவர்களுக்கான இருக்கைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் அங்கு அமைக்கப்பட்டுள்ள இருக்கைகள் பல உடைத்து சேதப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் குறித்த புனரமைப்பு செய்யப்பட்ட குளம் சார்ந்த பகுதியில் இரவு நேரங்களில் இனம் தெரியாதவர்கள் மதுபானங்களை குடித்து விட்டு போத்தல்களை உடைத்து விட்டுச் செல்கின்றனர்.

இதனால் பலர் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனவே உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி சேதமாக்கப்பட்டுள்ள இருக்கைகளை மீண்டும் அமைத்து குறித்த பகுதியில் உரிய பராமரிப்புக்களை மேற்கொள்ளுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

## அடிப்படை சுகாதார வசதிகளின்றி அவதியுறும் கௌதாரிமுனை மக்கள்

(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கௌதாரி முனை கிராம மக்கள் அடிப்படை சுகாதார சேவைகளை பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

பூநகரி வாடியடிச் சந்தியிலிருந்து 25 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள கிராமமான கௌதாரிமுனையில் 114 குடும்பங்களைச் சேர்ந்த 374 பேர் வாழ்கின்றனர். இந்த மக்கள் தங்களின் அடிப்படை சுகாதார தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு பூநகரி வாடியடிக்கு சுமார் 25 கிலோ மீற்றர் தூரம் செல்ல வேண்டும்.

குடும்பநல உத்தியோகத்தர்கள் கூட சீராக கிராமத்திற்கு வருகை தருவதில்லை. இதனால் கர்ப்பிணித் தாய்மார்கள், சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் எனவும் கிராம மக்களால் சுட்டிக்காட்டப்படுகிறது. முதியவர்கள் சுகாதார தேவையின் பொருட்டு பெரும் நெருக்கடிகளின் மத்தியில் பூநகரிக்கு வந்து செல்வதாகவும் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கௌதாரிமுனையிலிருந்து பூநகரி வாடியடிக்கு நாளாந்தம் காலை 7 மணிக்கு புறப்படும் பேருந்து பின்னர் மாலை 5 மணிக்கு பூநகரியிலிருந்து கௌதாரி முனை நோக்கி செல்கிறது. இதனால் இந்தப் பிரதேசத்தில் வாழ்கின்ற மக்கள் தங்களின் எல்லாத் தேவைகளுக்கும் தினமும் அவதியுற்று வருகின்றனர்.

கடந்த காலங்களில் மாதத்திற்கு ஒரு தடவை வெளிநோயாளர் பிரிவு சேவை இடம்பெற்று வந்தது என்றும் ஆனால் தற்போது அவை இடம்பெறவில்லை என்றும் கௌதாரிமுனை மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். அத்தோடு தங்களது கிராமத்தில் சுகாதார நிலையக் கட்டடம் உண்டு எனவும் பொது மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (2-312)

## மாணவனை காணவில்லை; பெற்றோர் பொலிஸில் முறைப்பாடு

(குருமன்காடு)

வவுனியாவிலுள்ள பிரபல பாடசாலையொன்றில் கல்வி கற்று வந்த மாணவனை காணவில்லையென தெரிவித்து பெற்றோரால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த மாணவனை நேற்று முன்தினம் மாலை முதல் காணவில்லையென தெரிவித்து அவரின் பெற்றோர் நேற்று முன்தினம் இரவு ஒன்பது மணியளவில் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை பதிவு செய்துள்ளனர். அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, நேற்று முன்தினம் மாலை ஐந்து மணி முதல் வவுனியா, தேக்கவத்தை பகுதியை சேர்ந்த குறித்த மாணவனைக் காணவில்லையெனவும் அவர் பத்தாம் தரத்தில் (வயது-15) கல்வி கற்று வருகிறார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அந்த மாணவன் வீட்டிலிருந்து தனது உடுதுணிகள் சிலவற்றை எடுத்துச் சென்றுள்ள தகவலையும் பெற்றோர் தமது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளனர். இந்த நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-250)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## இலங்கையில் அகத்தியரும் சித்த மருத்துவமும்





டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

(சென்றவார தொடர்ச்சி...)

திருகோணமலைமாவட்டத்தில் மூவர் பிரதேச செயலர் பிரிவில் கங்குவேலி கிராமத்தில் அமைந்துள்ள அகத்திய மாமுனிவரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட அதி சக்திவாய்ந்த சிவலிங்கத்தை மூலமூர்த்தியாகக் கொண்டதும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு மேல் தொன்மை வாய்ந்ததுமான கங்குவேலி அகத்தியர் ஸ்தாபன சிவன் ஆலயம் முழு உலகிலும் ''அகத்தியர் ஸ்தாபனம்'' என்ற பெயரோடு இருக்கின்ற ஆலயம் இவ் ஆலயம் மட்டுமேயாகும்.

தட்சணகைலாயத்தின் முதற் தமிழ்ச் சங்கத்திற்கு முற்பட்ட காலத்தில் குமரிக்கண்டத்தில் அமைந்துள்ள மிகவும் விசாலம் உள்ள நகரமான முத்தூரில் அட்டமா சித்திகள் பெற்ற குறுமுனிவர் அகத்தியரை முப்புரம் எரித்த முக்கண்ணனார் படைத்தார்.

இவர் முதல் முதலாக படைக்கப்பட்ட மனிதன் ஆவார். இவர் முதலாம், இரண்டாம் சங்கங்களை அமைத்து தமிழை வளர்த்து புரட்சிகரமான மறுமலர்ச்சி ஒன்றினை ஏற்படுத்தினார். தமிழரின் கலாசாரத்தையும் பரப்பி தடம்பதித்தார்.

தரணி எல்லாம் தமிழ் ஓங்கி நின்றது. சிவ பக்தர் இராவணனும் அகத்தியரின் சீடர்களில் முக்கியமாவர் ஆவார். இத்தகைய புகழ்பூத்த அகத்தியர் வணங்கிய திருக்கரசையம்பதி பெருமான் ஆலயமாகும்.

இவ் ஆலயம் ஆனது தெற்கே மகாவலி கங்கையாலும் மாவிலாற்று நீரோடையாலும் நெற்களனிகளாலும் உயர் மருத மரங்களாலும் எழில் சூழப்பட்ட இடமாக தன்னை மிளர வைத்திருக்கும் அகத்தியர் ஆலய ஸ்தாபனமாகும்.

இந்தியாவிலே தோன்றிய அகத்தியர்கள் முப்பத்து இரண்டு பேரென அறியக் கிடைக்கின்ற போதும் இலங்கை திருநாட்டிற்கு வருகை தந்த குறுமுனி அகத்தியர் தமிழ்ப் பேரவை ஒன்றை அமைத்ததாகவும் அப்பேரவையின்தலைவராக அவரே இருந்ததாகவும் முத்தமிழ் வித்தகராக அவர் விளங்கியதாகவும் உலகிலேயே இரண்டாவது தமிழ் மருத்துவ பல்கலைக்கழகம் அவரால் இங்கு அமைக்கப்பட்டதாகவும் வரலாறு கூறுகின்றது.

அகத்தியர் வர்மக்கலையிலும் சிறந்து விளங்கியதோடு அந்தக் கலையை நோய்களை தீர்க்கவும் பயன் படுத்தப்பட்டுள்ளது.

அகத்தியர் வெவ்வேறு காலகட்டத்தில் வாழ்ந்ததாகவும் சரித்திரம் கூறுகின்றது. அகத்தியர் சித்த மருத்துவத்தின் தந்தை எனவும் குறிப்பிடப்படுகின்றார்.

சித்த மருத்துவத்திற்கேயுரிய தாது, மூலிகை சேர்ந்த பல அமிழ்தங்கள் (மருந்துகள்) பற்றி பல நூல்களில் எடுத்தியம்பியுள்ளார்.

வில்வமரம் ஓர் புனிதம் கருதிய மரமாகவும் மருத்துவ முக்கியத்துவமுடைய மரமாகவும் சித்த மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகின்றது. வில்வமரத்தினை தொட்டாலோ அல்லது இலைகளை பறித்து வழிபட்டாலோ ஒன்பது பிறப்பிலும் செய்த பாவங்களும் இல்லாமல் போய் விடுமென சமயம் கூறுகின்றது.

அவ்வாறான வில்வமரமே இவ் ஆலயத்தின் தல விருட்சமாய் அமைந்திருப்பது இவ் ஆலயத்திற்கு இன்னும் சிறப்பைச் சேர்க்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். அகத்தியர் ஸ்தாபனமானது அகத்தியர் நாமத்தோடு விளங்கும் ஒரேயொரு சிவாலயமாகும். இவ் ஸ்தாபனமானது நிறுவன ரீதியான அமைப்பாக சைவமும் தமிழும் மருத்துவமும் ஒரு சேர வளரப்பெற்ற திருத்தலம். அகத்திய மாமுனிவரால் குருகுலக் கல்வியும் மருத்துவமும் போதிக்கப்பட்ட திருத்தலமுமாகும்.(முற்றும்)

## இலங்கையின் உள்ளூர் விமான போக்குவரத்துத்துறை வளர்ச்சி

### அமைச்சர் நிமால் தகவல்




(கொழும்பு)

இலங்கையின் விமான போக்குவரத்துத் துறை குறிப்பிடத்தக்க வளர்ச்சியை பதிவு செய்திருப்பதாக சிவில் விமான சேவைகள் போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டீ சில்வா தெரிவித்துள்ளார்.

மோட்டார் வாகனத் துறையை போன்று உள்ளூர் விமான போக்குவரத்து துறையும் வளர்ச்சி கண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் விமான போக்குவரத்து துறை கூடுதலான பங்களிப்பினை வழங்கி வருவதாகவும் அமைச்சர் நிமால் சிறிபால டீ சில்வா மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சீமெந்து தொழிற்சாலைய்யில் விபத்து; 23 வயது இளைஞன் கோரப் பலி!





(திருமலை)

திருகோணமலையிலுள்ள சீமெந்து தொழிற்சாலையில் நேற்று முன்தினம் நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் 23 வயதுடைய இளைஞன் உயிரிழந்துள்ளார்.


சீனக்குடா ஜனசக்திபுரத்தைச் சேர்ந்த அன்ரனி ஸ்டீபன் என்பவரே இந்த சம்பவத்தில் பலியாகியுள்ளார். இவர் குறித்த சீமெந்து தொழிற்சாலையில் கடந்த 4 ஆண்டுகளாக பணி புரிந்துள்ளார்.

புதிதாக கொண்டுவரப்பட்ட இயந்திரத்தில் கப்பலில் இருந்து வரும் சிலிக்கன் மண்ணை ஏற்றி வரும் போது அதிக பாரம் காரணமாக சரிந்த குறித்த இயந்திரத்திற்கு இடையில் இளைஞன் சிக்கியதால் உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் இவ்வாறு அடிக்கடி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. இதில் பலர் உயிரிழந்துள்ளனர். இங்கு தொழில் செய்வோருக்கு உரிய பாதுகாப்பு அங்கிகள், கருவிகள் என்பன வழங்கப்படுவதில்லை. அத்துடன் தொழிற்சாலை பணியாளர்கள்.ஒப்பந்த அடிப்படையிலான பணியாளர்கள் என இரண்டு வகையானவர்கள் தொழில் புரிகின்றனர்.

இதில் ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்பட்ட வேலைகளுக்கான பணியாளர்கள் மத்தியில் இவ்வாறான விபத்துச் சம்பவங்கள் இடம்பெறுவதாக ஏனைய தொழிலாளர்கள் தெரிவித்தனர். (இ-7)

## சுற்றுலாப் பயணிகள் செல்லத்தடை ஹபரணை வீதியில் ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளின் பணிப் பகிஷ்கரிப்பு காரணமாக ஒரு சில பிரதேசங்களுக்கு சுற்றுலாப் பயணிகள் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலையடுத்து மின்னேரியா தேசிய பூங்கா தற்காலிகமாக நேற்று முன் தினம் இரவு மூடப்பட்டது.

குறித்த தாக்குதல் சம்பவத்தில் 3 வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்

இந்நிலையில், வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்து பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருவதன் காரணமாக சுற்றுலா பயணிகளுக்கு ஒரு சில இடங்களுக்கு சுற்றுலா மேற்கொள்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தாக்குதல் சம்பவத்தை கண்டித்து கொழும்பு - ஹபரணை வீதியை மறித்து சபாரி ஜீப் வண்டிகளின் சாரதிகள் நேற்று ஆர்ப்பாட்டத்திலீடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ஒரு கோடி ரூபாவிற்கும் அதிகமான போதைப்பொருளுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

கொழும்பு புதுக்கடைப் பகுதியில் ஒரு கோடி ரூபாவிற்கும் அதிகமான ஐஸ் என்ற போதைப்பொருள் 503 கிராமுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் ஆட்டோ ஒன்றில் குறித்த போதைப் பொருளை வெல்லம்பிட்டியவிற்கு எடுத்து செல்லும் போதே கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வெள்ளவத்தை குற்றவியல் தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த தகவலையடுத்து குறித்த நபர் நேற்று அதிகாலை இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சந்தேக நபர் சில மாதங்களுக்கு முன்னர் கொலை செய்யப்பட்ட ரிஸ்வான் என்பவரின் உதவியாளர் என பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# அரசியல் பழிவாங்கலுக்காகவே விசேட நீதிமன்றங்கள் ஸ்தாபிப்பு

## பவித்ரா எம்.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசியல் பழிவாங்கல்களை மேற்கொள்வதற்காகவே அரசாங்கம் விசேட நீதிமன்றங்களை ஸ்தாபித்துள்ளதாக, ஒன்றிணைந்த எதிரணியின் பெண் நாடாளுமன்ற உறுப்பினர் பவித்ராதேவி வன்னியாராச்சி குற்றம்சாட்டியுள்ளார்.

மேலும், ஐக்கிய தேசிய கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்திலேயே விசேட மேல் நீதிமன்றங்களை ஸ்தாபிப்பதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.



கொழும்பு - நெளும்மாவத்தையில் அமைந்துள்ள ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஒன்றிணைந்த எதிரணியில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்களை பழிவாங்குவதற்கே தற்போது அரசாங்கம் விசேட மேல் நீதிமன்றங்களை ஸ்தாபித்துள்ளது.

நாட்டு மக்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை புறக்கணிக்க ஆரம்பித்துள்ளனர்.

அதனாலேயே அரசாங்கம் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்தாது காலம் தாழ்த்தி வருகிறது" எனவும் பவித்ரா மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## கந்தபுராண எழுச்சி விழா

(யாழ்ப்பாணம்)

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், கந்தபுராண கலாசாரம் இந்த மண்ணின் அடையாளம் என்ற தொனிப்பொருளில், நல்லூர்க் கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டுக் கந்தபுராண வாழ்வியல் தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்தும் கந்தபுராண எழுச்சி அருள்நெறி விழா - 2018 நிகழ்வுகளை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்திலும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்திலும் சிறப்புற முன்னெடுத்து வருகிறது.

அந்தவகையில், பதினான்காம் நாள் நிகழ்வுகள் இன்று புதன்கிழமை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில், பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் பஜனைக் குழுவினரின் பஜனை நிகழ்வும், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் திருமுன்னிலையில், இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் இ. கர்ஜின் தலைமையில், கோப்பாய் தேசியக் கல்வியியற் கல்லூரி, ஓய்வுநிலை உபபீடாதிபதி, கலாநிதி, நிர்மலாதேவி நல்லையா பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்க, யாழ்ப்பாணம், பருத்தித்துறை மற்றும் உடுவில் பிரதேச அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் கோப்பாய், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைப் பிரதி அதிபர் ச. லலீசன் "எத்துக்கு மூத்தீர்" எனும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவும், புண்ணியா செல்வம் முருகானந்தத்தின் (லண்டன்) தனியிசை அரங்கு சிறப்பு நிகழ்வாகவும் இடம்பெறும். (இ-7)

## நல்லூர் ஆலயச் சூழலில் தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் தினமும் மாலை 6.45 மணியிலிருந்து இரவு 8.15 மணிவரை தெய்வீக இசையரங்கு நடைபெறறு வருகின்றது.

இதில் இன்று இசைக்கச்சேரி பாட்டு– சஹானா கோபி மனோகரன், வயலின்– கே.வேலதீபன், மிருதங்கம்– கே.பிரணவகரன், முகர்சிங்– நி.மோகன், பாட்டு சிவரஞ்சினி ரமணா, வயலின்– கா.குகபரன், மிருதங்கம்– வ.ரமணா, கடம்– கு.ரவிசங்கர், கெஞ்சிரா– நா.சிவசுந்தரசர்மா ஆகியோர் வழங்குவர். (இ)

## 'வேலை வணங்குவதே வேலை' தெய்வீக இசைப்பேருரை இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூாக் கந்தசுவாமி கோவில் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லை ஆதீன குருமூர்த்தி ஆலய மண்டத்தில் நல்லை ஆதீன குருமகா சந்திதானத்தின் அருளாசியுடன் நல்லூர் சைவ மகாசபை நடத்தி வரும் "கந்தவேற்புராணம்" பற்றிய தெய்வீகத் தொடர் இசைப் பேருரையில் இன்று மாலை 6.30 மணிக்கு நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு மாவை ஆஸ்தான வித்துவான கானகதா வாரிதி கலாபூஷணம் பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்தசர்மா "வேலை வணங்குவதே வேலை" பற்றி சிறந்த பக்கவாத்திய சகிதம் தெய்வீகச் தொடர் இசைப் பேருரை நிகழ்த்துவார். (இ)

## 'கந்தசுவாமியே சுவாமி' சின்மயாமிஷனில் அருளுரை

(யாழ்ப்பாணம்)

யாழ். சின்மயா மிஷன் சுவாமி சிதாகாசானந்தாவால் "கந்த சுவாமியே சுவாமி"என்ற தலைப்பில் இன்று இரவு 7.30 மணி முதல் 8 மணி வரை இல 700, பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள சின்மய ஞானவேல் ஆச்சிரமத்தில் அருளுரை நடைபெறும். (இ-7)

## 'முருக வழிபாடு' சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் மஹோற்சவத்தை முன்னிட்டு கதிர் தொலைக்காட்சியின் ஏற்பாட்டில் நல்லூர் செல்லப்பா சுவாமிகள் நினைவாலயத்தில் தினமும் இரவு 7 மணியிலிருந்து ஆன்மீக நிகழ்வுகள் இடம் பெற்று வருகின்றன.

இதில் இன்று "முருக வழிபாடு" எனும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக சமஸ்கிருதத்துறைத் தலைவர் பிரம்மஸ்ரீ ச. பத்மநாதக் குருக்கள் சொற்பொழிவாற்றுவார்.தொடர்ந்து பஜனை நிகழ்வுகள் இடம்பெறும். (இ)

# அறிக்கை தோல்வியடைய பிரதமர் காரணமில்லை



## அமைச்சர் ஹரிசன் விளக்கம்

(கொழும்பு)

எல்லை நிர்ணய அறிக்கையில் பல்வேறு குறைபாடுகள் இருப்பதனால், அதில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, சகல கட்சிகளின் உடன்பாட்டுடன் மீண்டும் அதனை நாடாளுமன்றில் சமர்ப்பிக்க வேண்டும் என, சமூக வலுவூட்டல் அமைச்சர் பீ.ஹரிசன் தெரிவித்துள்ளார்.

குறித்த அறிக்கையை தோல்வியடையச் செய்ய, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எந்தவித சதித்திட்டத்தையும் தீட்டவில்லையெனவும், அறிக்கை தோல்வியுறச் செயற்பட்டமையானது, சகலரும் கலந்துரையாடிய பின்னர் எடுக்கப்பட்ட முடிவாகும் என, அவர் மேலும் தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியளாள்சந்திப்பின்போதே அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)




### ஆடும் மயில் வாகன மோகனா

ஊனொறுத்து இருபத்து ஐந்து நாளும்
பேணுகின்ற நோன்புதனை மறவாது
ஆண்டாண்டு கடைப்பிடித்து வேண்டினாலும்
காண மனம் ஏனுனக்கு தோன்றலையோ
பூணுகின்ற மௌனமேன் நல்லூரானே
கான மயில் வாகனனே கதியருள வா

படைபலம் பறித்ததென் வாழ்வுதனை
பாடுற்றேன் பரதேசியாய் பல்லூரும்
முடைபட வாழ்வதுதான் என் விதியோ
வாடும் மனம் தேடும்நலம் கூடி வராதோ
ஆடும் மயில் வாகன மோகனா
நாடி வந்தேன் நல்வரம் தாருமையா!

அரியாலையூர்,
சி.சிவநேசன்.

### வேலவனே நீல மயிலேறி விரைந்து வா

எழில் துலங்கும் நல்லூர் கந்தவேளே
அங்குற்ற தினதழகில் மயங்கி நின்றோம்
இங்குற்று யாம் படும் துன்பங்கள் நீயறிவாய்
பாங்குற்று நீ எமை தேற்றல் ஆகாதோ
எங்குற்று உனை யாம் காண்பதையா?
எம் துயரங்கள் தீர்த்திட- வேலவனே
நீல மயிலேறி விரைந்திங்கு வாருமையா

திருமதி எஸ்.பி.மணி
ஆனைப்பந்தி.

### நல்லைக் குமரப் "பா"

கல்வி செல்வம் வீரமெனக்
கருதும் மூன்று மவனாவான்
வல்லமை யறிவு திறமையெலாம்
வழங்கும் தெய்வம் வடிவேலன்
நல்லோர் செல்லும் பாதையெலாம்
நானுங் கூட வெனநிற்பான்
எல்லை யில்லாக் காருண்யன்
எழிலார் நல்லைக் குமரப்பா!

கலாபூஷணம்,
சந்தக்கவிஞர்.நவ.பாலகோபால்



## பாரதம்

# இந்தியாவில் இவ்வாண்டில் மட்டும் இயற்கை அனர்த்தங்களில் சிக்கி 1276 பேர் உயிரிழப்பு

## மத்திய உள்துறை அமைச்சகம் தகவல்



(சென்னை)

இந்தியாவில் இவ்வாண்டில் பெய்த கனமழை மற்றும் வெள்ளம் உள்ளிட்ட இயற்கை சீற்றத்தில் சிக்குண்டு இதுவரை 1276 பேர் உயிரிழந்துள்ளதாக மத்திய உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

மத்திய உள்துறை அமைச்சு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது.

மேற்கு வங்கம், உத்தர பிரதேசம், கர்நாடகா மற்றும் கேரளா ஆகிய மாநிலங்களே அதிகளவு வெள்ள பாதிப்பு ஏற்பட்ட பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்தவகையில் கேரளாவில் 443 பேரும் உத்தர பிரதேசத்தில் 218 பேரும் மழை வெள்ளத்தில் உயிரிழந்துள்ளனர்.

இதேபோன்று மேற்கு வங்கத்தில் 198 பேரும் கர்நாடகாவில் 166 பேரும் மகாராஷ்ட்டிராவில் 139 பேரும் குஜராத்தில் 52 பேரும் அசாமில் 49 பேரும் நாகலாந்தில் 11பேரும் உயிரிழந்துள்ளனரென அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (7)

## கேரள அனர்த்த சேதத்தை பார்வையிட்ட ராகுல்



(திருவனந்தபுரம்)

கேரளாவில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களை அகில இந்திய காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி நேற்று பார்வையிட்டார். கேரளாவில் கடந்த 8 ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை 11 நாட்கள் பெய்த பேய்மழை காரணமாக மாநிலம் முழுவதும் வெள்ளத்தில் மூழ்கியது.

இந்நிலையில் கேரள மழை வெள்ள சேதங்களை பார்வையிட அகில இந்திய காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி நேற்று கேரளா வந்தார்.

கேரளாவில் மழையால் அதிகம் பாதிக்கப்பட்ட பகுதிகளில்செங்கனூரும்ஒன்று. இங்கு ஆயிரக்கணக்கான மக்கள் இன்னும் நிவாரண முகாம்களில் தங்கியுள்ளனர். அங்குள்ள ஒரு முகாமுக்கு நேரில் சென்ற ராகுல் காந்தி, அங்கு தங்கியிருந்தவர்களுக்கு ஆறுதல் கூறினார். மேலும் மழை வெள்ளப் பாதிப்பு குறித்து அவர்கள் கூறிய தகவல்களையும் கவனத்துடன் கேட்டு அறிந்து கொண்டார். (7)

## தி.மு.க தலைவராக ஸ்டாலின் ஏகமனதாக தெரிவு



(சென்னை)

திராவிட முன்னேற்றக் கழகத்தின் புதிய தலைவராக மு.க. ஸ்டாலின் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். தி.மு.கவின் பொதுக்குழு நேற்று பொதுச் செயலாளர் க.அன்பழகன் தலைமையில் கூடியது.

இதன்போது தலைவராக ஸ்டாலினும், பொருளாளராக துரைமுருகனும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை தி.மு.க தலைவர் பதவிக்கு ஸ்டாலினும், பொருளாளர் பதவிக்கு துரைமுருகனும் வேட்பு மனுக்களை தாக்கல் செய்தனர்.

வேறு யாரும் அப்பதவிகளுக்கு வேட்புமனு தாக்கல் செய்யாததால் அவர்கள் இருவரும் போட்டியின்றி ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள். (7)

## 13 அவதூறு வழக்கு

## கருணாநிதியின் இறப்பு சான்றிதழ் சென்னை நீதிமன்றில் சமர்ப்பிப்பு

(சென்னை)

மறைந்த தி.மு.க. தலைவரும்முன்னாள்தமிழக முதல்வருமான கருணாநிதி மீதான 13 அவதூறு வழக்குகளையும் விரைவாக முடித்து தருமாறு கோரி, சென்னை மாவட்ட முதன்மை அமர்வு நீதி மன்றத்தில் அவரது இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டது.



கருணாநிதி மீதான அவதூறு வழக்குகள் அனைத்தையும் முடித்து தருமாறு கோரி கருணாநிதி சார்பில் சட்டத்தரணி குமரேசன் மனு தாக்கல் செய்திருந்தார்.

குறித்த மனு மீதான விசாரணை நேற்று முன்தினம் திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே கருணாநிதியின் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டது.

இதன்போது குறித்த விடயம் தொடர்பாக பதிலளிக்க அவகாசம் வழங்க வேண்டுமென அரசு குற்றவியல் சட்டத்தரணி கௌரி அசோகன் கோரிக்கை விடுத்தார்.

இதனைத் தொடர்ந்து அரசு தரப்பில் பதிலளிக்க உத்தரவிட்ட நீதிபதி, விசாரணையை ஒக்டோபர் முதலாம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

கடந்த 2011- 2016 வரையான காலப்பகுதியில் தமிழக அரசுக்கு எதிராக அவதூறு கருத்துகளைத் தெரிவித்ததாகவும், 'முரசொலி' யில் கட்டுரை எழுதியதாகவும் கருணாநிதி மீது 13 அவதூறு வழக்குகள் தொடரப்பட்டன. இதனை மறைந்த முன்னாள் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மற்றும் அமைச்சர்கள் உள்ளிட்டோரால் தொடரப்பட்ட இவ்வழக்குகள், மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (7)

## அடுத்த தமிழக முதலமைச்சராக ஸ்டாலினை பார்க்க வேண்டும்

## நடிகர் மோகன் பாபு ஆசை



(சென்னை)

தி.மு.க.தலைவர்மு.க.ஸ்டாலினை தமிழக முதலமைச்சராக எதிர்வரும் காலங்களில் பார்ப்பதற்கு ஆசைப்படுகின்றேன் என தெலுங்கு நடிகர் மோகன்பாபு தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பாக அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தெரிவித்துள்ளார். அதில் மேலும் கூறியுள்ளதாவது.

"கருணாநிதியின் நினைவஞ்சலிக்கு அழைத்தமைக்கு மு.க.ஸ்டாலினுக்கு எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்துடன் ஸ்டாலினுக்கு எப்போதும் நன்மையே நடக்க வேண்டும். இந்த வகையில் விரைவில் தமிழக முதலமைச்சராக அவரை பார்க்க ஆசைப்படுகின்றேன்" என டுவிட்டர் பக்கத்தில் பதிவேற்றியுள்ளார். (7)

# திருத்தந்தை பதவி விலக

## வத்திக்கான் முன்னாள்

(வத்திக்கான் சிட்டி)

திருத்தந்தை பிரான்சிஸ் தமது பதவியினை விட்டு விலக வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வத்திக்கான் அரண்மனையின் முன்னாள் அதிகாரி கார்லோ மரியோ விகானோ இந்தக் கோரிக்கையினை முன்வைத்துள்ளார்.

அயர்லாந்திற்கு சுற்றுப் பயணம் சென்றுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அங்கு பாலியல் துன்புறுத்தலால் பாதிக்கப்பட்டவர்களை சந்தித்ததுடன், இந்த பாவச்செயல் புரிந்தவர்களை மன்னிக்குமாறு கடவுளிடம் பிரார்த்தனையில் ஈடுபட்டார்.

இந்தநிலையில் இது தொட ர்பில் 11 பக்கங்கள் கொண்ட அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ள வத்திக்கான் அரண்மனையின் முன்னாள் அதிகாரி கார்லோ மரியோ விகானோ, இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

"அமெரிக்க பாதிரியார் மெக்காரிக் நடத்திய பாலியல் லீலைகளை கடந்த 2013ஆம் ஆண்டு, திருத்தந்தை பிரான்சிஸ் பதவியேற்ற காலத்தில் நான் அவரிடம் தெரிவித்தேன்.

எனினும், அவர் மீது 5 ஆண்டுகளாக நடவடிக்கை எடுக்காமல் இருந்த காரணத்துக்காக திருத்தந்தை தனது பதவியை இராஜினாமா செய்ய வேண்டும்.

தேவாலயங்களில் வெளிப் படைத்தன்மை வேண்டும் என திருத்தந்தை பிரான்சிஸ் அடிக்கடி கூறி வந்துள்ளார். சர்வதேச தேவாலயம் தற்போது சந்தித்துள்ள நெருக்கடியான

## மியன்மார்

# நாட்டின் இ

# இராஜினாம

## ஐ.நா.மனித உரிமை ச



(ஜெனிவா)

மியன்மாரில் ரோஹிஞ்யா மக்கள் கொல்லப்பட்ட போர்க்குற்றத்தை இன அழிப்பாக குறிப்பிட்டுள்ள ஐ.நா. மனித உரிமை சபை அந்நாட்டின்ராணுவ தளபதி பதவி விலக வலியுறுத்தியுள்ளது.

மியன்மார் நாட்டின் வடக்குப் பகுதியான ரக்கினே மாநிலத்தில் சிறுபான்மை ரோஹிஞ்யா இன முஸ்லிம்கள் அதிகளவில் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் கடந்த 2012ஆம் ஆண்டில் இருந்து ஆட்சியாளர்களின் ஒடுக்குமுறைக்கு எதிராக ஆயுதம் தாங்கிய போராட்டங்களில் ஈடுபட்டு வந்தனர். அவர்களுக்கு எதிரான இன அழிப்பு முயற்சியில் ராணுவம் ஈடுபட்டது.

கடந்த ஆண்டு நடைபெற்ற ராணுவத்தினரின் உச்சகட்ட தாக்குதலில் சுமார் 20 ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டதாக மனித உரிமை அமைப்புகள் குற்றம்சாட்டின.

உயிருக்கு பயந்து சுமார் 7 இலட்சம் ரோஹிஞ்யா முஸ்லிம்கள் பங்களா

# வெளிநாடு

## த பிரான்சிஸ்
## க வேண்டும்

### ள் அதிகாரி கோரிக்கை



நிலையில் தனது தவறுகளை அவர் உணர வேண்டும்.

இதற்கு முன்னர் மெக்காரிக்-கின் நடவடிக்கைகள் தொடர்பில் கடந்த 2006ஆம் ஆண்டிலேயே வத்திக்கான் அதிகாரிகளிடம் புகார் அளித்தேன்.

கடந்த 1981ஆம் ஆண்டில் இருந்து 2001ஆம் ஆண்டுவரை அமெரிக்காவின் நியூஜெர்சி நகரிலுள்ள இரு திருச்சபைகளில் பணியாற்றியபோது அங்கு திருமறை பயில வந்த ஆண்களிடம் ஓரினச் சேர்க்கைக்கு இணங்கு மாறு வற்புறுத்தி, மெக்காரிக் தகாத முறையில் நடந்து கொள்வதாக முறைப் பாடு செய்திருந்தேன்.

எனினும், எனது முறைப்பாடு தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனக்கு பதிலும் கிடைக்கவில்லை.

சகித்துக்கொள்ளவே முடியாது என அவர் எதைப்பற்றி அடிக் கடி கூறிவந்தாரோ, அதை நினைவில் வைத்து, மெக் காரிக்கின் தவறுகளை மறைத்த ஏனைய கர்தினால்கள் மற்றும் ஆயர்களுடன் இணைந்து திருத்தந்தை பிரான்சிஸ் தனது பதவிய்ய இராஜினாமா செய்ய வேண்டும்" என தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (7)

# பதவியை இராஜினாமா செய்யக் கோருவது குறித்து ஒரு வார்த்தைகூட பேசத் தயாராக இல்லை


## திருத்தந்தை பிரான்சிஸ் பதில்

(வத்திக்கான் சிட்டி)

ஓரினச்சேர்க்கையாளரை பாதுகாக்க முயன்றதற்காக திருத்தந்தை பிரான்சிஸ் இராஜினாமா செய்ய வேண்டும் என எழுந்துள்ள கோரிக்கைக்கு அவர் பதில் அளித்துள்ளார்.

அமெரிக்காவின் நியூஜெர்சி நகரில் உள்ள இரு திருச் சபைகளில் பணியாற்றியவர் தியோடர் மெக்காரிக் (88). கடந்த 1981ஆம் ஆண்டில் இருந்து 2001ஆம் ஆண்டு வரை அமெரிக்காவின் நியூ ஜெர்சியில் இருந்தபோது அங்கு திருமறை பயில வந்த ஆண்களிடம் ஓரினச்சேர்க்கைக்கு இணங்குமாறு வற்புறுத்தி, மெக்காரிக் தகாத முறையில் நடந்து கொண்டதாக புகார்கள் எழுந்தன.

இது தொடர்பாக வத்திக்கான் அரண்மனை விசாரணை நடத்திவந்த நிலையில் கர்டினால்கள் கல்லூரி விரிவுரையாளர் பணியில் இருந்து அவர் இராஜினாமா செய்தார். அவர் வேறு எங்கும் மதப்பிரசாரங்களில் ஈடுபட வத்திக்கான் அரண்மனை தடை விதித்துள்ளது.



இதற்கிடையில், அயர்லாந்து நாட்டுக்கு சுற்றுப்பயணம் சென்றுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அங்கு பாலியல் துன்புறுத்தலால் பாதிக்கப்பட்டவர்களை சந்தித்ததுடன் இந்த பாவச்செயல் புரிந்தோரை மன்னிக்கும் படி கடவுளிடம் கடந்த ஞாயிற்றுக் கிழமை பிரார்த்தனை செய்தார்.

இந்நிலையில், கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைமை மதகுருவான திருத்தந்தை பதவியில் இருந்து பிரான்சிஸ் பதவி விலக வேண்டும் என வத்திக்கான் அரண்மனையின் முன்னாள் அதிகாரியான கார்லோ மரியோ விகானோ என்பவர் வலியுறுத்தியுள்ளார்.

நான் மெக்காரிக்கை பற்றி நேரடியாக புகார் அளித்தும் அவர் மீது 5 ஆண்டுகளாக நடவடிக்கை எடுக்காமல் இருந்த காரணத்துக்காக அவரது போப் பதவியை பிரான்சிஸ் இராஜினாமா செய்ய வேண்டும்.

தலைநகர் வோஷிங்டனில் உள்ள வத்திக்கான் அரண்மனை தூதராக பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், அயர்லாந்து சுற்றுப் பயணத்தை முடித்துகொண்டு ரோம் நகருக்கு திரும்பும் வழியில் போப் பிரான்சிஸ் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார்.

கார்லோ மரியாவிகானோ எழுப்பியுள்ள குற்றச்சாட்டு மற்றும் இராஜினாமா கோரிக்கை தொடர்பான கேள்விக்கு பதிலளித்த திருத்தந்தை பிரான்சிஸ், 'இந்த விவகாரம் தொடர்பாக ஒரேயொரு வார்த்தை கூட பேசத் தயாராக இல்லை' என்று குறிப்பிட்டார்.

என்மீதான குற்றச்சாட்டுகளை கவனமாக படித்துப் பார்த்து பத்திரிகையாளர்களான நீங்களே இது தொடர்பாக தீர்மானிக்கலாம் என உங்களை கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். நீங்கள் ஒரு தீர்மானத்துக்கு வந்த பின்னர் சிறிது காலத்துக்கு பின்னர் நான் பேச ஆசைப்படுகிறேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (7)

## மாரில் இன அழிப்பு
## இராணுவத் தளபதி
## மா செய்ய வேண்டும்

### மை சபை வலியுறுத்து



தேஷத்திற்கு தப்பிச் சென்றனர். மியன்மாரில் இருந்தபோது ரோஹிஞ்யா இனப் பெண்களை ராணுவத்தினர் கொடூரமான முறையில் வன்புணர்வுக்குட்படுத்தியதாகவும் தகவல்கள் வெளியாகின.

இந்நிலையில், ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையை சேர்ந்த தூதர்கள் ராணுவத்தின் அத்துமீறல்கள் தொடர்பாக பங்களாதேஷ் நாட்டின் அகதிகள் முகாமில் தங்கியுள்ள மக்களை அண்மையில் சென்று நேர்காணல் செய்தனர். மியன்மாரில் உள்ள ரக்கினே மாநிலத்துக்கும் சென்று ஆய்வு செய்தனர். பாதிக்கப்பட்ட மக்களை அவர்கள் நேரடியாக சந்தித்து குற்றச்சாட்டுகளையும், குறைகளையும் கேட்டறிந்தனர்.

பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசினா, மியன்மார் ஆளும்கட்சி தலைவர் ஆங் சான் சூகி மற்றும் அந்நாட்டின் முப்படைத் தளபதி மின் அவுங் ஹிலா ய்ங் ஆகியோரையும் அவர்கள் சந்தித்துப் பேசினர்.

மனிதநேயம் மற்றும் மனித உரிமைகளை மீறிய வகையில் நடந்ததாக கூறப்படும் ராணு வத்தின் அத்து மீறல்கள் மற்றும் வன்புணர்வுகள் தொடர்பாக உரிய விசா ரணை நடத்தி கடுமையான நடவடிக்கை எடுக்க வேண் டும் என ஐ.நா. பாதுகாப்பு சபை தூதர்கள் வலியுறுத்தினர்.

இதைத்தொடர்ந்து, சுவிட்சர்லாந்து தலைநகர் ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை துறை தலைமையகத்தின் சார்பில் மர்சுகி தாருஸ்மன் தலைமையில் சர்வ தேச நடுவர்களை கொண்ட சுதந் திரமான உண்மையறியும்குழு நியமிக்கப்பட்டது. இந்த குழுவினர் வெளியிட்ட அறிக்கையில், 'ரோஹிஞ்யா மக்கள் மீது நடத்தப்பட்ட ராணுவத் தாக்குதல் 'இன அழிப்பு' நோக்கத்தில் நடைபெற்றுள்ளது.

இதற்கு காரணமான மியன்மார் ராணுவ தளபதி மின் அவுங் ஹிலாய்ங் உடனடியாக இராஜினாமா செய்து, பதவியை விட்டு விலக வேண்டும்' என குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின் நகல் மியன்மார் நாட்டு அரசுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. ஆனால், இதுதொடர்பாக மியன்மார் அரசு சார்பில் எந்த கருத்தும் தெரிவிக்கப்படவில்லை. (7)

# ஈரான்-சிரியா இடையே இராணுவ ஒத்துழைப்பு ஒப்பந்தம் கைச்சாத்து

(டமாஸ்கஸ்)

சிரியா மற்றும் ஈரான் நாடுகளுக்கு இடையே இராணுவம் தொடர்பான புதிய ஒப்பந்தம் நேற்று முன்தினம் கையெழுத்தானது.



சிரியாவின் உள்நாட்டு போரில் ஜனாதிபதிக்கு ஆதரவாக ஈரான் நாட்டு இராணுவப் படைகள் போரிட்டு வருகின்றன. சிரியா உள்நாட்டு போரில், அமெரிக்கா, ரஷ்யா போன்ற நாடுகளும், ஐ.எஸ்.போன்ற பயங்கரவாத இயக்கங்களும் போரிட்டு மக்களை இரையாக்கி வருவதாக கருத்து நிலவுகிறது.

இதையடுத்து அண்மையில், சிரியாவில் இருக்கும் ஈரான் படைகளை திரும்ப பெற வேண்டும் என அமெரிக்கா அறிவுறுத்தி இருந்தது. இதற்கு பதிலளித்திருந்த ஈரான், சிரியா ஜனாதிபதியின் வேண்டுகோளை ஏற்று ஈரான் உதவி வருவதாகவும், படைகளை திரும்பப்பெறும் எந்த நோக்கமும் தற்போது இல்லை எனவும் தெரிவித்து இருந்தது.

இந்நிலையில், நேற்று முன்தினம் ஈரானின் பாதுகாப்பு அமைச்சர் அமிர் ஹடாமி அரசு முறை பயணமாக சிரியா சென்றார். அங்கு சிரியா ஜனாதிபதி பஷார் அல்-ஆசாத் மற்றும் மூத்த இராணுவ அதிகாரிகளை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

இந்த பேச்சுவார்த்தையின் முடிவில், இரு நாடுகளுக்கு இடையே இராணுவ ஒத்துழைப்பு தொடர்பாக புதிய ஒப்பந்தம் ஒன்று கையெழுத்திடப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. (7)

# அமெ.சுதந்திரதேவி சிலையில் தீ! பார்வையாளர்கள் வெளியேற்றம்



(நியூயோர்க்)

அமெரிக்காவில் தீவிபத்து காரணமாக சுதந்திர தேவி சிலையை காணவந்த ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர்.

அமெரிக்காவின் நியூயோர்க்கில் உள்ள ஹார்பர் தீவில் சுதந்திர தேவி சிலை உள்ளது. கையில் தீபத்தை ஏந்திய நிலையில் இருக்கும் அந்த சிலை 151 அடி உயரம் கொண்டது.

தீவின் நடுவில் நிறுவப்பட்டிருக்கும் இந்த சிலையை கண்டு ரசிக்க நாள்தோறும் ஏராளமான வெளிநாடு மற்றும் உள்நாட்டு சுற்றுலா பயணிகள் வந்த வண்ணம் உள்ளனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் அங்கு திடீரென தீவிபத்து ஏற்பட்டது. சிலை அமைக்கப்பட்டுள்ள பகுதியில் கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது.

அப்போது அங்கு பயன்படுத்தப்பட்ட 3 புரோடேன் கியாஸ் சிலிண்டர்களில் இருந்து வெளியான தீ பரவியது. இதனால் அங்கு பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டன.

தீவிபத்து காரணமாக சுதந்திர தேவி சிலையை காணவந்த ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். (7)

# இராணுவ இரகசிய முகாம் படுவத்தவில் இருந்தது உண்மை

## அமல் கருணாசேகர ஒப்புதல்



(கொழும்பு)

கம்பஹா- படுவத்தவில் இலங்கை இராணுவத்தின் இரகசிய முகாம் ஒன்று இருந்தது. தமக்குத் தெரியும் என்று இராணுவப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளரான மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகர ஒப்புக்கொண்டுள்ளார்.

கடந்த 2008 ஆம் ஆண்டு மே மாதம் ஊடகவியலாளர் கீத் நொயர் கடத்தப்பட்டு சித்திரவதை செய்யப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்ட சம்பவம் குறித்து நடத்தப்படும் விசாரணைகளின் ஒரு கட்டமாக, மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகர கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

எனினும், அவர் தகவல்களை வெளியிட மறுத்து வருவதாகவும் விசாரணைக்கு ஒத்துழைக்கவில்லை என்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தில் கூறியிருந்தனர்.

இந் நிலையில் நேற்று முன்தினம் இந்த வழக்கு கல்கிஸை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகரவின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி ஷெகான் சில்வா, ஊடகவியலாளர் கீத் நொயர் கடத்தப்பட்ட பின்னர் தடுத்து வைக்கப்பட்டிருந்த இடமான கம்பஹா பதுவத்தவில் இராணுவத்தின் இரகசிய முகாம் ஒன்று இருந்தது பற்றி தமது கட்சிக்காரருக்குத் தெரியும் என்று தெரிவித்தார்.

இதன்போது அரச சட்டத்தரணி லக்மின் கிரிஹகம முன்னிலையாகி அமல் கருணாசேகர தகவல்களை மறைத்து முக்கியமான இராணுவ இரகசியங்களை கண்டறியும் சூழலை உருவாக்கி விட்டார் என்று தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கின் முதல் சந்தேக நபரான மேஜர் புலத்வத்த அளித்துள்ள சாட்சியத்தில் இராணுவப் புலனாய்வுப் பணியகத்தின் வழிகாட்டலின்படியே படுவத்த இரகசிய முகாம் பேணப்பட்டது என்று வெளிப்படுத்தியுள்ளார்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவில் மருதானை திரிபொலி முகாமில் பணியாற்றிய மேஜர் அன்சாரிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர். அதில், தொம்பே இரகசிய முகாம் தொடர்பாக அவர் அனைத்து விபரங்களையும் வெளிப்படுத்தியுள்ளார் என்றும் அரச சட்டத்தரணி கிரிஹகம தெரிவித்தார்.

இதையடுத்து, சட்டத்தரணி ஷெகான் சில்வாவிடம் வழங்கிய தகவல்கள் தொடர்பாக மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகரவிடம் வாக்குமூலம் பெறும்படி குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு நீதவான் உத்தரவிட்டார்.

அத்துடன், செப்டெம்பர் 10 ஆம் திகதி வரை மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகரவை விளக்கமறியலில் வைக்குமாறும் நீதவான் உத்தரவிட்டார். (இ-7)

# ஆட்சிக் கவிழ்ப்பு வெறும் கனவே இந்த அரசை அசைக்க முடியாது

## மகிந்தவுக்கு கிரியெல்ல பதில்



(கொழும்பு)

பட்ஜெட்டின் போது அரசாங்கத்தை கலைக்க மகிந்த ராஜபக்ஷ கனவு கண்டு கொண்டிருக்கும் இந்த தறுவாயில் கூட்டு எதிரணியினர் பத்துப்பேர் அரசாங்கத்துடன் இணைவதற்கான இரகசியப் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றனர் என அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ள வரவு-செலவுத்திட்டத்தின் போது ஆட்சியை கவிழ்க்கப் போவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதுபோன்று இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததிலிருந்து ஆட்சியை கவிழ்ப்பதாக பல தடவை கூறி வந்த போதிலும், ஒரு பிரயோசனமும் இல்லை. ஆட்சியை கவிழ்ப்பதாக பல தடவை கூறியும் மகிந்த ராஜபக்ஷவினால் ஆட்சிக் கவிழ்ப்பு கனவாகவே மாறியுள்ளது. இனிமேலும் இந்த அரசாங்கத்தை அசைக்கவே முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (இ)

# குடிநீர் கோரி மக்கள் வீதி மறியல்





(திருக்கோவில்)

திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தாண்டியடி பகுதியில் மக்கள் குடிநீர் வழங்கக் கோரி பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை கையில் ஏந்தியவாறு வீதியில் அமர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அம்பாறை மாவட்டத்தில் கடுமையான வரட்சி காரணமாக அனைத்து பிரதேசங்களிலும் மக்கள் குடிப்பதற்கும் நீர் இல்லாத நிலையில் துன்பப்பட்டு நிற்கின்றனர்.

இந் நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தாண்டியடி கிராம மக்கள் தமக்கு குடிப்பதற்காவது தண்ணீர் வழங்குமாறு கோரி சுலோக அட்டைகளை தாங்கியவாறு வீதியில் அமர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இவ் ஆர்ப்பாட்டமானது தாண்டியடி பொதுமக்களால் முன்னெடுக்கப்பட்டதுடன் தாண்டியடி பிரதான வீதியில் நீர்க்குடங்களை கையில் ஏந்தியவாறு வீதியில் அமர்ந்து கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தாண்டியடி, சங்கமன் கிராம, உமிறி, நேருபுரம், தங்கவேலாயுதபுரம், காஞ்சிக்குடியாறு காஞ்சிரம்குடா, மண்டானை சாகாமம், குடி நிலம் மற்றும் மணல்சேனை போன்ற கிராமங்களில் வாழும் சுமார் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் இதில் கலந்து கொண்டனர்.

குடிப்பதற்கு நீர் இன்றி பாரிய அவல நிலைமைக்கு ஆளாகியுள்தாகவும் தற்போது காணப்படுகின்ற அதிக வெப்பம் காரணமாக தங்களின் குழந்தைகளுக்கு சுத்தமான குடிநீரைக் கொடுக்க முடியாத துர்ப்பாக்கிய நிலைமையில் தாம் துன்பப்படுவதாகவும் இக் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் தெரிவித்தனர்.

தங்களின் நிலைமைகளைக் கருத்தில் கொண்டு உடனடியாக தங்களுக்கான குடிநீரை வழங்குவதற்கான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர், திருக்கோவில் பிரதேச சபை தவிசாளர் ஆகியோர் மேற்கொள்ளுமாறு கோரிக்கை அடங்கிய மகஜரை அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன், திருக்கோவில் பிரதேச செயலாளர் எஸ்.ஜெகராஜன், திருக்கோவில் பிரதேச சபை தவிசாளர் இ.வி.கமலராஜன் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் மேலும் தெரிவித்தனர். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## அக்கறை காட்டுவது உண்டா?

நம்மைச் சுற்றி இருப்பவர்களைக் கவர்வதற்கு எத்தனையோ வழிமுறைகள் இருக்கின்றன. அவற்றுள் ஒன்று அவர்கள் மீது நாம் காட்டும் அக்கறை.

என் மீது இவருக்கு அக்கறை இல்லை என்று ஒரு குடும்பத் தலைவி தன் கணவர் மீது குற்றம் சாட்டினால் அந்தக் குடும்பத்தில் அமைதிக்கும், இனிமைக்கும் வழியே இல்லை.

கணவன் காலையில் அலுவலகத்திற்குப் புறப்படும் போது மனைவி ''தலை வலிக்கிறது'' என்கிறாள். கணவன் "ஏதாவது மாத்திரை சாப்பிடு சரியாகிவிடும்'' என்று கூறிவிட்டு புறப்பட்டுப் போய் விடுகிறான்.

மனைவிக்குரிய இப் பிரச்சினையை இப்படி அணுகினால் அது நெருக்கத்தை வளர்க்காது. "மாத்திரை இருக்கிறதா? எனக் கேட்டிருந்தால் அது நல்ல நெருக்கம். வாங்கித் தரட்டுமா?'' என்று கேட்டிருந்தால் மிகச் சிறந்த நெருக்கம். வாங்கித் தந்து வாயில் போட்டுத் தண்ணீரையும் கையில் கொடுத்தால் நெருக்கமோ நெருக்கம்!

மனைவி என்பவள் அத்தனை சொந்தங்களையும் விட்டுவிட்டு வந்தவள். கணவன் எனும் இந்த ஒரு தனிமனிதன் நடந்த பாதையில் பின் வந்தவள். இப்படிப்பட்டவளை ஒரு கணவன் எவ்வளவு அக்கறையுடன் கவனிக்க வேண்டும் தெரியுமா?

சரி விடுங்கள்!

அல்லது மாலையில் அவன் வீடு திரும்பியதும் மனைவியிடம் அவனது முதல் கேள்வி தலைவலி இப்போ எப்படி இருக்கு?'' என்பதாக இருக்க வேண்டும். அப்படிக் கேட்டால் அவன் புத்திசாலி. இல்லாவிட்டால் அவன் தொலைந்தான்!

அலுவலகத்திலும் வீட்டிலும் தொலைபேசி வசதி இருந்தால் பன்னிரண்டு மணி அளவில் ''என்ன தலைவலி குறைந்திருக்கிறதா? மாத்திரை சாப்பிட்டாயா?'' என்று கேட்டுவிட்டால் போதும். மாத்திரை சாப்பிடாமலேயே அவளுக்குத் தலைவலி பறந்துவிடும். அவர்களுக்குள் இருக்கும் நல் உறவும் அற்புதமாகிவிடும்.

பிள்ளைகள் என்ன படித்தனர்? இன்று என்ன பாடங்கள் நடத்தப்பட்டன என்று பெற்றோர் காட்டுகிற அக்கறையில்தான் பிள்ளைகளின் படிப்பார்வங்கள் கூடுகின்றன.

நடுத்தெருவில் பார்த்தாலும் அல்லது எங்கு கண்டாலும் அக்கறையாக நாலு கேள்வி கேட்பார்; அவர் வழி வராது என்று நம்மைப் பாராட்டுபவர்கள் உருவானால் அதுதான் நமக்கு நன்மையைச் செய்யும்.

அக்கறை காட்டப்படாத நாய் சாகிறது; தொழில் என்றால் நசிகிறது; நட்பு என்றால் விடுபட்டுப் போகிறது; பணம் என்றால் விரயமாகிறது; பயிர் என்றால் காய்கிறது.

எந்த ஒன்றிலும் நமக்கு அக்கறையில்லை என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்த இடத்தில் நம் நலனுக்கு எதிரான விடயங்கள் தலைதூக்க ஆரம்பித்துவிடும். நமக்கு நாமே செய்து கொள்ளக் கூடிய கெடுதல் இதைவிட வேறு என்ன இருக்க முடியும்?

**லேனா தமிழ்வாணன்**

# மாகாண எல்லை நிர்ணய அறிக்கையின் தோல்விக்குப் பொறுப்பேற்க முடியாது

## அமைச்சர் பைஸர் முஸ்தபா நிராகரிப்பு



(கொழும்பு)

மாகாண சபைகளுக்கான எல்லை நிர்ணய அறிக்கை நாடாளுமன்றில் தோற்கடிக்கப்பட்டமைக்கு தான் பொறுப்பல்ல என மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"எல்லை நிர்ணய அறிக்கையை நானே சபையில் சமர்ப்பித்து, அதற்கெதிராகவும் வாக்களித்தமை தொடர்பில் தற்போது பல்வேறு தரப்பினரும் பல்வேறுபட்ட குற்றச்சாட்டுக்களை முன் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த அறிக்கையை நான் தயாரித்ததாகவும் சிலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நாட்டின் ஜனநாயகம் குறித்து கதைக்கும் போது சில விடயங்களை நாம் சிந்திக்க வேண்டும். ஒரு பிரதேசத்தின் தேர்தல் தொகுதியை வகுப்பதே எல்லை நிர்ணயம் எனப்படுகிறது.

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வரும்முன்னர் நடைமுறையில் இருக்கும் தேர்தல் முறைமையை இல்லாதொழிப்போம் என உறுதிமொழி வழங்கப்பட்டது.

இதற்கமைய, இந்தத் திருத்தச்சட்டத்தை மாற்றியமைத்து, புதிய எல்லைகளை வகுத்து வர்த்தமானியை வெளியிட்டோம். மாகாண சபைத் தேர்தலிலும் விகிதாசார முறைமை மாற்றியமைக்க வேண்டும் என கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

எனினும், இதுதொடர்பிலான சட்டமூலத்தை நிறைவேற்ற வேண்டுமெனில் நாடாளுமன்றின் மூன்றில் இரண்டு பலம் அவசியம் என சட்டமா அதிபர் கூறியிருந்தார். இதனால், சிறுபான்மையினக் கட்சிகளுக்கிடையில் கருத்து மோதல்களும் ஏற்பட்டன.

இதன்போது, அமைச்சர் ரவூப் ஹக்கீம் உள்ளிட்ட சிறுபான்மையினக் கட்சிகள் 50 விகிதம் விகிதாசார முறைமையிலும் 50 விகிதம் தொகுதிவாரிய முறைமையிலும் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும் என வலியுறுத்தினார்கள்.

இதனைத் தொடர்ந்து ஜனாதிபதி தலைமையில் குழுவொன்றும் நியமிக்கப்பட்டது. ஆனால், இந்தக் குழுவின் எந்தவொரு செயற்பாட்டிலும் நான் ஈடுபடவில்லை. அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு 14 நாட்களில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்க வேண்டும் என்று மட்டுமே கூறப்பட்டிருந்தது. அதனைத் தான் நான் செய்தேன்.

இதுதொடர்பில் பேச்சு நடத்த மட்டும் 6 மாதங்கள் தேவைப்பட்டன. ஆனால், கட்சிகளுக்குள் உடன்பாடு ஏற்படாத காரணத்தினால் தான் நாடாளுமன்றில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இறுதியில், இதனை எந்தவொரு உறுப்பீனர்களும்ஏற்றுக்கொள்ளவில்லை.

இந்த விவகாரத்தில் நான் எனது செயற்பாட்டை முழுமையாக செய்து முடித்துள்ளேன். கடந்த மார்ச் 21 ஆம் திகதி இதனை விவாதத்துக்கு எடுத்துக்கொள்வதற்காக நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் இணைக்கப்பட்டது.

எனினும், கட்சிகள் உடன்படாத காரணத்தினால் தான் அது நடக்கவில்லை. இந்த நிலையிலேயே, என்னை அனைவரும் குறைகூறிக் கொண்டிருக்கிறார்கள்" என பைஸர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## மகிந்த,கோத்தாவுடன் மங்கள சந்திப்பு







(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வீட்டுக்கு அமைச்சர் மங்கள சமரவீர சென்றுள்ளார்.

இதன்போது மகிந்த மற்றும் கோத்தபாய ராஜபக்ஷவைச் சந்தித்து கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொண்டுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவின் சகோதரரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் நோக்கில் மங்கள அங்கு சென்றுள்ளார். இதன்போது முன்னாள் ஜனாதிபதி மகிந்தவுடன் உரையாடியதுடன் கோத்த பாயவுடனும்மங்கள நீண்ட நேரம் கலந்துரையாடியுள்ளார். (இ-7)

## மகளின் இறப்பைத் தாங்க முடியாது தாயும் திடீரென மாரடைப்பால் மரணம்

### ஒரே குழியில் சடலங்கள் புதைப்பு

(குருநாகல்)

குருநாகல் மாவட்டம் மெல்சிறிபுர, போகஹபிட்டிய பிரதேசத்தில், 34 வயதுடைய அனுஸா தமயந்தி குமாரி என்ற தாயொருவர், மகளின் திடீர் மரணத்தைக் கேட்டு மாரடைப்பால் உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண்ணின் 14 வயதுடைய மகள் நேத்மி நிஷாதி பெரேரா நீண்ட காலமாக நுரையீரல் நோயால் பாதிக்கப்பட்டு, கடந்த 24 ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

மகளின் பிரேத பரிசோதனைக்குப் பின்னர் கடந்த 25ஆம் திகதி சடலம் வீட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இதன்போது திடீரென மயக்கமுற்று விழுந்த குறித்த பெண்ணை வைத்தியசாலையில் உறவினர்கள் அனுமதித்துள்ளனர். ஆனால் அவர் உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

குறித்த பெண் எவ்வித நோயினாலும் பாதிக்கப்படவில்லை எனவும் அவருக்கு மகளின் இறப்பு அதிர்ச்சியை அளித்துள்ளதால் மாரடைப்பு ஏற்பட்டுள்ளது எனவும் உறவினர்கள் தெரிவித்தனர். தாய் மற்றும் மகளின் சடலங்கள் மெல்சிறிபுரவில் உள்ள பொது மயானத்தில் ஒரே குழிக்குள் புதைக்கப்பட்டதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (இ-7)

## தொடரூந்து பணிப்புறக்கணிப்பு கைவிடல்

### போக்குவரத்து பிரதியமைச்சர் நன்றி தெரிவிப்பு

(கொழும்பு)

தொடரூந்து பணிப்புறக் கணிப்பை கைவிட்டமை தொடர்பில் போக்குவரத்து பிரதி அமைச்சர் அசோக் அபேசிங்க தொடரூந்து தொழிற்சங்கங்ளுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

எனினும் பணிப்புறக் கணிப்பு இடம்பெற்றிருந்தாலும் அதற்கு முகம் கொடுக்க தயாராகவே இருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இன்று நள்ளிரவு முதல் முன்னெடுக்கப்படவிருந்த தொடரூந்து பணிப்புறக்கணிப்பு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் நேற்று முன்தினம் இடம் பெற்ற கலந்துரையாடலுக்கு பின்னர் கைவிடுவதற்கு தொடரூந்து தொழிற்சங்கங்கள் தீர்மானித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## 51 இலட்சம் ரூபாய் மாயம்: சிவில் அமைப்புக்கள் முறைப்பாடு

(கொழும்பு)

எல்லை நிர்ணய அறிக்கை தயாரிப்புக்காக ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து 51 இலட்சம் ரூபாய் மாயமாகியுள்ளதாகவும் அது தொடர்பில் உடனடியாக விசாரணை நடத்த வேண்டும் எனவும் கோரி சிவில் அமைப்புக்கள் சில நேற்று இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளன. (இ)

## யுத்த காலத்தில் மூடப்பட்ட தொழிற்சாலைகள் மீண்டும் திறக்கப்படல் வேண்டும்

### வியாழேந்திரன் கோரிக்கை



(கொழும்பு)

கிழக்கில் யுத்த காலத்தில் மூடப்பட்ட தொழிற்சாலைகள் மீண்டும் திறக்கப்படல் வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வியாழேந்திரன் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலணியின் இரண்டாவது ஒன்றுகூடல், ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது.

குறித்த ஒன்றுகூடலின் போதே நாடாளுமன்ற உறுப்பினர் இந்த வேண்டுகோளை முன்வைத்துள்ளார்.

அதன்படி வாழைச்சேனை கடதாசி ஆலை, ஓட்டுத் தொழிற்சாலைகள், அரச அச்சகம், அரிசி ஆலைகள் என்பன மீள இயங்கச் செய்யப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இதேவேளை, மட்டக்களப்பு, புல்லுமலை பகுதியில் அமைக்கப்பட்டுவரும் குடிநீர்ப் போத்தல் தொழிற்சாலையை தடை செய்யுமாறும் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்த நிலையில், அது தொடர்பாக கவனம் செலுத்துவதாக ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

குறித்த சந்திப்பின் போது நாடாளுமன்ற உறுப்பினர், காணி விடுவிப்பு, படுவான்கரை மக்களுக்கான குடிநீர் பிரச்சினை, காட்டு யானைகளின் அச்சுறுத்தல் காணப்படும் பகுதிகளுக்கு வேலி அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளையும் முன்வைத்தார். (இ-7)

## கூட்டமைப்பு கூட்டு எதிரணி முன் தலைகுனிந்தது

# "பிரதமர் தலைமையிலான மீளாய்வு அறிக்கை ஐ.தே.கவுக்கு சாதகமாகவே அமையும்"- விஜித

(கொழும்பு)

தேர்தலைப் பிற்போடும் நோக்கத்தில் அரசாங்கம் எல்லை நிர்ணய அறிக்கையினை தோல்வியடையச் செய்தது. ஆகவே பிரதமர் தலைமையிலான ஐவர் கொண்ட குழுவின் மீளாய்வு அறிக்கை அரசாங்கத்திற்கு குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சிக்கு சாதகமாகவே அமையும் என மக்கள் விடுதலை முன்னணியின் ஊடகப் பேச்சாளர் விஜித ஹேரத் எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி மன்றத் தேர்தலைத் தொடர்ந்து அனைவரும் குறிப்பாக சிறுபான்மைக் கட்சிகள் புதிய தேர்தல் முறைமைக்கு எதிர்ப்பினை தெரிவித்தனர். அரசாங்கமும் இவ்விடயத்திற்கு விரைவில் தீர்வினை வழங்காமல் காலம் தாழ்த்தி வந்தது. இதன் பெறுபேறு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வில் வெளிவந்தது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, ஐக்கிய தேசிய முன்னணி ஆகியன சூழ்நிலைக்கு ஏற்றாற்போல் தமது கொள்கைகளை மாற்றிக் கொண்டு எல்லை நிர்ணய அறிக்கைக்கு எதிராக வாக்களித்து பிரேரணையை தோல்வியடைய செய்து, கூட்டு எதிரணியின் முன்னிலையில் தலைகுனிந்தது.



இந் நிலையில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான மாற்று வழிமுறையினைக் கையாளும் விதமாக அரசாங்கம் பிரதமர் தலைமையிலான குழுவினை நியமிக்க தீர்மானித்துள்ளது. இக்குழுவின் பரிந்துரைகள் தேர்தலை எவ்வாறு பிற்போட வேண்டும் என்று அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குவதாகவே காணப்படுமே தவிர தேர்தலை விரைவுபடுத்த எவ்வித முன்னேற்றகரமான தீர்மானங்களையும் மேற்கொள்ளாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# உரிய தரப்பினர் கோரினால் கிளைபோசெட் இரசாயனத்தை தடைசெய்ய நடவடிக்கை

## அமைச்சர் நவீன் கூறுகிறார்

(கொழும்பு)

சுகாதார அமைச்சின் ஊடாகவோ அல்லது தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் ஊடாகவோ கிளைபோசெட் இரசாயனத்தை தடைசெய்யுமாறு என்னிடம் கோரினால் அதற்கான நடவடிக்கையினை மேற்கொள்வதாக அமைச்சர் நவீன் திசாநாயக்க தெரிவித்துள்ளார்.



தலவாக்கலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் என்ற ரீதியில் தம்மால் அதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

மனிதனின் வாழ்க்கைக்கு கிளைபோசெட் எனும் இரசாயனம் பாதிப்பை ஏற்படுத்துகின்றது என்ற ஆய்வு அறிக்கையும் தமக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (இ-7)


# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

## எண் 5(புதன்)

## (வியாபார வித்தகன்)

5 ஆம் எண்ணின் ஆதிக்கத்தில் பிறந்தவர்கள் 5,14,23 ஆம் திகதிகளில் பிறந்தவர்களாவர். எந்தவொரு மாதமாக இருந்தாலும் மேற்கண்ட திகதிகளில் பிறந்தவர்கள் 5 எனும் புதன் ஆதிக்கத்தில் பிறந்தவராவார்கள். தூதுவர்கள், கணிதப்பிரியர்கள். நூதனமான கிரகமாக இந்தப் புதன் கிரகம் இருக்கின்றது. எந்தத் துறையிலும் இவர்கள் நுழைந்தால் ஆராய்ச்சிகள் செய்யாமல் விடமாட்டார்கள். பஞ்ச பூதங்கள் ஐந்தும் இந்தப் பிரபஞ்சம் முழுவதையும் ஆட்டிப்படைக்கின்றது. பஞ்ச பாண்டவர்கள் ஐந்து நபர்கள். புலன்கள் ஐந்து. ஜோதிட சாஸ்திரம் கூறும் அங்கங்கள் ஐந்து (பஞ்சாங்கம்). பஞ்சப் பிராண வாயுக்கள், ஐம்புலன்கள், பஞ்சாங்கம், பஞ்சேந்திரியம் இவற்றின் மூலம் ஐந்தின் பெருமைகளை உணரலாம். 5ஆம் எண்ணில் பிறந்தவர்கள் அனைத்துத் துறைகளிலும் மிகச் சுலபமாக முன்னேற முடியும். பொதுஜன தொடர்புடைய தொழிலால் சிறப்படைவார்கள். மக்கள் கூட்டம் அதிகமுள்ள இடமே இவர்களின் எண்ணத்திற்குப் பிடித்த இடமாகும். மிகுந்த சுறுசுறுப்புடன், திடகாத்திரமாக எந்தக் காரியத்திலும் இறங்கித் தன்னம்பிக்கையுடன் வெற்றி பெறுவார்கள். தேவையற்ற காரியத்தில் இறங்கி மாட்டிக் கொள்ள மாட்டார்கள். எப்பொழுதும் எச்சரிக்கையாகவே தன்னை உயர்த்தும் வழிகளில் செல்வார்கள். இவர்களை யாரும் எளிதில் புரிந்து கொள்ள முடியாது.

பேச வேண்டிய இடத்தில் மிகவும் கவர்ச்சிகரமாக பேசி, அமைதியாக இருக்க வேண்டிய இடத்தில் அமைதியாக இருந்து, காரியம் சாதிப்பதில் வல்லவர்கள். சாமர்த்தியசாலிகள். எந்தவொரு காரியத்தையும் உடனே செய்து முடிக்க வேண்டுமென்ற கொள்கை உடையவர்கள். இவர்கள் மூளை மின்னல் வேகத்தில் செயற்படும். பிறரால் செய்ய முடியாத காரியத்தைத் தான் செய்ய வேண்டுமென்று எண்ணுவார்கள். மனதில் உள்ளதை மறைக்காமல் பேசுவதுபோல் நடிப்பார்கள். ஆனால் மறைத்துப் பேசுவார்கள். குழந்தை உள்ளம் கொண்டவர்கள். பிறரைக் கவர்வதில் கைதேர்ந்தவர்கள். ஆடை, ஆபரணம், நறுமணப் பொருட்கள் விடயத்தில் மிகுந்த ஆர்வமுடையவர்கள். சேர்ந்து செய்யும் வாணிபம், மக்களை அரசாட்சி செய்வது இவர்களுக்கு ஒத்துவரும். எல்லோரும் நன்கு அறிந்த மனிதராக இருப்பார்கள். அனைவரையும் வசீகரம், மோகனம் செய்யும் சக்தியுண்டு. புகழ்மிக்கவர்கள். சக்தி உண்டாகும். திடமான, உறுதியான கருத்துக்களை உடையவர்கள். ஆழ்ந்த சிந்தனை வளமிக்கவர்கள். சுறுசுறுப்பானவர்கள். மற்றவரை வேகமாக வேலை வாங்குவார்கள். எதிலும் வேகமாகச் செயற்படுவார்கள். எந்தக் காரியத்திலும் உடனுக்குடன் பலனை எதிர்பார்ப்பார்கள். எல்லாக் கலைகளிலும் நிபுணர்கள் என்று பெயரெடுப்பார்கள். கூர்மையான புத்தியுடையவர்கள்.




புதுப்புது சிந்தனைகள் மனதில் உதித்த வண்ணம் இருக்கும். தன்னுடைய ஆலோசனைகள் மூலம் மற்றவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பார்கள். சீக்கிரம் சீக்கிரம் என்று எதிலும் வேகம் காட்டுவார்கள். மற்றவர்களுக்கு கட்டளைகள் இட்ட வண்ணம் இருப்பார்கள். வாழ்க்கையின் தொடக்கம் முதலே முக்கிய பிரமுகராக வலம் வருவார்கள். விதி வசத்தால் முக்கிய பிரமுகர் ஆவார்கள். உலகம் மறக்க முடியாத சரித்திர சாதனைகள் படைப்பார்கள். உலகமே வியக்கும் தீவிர செயல்களைச் செய்வார்கள். பிறரை முட்டாள் என்றும் தாமதப் புத்தியுடையவர்கள் என்றும் நினைப்பார்கள். எளிதில் எந்த ஒரு விடயத்தையும் கிரகித்துக் கொள்வார்கள். மற்றவர்கள் வெகு நாட்கள் செய்யும் காரியத்தை சில மணி நேரங்களில் செய்து முடித்துப் பாராட்டைப்பெறுவார்கள். தன்னைச் சுற்றி உள்ளவர்களின் தாமத குணத்தால் தான் தன்னுடைய வளர்ச்சிகள் பாதிக்கப்படுவதாக எண்ணுவார்கள். இவர்களில் பலபேர் அதிவேகமாக செயற்பட்டு வெற்றி பெறு வார்கள்.

குழந்தைகள் போல அனைவரிடமும் எளிதில் பழகுவார்கள் எதையும் மறைத்து வைக்கத் தெரியாது. இவர்களின் காதல், விவகாரங்கள் சுற்றி இருப்பர்களுக்கு எளிதில் தெரிந்து விடும். எதையும் சுலபத்தில் சாதித்து விடலாம் என்று உண்மையில் எண்ணுவார்கள். ஆகையால் எவ்வளவு பெரிய காரியத்திலும் தயக்கமில்லாமல் இறங்குவார்கள். சூதாட்டப் பந்தயங்களில் வெற்றி நிச்சயம் என்று இறங்கி விடுவார்கள். பழைமையை வெறுப்பார்கள். பிறர் செய்யாததை தான் செய்ய வேண்டும் என்று எண்ணுவார்கள். புதுமையை எப்போதும் விரும்புவார்கள். புதுமையாகக் கண்டுபிக்கப்படும் பொருட்கள் அனைத்தும் நன்மைக்கு என்று எண்ணுவார்கள். மற்றவர்களைப் போலவே தானும் இருக்க வேண்டும் என்று எண்ணுவார்கள்.

நாகரிகம் தெரிந்தவர்கள். நல்ல மனிதர்கள். சமூக மாறுதலுக்கான கருத்தை மக்கள் மத்தியில் பறைசாற்றி வருவார்கள். சிலர் நவநாகரிக ஆடைகள் அணிந்து மக்களுக்கு நாகரிகத்தைப் புகட்டுவார்கள். எல்லோரும் பாராட்டும் செயலைச் செய்வார்கள். கீழ்த்தரமானவர்கள். அனைவரையும் வஞ்சகம் செய்து சிறிதும் பயம் இல்லாமல் வாழ்வார்கள். பிறருக்கு அஞ்சாது பொய் பேசி வாழ்நாள் முழுவதும் ஏமாற்றியே பிழைப்பு நடத்துவார்கள். பயங்கரமான மோசடிகள் நடக்கும் இடத்தில் இவர்கள் பங்காளிகளாக இருப்பார்கள். உண்மை என்று கூறி பொய்யைத் தவிர எதையும் பேசாத மனிதர்கள். இவ்வெண்ணில் பிறந்து அடிமை வேலை செய்து காலத்தைக் கழிப்பார்கள். சிறு வயது முதல் யாருடன் பழகினாலும் அவர்களின் குணம் இவர்களுக்கு அப்படியே ஒட்டிவிடும். சிறு வயது முதல் நல்ல பழக்கவழக்கத்துடன் வளர்க்காவிட்டால் சமூகம் தண்டிக்கும் செயலை செய்து அரச தண்டனைக்கு ஆளாவார்கள். நல்ல குறிக்கோளுடன் வளர்க்க வேண்டும்.


(தொடரும்....)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

30



“மானவர்மன் வடக்கில் இருப்பதை அறிந்த ஹத்தாட்ட, மானவர்மனைக் கைது செய்ய முயன்றபோது, மானவர்மன் காஞ்சிக்குச் சென்று பல்லவ அரசர்களின் பாதுகாப்பைப் பெற்றுப் பலகாலம் அங்கு தங்கியிருந்து, படைதிரட்டி வந்து, வடக்கில் தங்கியிருந்து அநுராதபுரம் நோக்கிப் படையெடுத்துச் சென்று அரசைக் கைப்பற்றினான். இந் நிகழ்வுகளிலிருந்து வடக்கில் ஒரு வலுவான அரசு இருந்திருக் கின்றது என்பதும் அடுத்து, வட க்கில் இருந்த அரசுக்குக் கட்டுப் பட்டு இருக்கவில்லை என்பதும், பல்ல வர்களுடைய செல்வாக்கு, ஏற்கனவே வடபகுதிப் பிரதேசங்களில் நிலைபெற்று இருந்திருக்கின்றது என்றும் தெரிய வருகின்றது.”

பாளி வரலாற்று நூல்களில் நாகதீப (Negadipa) பற்றி கி.பி. ஐந்தாம் நூற்றாண்டுகளில் குறிப் பிடப்பட்டுள்ளது. மேலும் நாகதீப அரசன் தீபராஜா (Diparaja) எனப் பட்டம் சூடப்பட்டு, நாக நாட்டை ஆண்டதாக பாளி நூல்கள் கூறு கின்றன. மேலும், இதே கால தமிழ்நாட்டுத் தமிழ் இலக்கியங் களில் நாகநாடு என்னும் இடம் தென்னிந்தியப் பிரதேசக் கடலுக்கு அப்பால் இருந்ததாகவும் அங்கு நாகபுரம் என்னும் நகரத்தில் அரச கட்டிலில் இருப்பவர், சமஸ்கி ருதப் பெயரைக் கொண்டு இருந் ததாகவும் கூறப்படுகின்றது. மேலும், கிரேக்க-உரோம வர்த்தகர் களின் பயணக் குறிப்புக்களிலும், தொலமியின் Gro Graphic என்னும் நூலிலும், நாகதீபம் பற்றிக் குறிப் பிடப்பட்டுள்ளது. மேலும், தொல மியின் குறிப்புக்களில் இலங் கையில் (Taprabane), பதின்மூன்று பிரதான கரையோர நகரங்களில் நாகதீபமும் ஒன்று எனக் குறிப் பிடப்பட்டுள்ளது.

எனவே மேற்குறிப்பிட்டப்பட்ட ஆதாரங்களின் அடிப்படையில் நாகர் என்ற ஒரு பிரிவினர் யாழ்ப் பாணக் குடாநாட்டில் கிறிஸ்துவின் ஆரம்ப நூற்றாண்டுகளிலிருந்து முக்கியம் பெற்று இருந்திருக்கின்ற னர் என்பது உறுதியாகின்றது. கி.பி ஒன்பதாம் நூற்றாண்டுகளிலிருந்து நாகர் என்ற பெயர் வரலாற்று மூலாதாரங்களில் இடம்பெற வில்லை. இதனால் நாகர் என்ற பிரிவினர் திராவிட இனத்தைச் சேர்ந்த ஒரு பிரிவினர் என்பதும், அவர்கள் காலப்போக்கில் தமிழ் பேசும் இனக்குழுக்களுடன் கலந்து, கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டுகளின் பின்னர் தமிழர் என்ற பெரும் பிரி வினுள் அடங்கியுள்ளனர் என்றும் கொள்வதில் தவறில்லை. அத் தோடு வடபகுதியில் ஓர் அரச அமை ப்பு வரலாற்றுக் காலத்திலிருந்து ஒரு தனித்தன்மை கொண்டதாக இயங்கி வந்திருக்கின்றது என்ப தும் மேற்கூறப்பட்ட பின்னணியி லிருந்து தெரிய வருகின்றது.

ஆனால், கிழக்கு இலங்கையிலு ள்ள மட்டக்களப்புப் பிரதேசமும் ஒரு சிற்றரசாக, ஏனைய அரசுகள் போல் குறுநில மன்னர்கள் ஆட்சி யின் கீழ் ஒரு தமிழர் பிரதேசமாக இருந்திருக்கின்றது என்பதனை போர்த்துக்கீச ஆவணங்களினூ டாக அறியமுடிகிறது. மட்டக்களப் புப் பிரதேசம் புவியியல் ரீதியாக, தெற்கிலுள்ள பிரதேசங்களுடன் அண்மித்து இருந்ததன் விளை வாக, சிலவேளைகளில் தெற்கி லுள்ள அரசுகளுடன் நட்புறவு பூண் டும், சில சந்தர்ப்பங்களில் வடக் கிலுள்ள அரசுகளுடன் நட்புறவு பூண்டும் செயற்பட்டு வந்திருக் கின்றன.

மேலும், மட்டக்களப்புப் பிரதே சத்தின் சமயம், மொழி, கலை, கலாசாரம், பண்புகள் என்பவற்றை நோக்குமிடத்தும், தொல்லியல் சான்றுகளை நோக்குமிடத்தும்,

## ஓர் இருண்ட வரலாற்றுக்காலம் (கி.மு. 300-கி.பி. 900)

அப் பிரதேசம் சைவசமய மரபுக ளையும், தமிழ்மொழி, தமிழ்க் கலா சாரப் பண்பாடுகளையும் பேணி வந்துள்ளது என்பது வெளிப் படையான வரலாற்று உண்மையா கத் தெரிகின்றது. எனவே, மட்டக் களப்புப் பிரதேசமும், ஒரு தமிழ்ச் சிற்றரசாக ஏனைய வடக்கு, கிழ க்கு, வடமேற்கு பகுதிகளில் இரு ந்த அரசுகள் போன்று இக்கால கட்டத்தில் இருந்திருக்கின்றன.

மேற்குறிப்பிட்ட காலப்பகுதி களில் உத்தரப்பிரதேசம், அதாவது வட இலங்கை எனக் கருதப்படு கின்ற திருகோணமலை, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொ ச்சி மற்றும் யாழ்ப்பாணத் தீபகற் பம் ஆகிய பிரதேசங்களில் உள்ள அரசுகள் எந்தவிதத்திலும் அநுராத புர அரசுக்கோ, தெற்கிலுள்ள அர சுகளுக்கோ அடங்கவில்லை என்ப தும் தெளிவாகத் தெரிகின்றது.

இது பற்றிப் பேராசிரியர் இந் திரபாலா பின்வருமாறு குறிப்பிடு கின்றார்.

“உத்தரதேசத்தைப் பற்றி (வட பிரதேசம்) குறிப்புகளை ஆய்வு செய் தால் அப்பிரதேசம் ஏனைய பிரதேச ங்களைவிட வேறுபட்டதாக இருந் தது என்பதை அறியலாம். அநுராத புர மன்னர்கள் கட்டுப்பாட்டுக்குள் அடங்காத ஒரு பிரதேசமாகப் பலமுறை அதனைக் காணலாம். அநுராதபுர ஆட்சியை எதிர்த்தோர், அங்கு ஆதரவு பெற்றதையும் காண லாம்.முற்பட்ட நூற்றாண்டுகளைப் போலல்லாது, ஆறாம் நூற்றாண்டின் பின், தென்னிந்தியாவிலிருந்து வந்த படைகள், வடபகுதியில் வந்து இற ங்குவதையும் அவதானிக்க முடி கிறது.

அப்படி வந்த படைகள் வடக் கில் தங்கள் அதிகாரத்தை உறுதிப் படுத்தியபின் அநுராதபுரத்தை நோக்கி முன்னேறின. இவற்றை நோக்குமிடத்து, அநுராதபுர ஆட்சி யாளருக்குச் சாதகமான சூழ்நிலை வடபகுதியில் நிலவவில்லை என் பது தெளிவு”

இந்திரபாலாவின் கூற்றுக்கு ஒரு சில முக்கிய வரலாற்று நிகழ்வுகளை உதாரணங்களாகக் காட்டலாம். கி.பி.619-628 காலப்பகுதியில் அநு ராதபுர அரசனாக இருந்த ஸிலா மேகவண்ண என்பவனை வெற்றி கொள்ள எண்ணிய ஸிரிநாக என்ப வன் வடபிரதேசத்தில் உள்ள தமிழர் படையின் உதவியுடன் வடபிரதேசத் திலிருந்து அநுராதபுர அரசை நோக்கி படையெடுத்துச் சென்றுள் ளான். மேலும், கி.பி.650-659களில் அநுராதபுர மன்னனாக இருந்த இர ண்டாம் கஸ்ஸப மன்னன் இறந்த போது, அவனின் மகன் மான வர்மன் அரசுரிமை பெற விரும்பிய போது, அநுராதபுர அரசில் குழப் பங்கள் எழுந்தன. அதனால் மான வர்மன் வடக்கு நோக்கிப் புறப் பட்டு அவ் அரசுகளிடம் அடைக் கலம் புகுந்தான். இவ் வேளையில் ஹத்தாட்ட என்பவன் அநுராதபுர அரசைக் கைப்பற்றினான். மான வர்மன் வடக்கில் இருப்பதை அறி ந்த ஹத்தாட்ட, மானவர்மனைக் கைது செய்ய முயன்றபோது, மானவர்மன் காஞ்சிக்குச் சென்று பல்லவ அரசர்களின் பாதுகாப் பைப் பெற்றுப் பலகாலம் அங்கு தங்கியிருந்து, படைதிரட்டி வந்து, வடக்கில் தங்கியிருந்து அநுராத புரம் நோக்கிப் படையெடுத்துச் சென்று அரசைக் கைப்பற்றினான். இந் நிகழ்வுகளிலிருந்து வடக்கில் ஒரு வலுவான அரசு இருந்திருக் கின்றது என்பதும் அடுத்து, வட க்கில் இருந்த அரசுக்குக் கட்டுப் பட்டு இருக்கவில்லை என்பதும், பல்லவர்களுடைய செல்வாக்கு, ஏற்கனவே வடபகுதிப் பிரதேசங் களில் நிலைபெற்று இருந்திருக் கின்றன என்றும் தெரிய வருகி ன்றது.

கி.பி ஆறாம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில் எழுச்சிபெற்ற பல்லவப் பேரரசு இலங்கையின் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில், அரசி யலிலும், பார்க்க மதம், மொழி, கலை, வர்த்தகம், நீர்ப்பாசனம் தொடர்பாகப் பலமான தாக் கங்க்ளையும், செல்வாக்கினையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

அரசியல் நிகழ்வுகளை அறிந்து கொள்வதற்கான ஆதாரங்கள் மிகக் குறைவாகவே காணப்பட்டா லும், மேற்கூறப்பட்ட விடயங்கள் தொடர்பாக சற்று அதிகமாகவே ஆதாரங்கள் கிடைக்கப் பெற்றுள் ளன. எனவே, இவைகளின் துணை கொண்டு சில அரசியல் நிகழ்வு களை மேலும் தெளிவுபடுத்துவ தோடு, சமயம், மொழி, கலை, வர்த்தகம், நீர்ப்பாசனம் சம்பந்தப் பட்ட விடயங்களையும் கூடுதலாக அறிந்துகொள்ள முடியும்.

முதலில் மதம் தொடர்பான செல்வாக்கினையும், நிகழ்வுகளை யும் நோக்குவது பொருத்தமானது. கி.பி.300-கி.பி.900 ஆண்டு காலப்பகுதிகளில் மதம் சம்பந்த மாக இரு முக்கிய வரலாற்று நிகழ் வுகளைத் தொல்லியல், கட்டட, சிற்பக்கலை, இலக்கிய ஆதாரங் கள் காட்டி நிற்கின்றன. முதலா வதாக, பௌத்தம் வடக்கு, கிழ க்குப் பிரதேசங்களில் ஒரு முக்கிய மதமாகத் தமிழர்கள் மத்தியில் நிலவியமை, இரண்டாவதாக, குறிப்பாக சைவசமயம், அதன் வரலாற்றுக்கால ஆரம்ப வளர்ச்சி நிலையிலிருந்து, கி.பி. ஆறாம் நூற்றாண்டுகளில் இப்பிரதேசங் களில் மக்கள் மத்தியில் மிகச் செல் வாக்குப் பெற்ற மதமாக வளர்ச்சி அடைந்து காணப்பட்டமை.

(தொடரும்)

# குழந்தையின் திடீர் மரணத்தால் வைத்தியசாலையில் பதற்றம்



(கண்டி)

கண்டி, கலஹா வைத்தியசாலையில் சிகிச்சைக் காக அனுமதிக்கப்பட்ட குழந்தையொன்று திடீரென மரணமானதால்கண்டி கலஹா வைத்தியசாலை வளாகத்தில் நேற்று நண்பகல் பதற் றமான சூழல் நிலவியது.

கண்டி, கலஹா வைத் தியசாலையில் சுகவீனமுற்ற நிலையில் அனுமதிக்கப்பட்ட குழந்தையொன்று நேற்றுக்காலை திடீரென மரணித்துள்ளது. இதையடுத்து அப்பகுதியில் பெருமளவான பொது மக்கள் ஒன்று திரண்டதால் பெரும் பதற்றநிலை தோன்றியுள்ளது.இந்நிலையில் அங்கு ஏற்பட்டுள்ள பதற்றத்தை கட்டுப்படுத்துவதற்கு பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டனர். (இ-7)

# களத்தில் இறங்கிய காங்கிரஸ்

(கிண்ணியா)

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் களத்தில் இறங்கி வேலை செய்து வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல்லா மஹரூப் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல்லா மஹ்ரூபின் கிண்ணியா அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தொகுதி வாரியா? விகிதாசாரமாகவா? அல்லது கலப்பு தேர்தல் முறையா? என மாகாண எல்லை நிர்ணய அறிக்கை தொடர்பில் பல்வேறு சந்தேகங்கள் மக்கள் மத்தியிலும், அரசியல் வாதிகள் மத்தியிலும் எழுந்திருந்தன.

இந்த நிலையில் குறித்த ஆணைக்குழு மூலமாக அமைச்சர் பைஸர் முஸ்தபாவினால் நாடாளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை முன்வைக்கப்பட்ட அறிக்கைக்கு எதிராகவே எமது கட்சி உட்பட பலரது வாக்குகளும் வழங்கப்பட்டு தோற்கடிக்கப்பட்டன.

இதனை முன்வைத்த அமைச்சர் பைஸர் முஸ்தபா கூட எதிர்த்து வாக்களித்திருந்தார்.

அதிலும் புது மையான ஒரு விடயம் தான் கலப்பு முறை என பல தட வைகள் நாடாளுமன்றில் உரத்துப் பேசிய மக்கள் விடுதலை முன்னணி வாக் கெடுப்பில் கலந்து கொள்ள வில்லை என்பது பலருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கிழக்கு மாகாண அதிகாரத்தை மாகாண சபையில் கைப்பற்றுவதற்கும், ஏனைய மாகாண சபையில் அதிக ஆசனங்களைப் பெறும் நோக்கிலும் களத்தில் இறங்கி வேலை செய்து வருகி றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## திருமண வீட்டில் வன்முறை

# இராணுவச் சிப்பாயின் காதை கடித்துத் துண்டாடிய சிப்பாய்

(கொழும்பு)

திருமண வீட்டில் இராணுவ கோப்ரலின் காதை மற்றொரு இராணுவ கோப்ரல் கடித்த சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

கொட்டவெஹேர பிரதேசத்தில் இடம்பெற்ற திருமண வீட்டிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த இராணுவ கோப்ரல்களும் விசேட விருந்தினர்களாக திருமண வீட்டிற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இதன் போது தகராறு ஒன்று ஏற்பட்டு, இறுதியில் காதைக் கடித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மிகவும் கடுமையாக காது கடிக்கப்பட்டமையினால், காது துண்டிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

துண்டிக்கப்பட்ட காதை அறுவைச்சிகிச்சை செய்து மீண்டும் இணைப்பதாக வைத்தியர்கள் உறுதியளித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மற்றைய கோப்ரலை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். (இ-7)

# திட்டமிட்டவாறு பரீட்சை நடைபெறும்

(கொழும்பு)

பேராதனைப் பல்கலைக் கழகத்தின் பொறியியல் பீடத்தின் பரீட்சையை திட்டமிட்டவாறு நடத்துவ தற்கு தேவையான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பேராதனை பல்கலைக் கழகத்தின் உபவேந்தர் உபுல் திசாநாயக்க தெரிவித்தார்.

தற்போது பேராதனை பல்கலைக்கழகத்தின் சகல பீடங்களினதும் கல்வி நடவடிக்கைகள் வழமை போன்று நடைபெறுவதுடன் 2017/2018 ஆம் கல்வி யாண்டிற்காக மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

எனினும் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவிற்கு அதற்கான பெயர்ப் பட்டியல் இன்னமும் கையளிக்கப்படவில்லை.

எதிர்வரும் ஒக்டோபர் மாத இறுதியிலோ அல்லது நவம்பர் மாத முதல் வாரத்திலோ சகல பீடங்களுக்கும் புதிய மாணவர்கள் சேர்த் துக் கொள்ளப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# இயந்திரக் கோளாறால் இடைநடுவே நிறுத்தப்படும் வாகனங்களால் விபத்து

(கொழும்பு)

தெற்கு அதிவேக வீதியில் பிரவேசிக்கும் வாகனங்களுள் 80- 90 வாகனங்கள் தினமும் இயந்திரக் கோளாறுக்கு உட்படுவதாக, தெற்கு அதிவேக வீதிப் பராமரிப்பு மற்றும் வழி நடத்தல் பணிப்பாளர் சமன் ஓபநாயக்க தெரிவித்துள்ளார்.

எனவே அதிவேக வீதிக்குள் வாகனங்கள் செலுத்தப்படுவதற்கு முன்னதாகவே, வாகனங்களில் எரிபொருள், டயர், பற்றரி, உராய்வு உள்ளிட்டவை குறித்து பரிசோதனை செய்த பின்னர் வாகனங்களை அதிவேக வீதிகளில் செலுத்துமாறும் சாரதிகளிடம் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வாகனங்களில் ஏற்படும் திடீர் இயந்திரக் கோளாறு காரணமாக, அதிவேக வீதியில் நிறுத்தப்படும் வாகனங்களால் அதிகளவு விபத்துகள் ஏற்படுகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாடசாலை விடுமுறைக் காலம் 'என்பதால், நாளொன்றிற்கு 75 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாகனங்கள் தெற்கு அதிவேக வீதியூடாகப் பயணிப்பதுடன், இவற்றுள் 90 இற்கும் அதிகமான வாகனங்கள் இயந்திரக் கோளாறு காரணமாக இடைநடுவில் நிறுத்தப்படுவதாகவும் சமன் ஓபநாயக்க தெரிவித்தார். (இ-7)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1496

## கல்யாணி

தலைவருக்குக் கணக்குப் பார்க்கவே தெரியாது... அவரைப் போய் கணக்கில புலி என்கிறீர்களே



புலிக்கு மட்டும் கணக்கு தெரியுமாக்கும்...

## கிருஷ்ணா

எதுவுமே பேசாம இருந்தால் ஏதாவது பேசுன்னு சொல்றாங்க



ஏதாவது பேசினால் எதிர்த்துப் பேசாதே! என்கிறார்கள்... என்ன வாழ்க்கைடா இது...

## காந்தி

அதிர்ஷ்டம் ஒரு தடவைதான் கதவைத் தட்டுமாம். தட்டும் போது நாம ஒருவேளை வெளியூர் போயிருந்தா



பக்கத்து வீட்டுக்குப் போயிடுமா?

## கல்கி

ஏழைகளின் உழைப்பால் கட்டடங்கள் உயர்ந்து நிற்கின்றன! ஆனால்....



அவர்கள் வாழ்க்கை மட்டும் தரைமட்டத்திலேயே இருக்கின்றது

## கீர்த்தனா

வாழ்க்கை ஒரு கேள்வி அதற்கு யாரும் பதில் தர முடியாது...



மரணம் ஒரு விடை. அதற்கு யாரும் கேள்வி கேட்க முடியாது...!

## காமினி


கடந்த தலைமுறையின் வைபர், வட்ஸ் அப், பேஸ்புக், டுவிட்டர் எல்லாமே இதுதான்...




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இலங்கையில் இனப்படுகொலை! பிரிட்டன் நாடாளுமன்றில் விவாதம்

## நாடு கடந்த தமிழீழ அரசு நடவடிக்கை






(லண்டன்)

பாரிய மனித உரிமை மீறல்கள் மற்றும் இனப்படு கொலைகளில் ஈடுபட்டு வந்த இலங்கை அரசாங்கத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு பிரித்தானியா பரிந்துரைக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ள நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் அதற்கான விவாதம் ஒன்றினை பிரிட்டன் பாராளுமன்றில் கொண்டு வருவதற்கான முயற்சிகளில் லண்டனில் தீவிரமாக செயற்பட்டு வருகின்றது.

அந்த வகையில் லண்டன் ஈஸ்ட்ஹம் மகாலட்சுமி ஆலய தேர்த்திருவிழாவின் போது நாடு கடந்த தமிழீழ அரசின் செயற்பாட்டாளர்கள் மக்களிடம் கையெழுத்து சேர்க்கும் பிரசார பணியில் ஈடுபட்டுள்ளனர்.

2015 ஆம் ஆண்டு, மார்ச் மாதத்தில் 30/1 என்ற பிரேரணை ஐ.நா மனித உரிமைகள் பேரவையினால் நிறைவேற்றப்பட்டது.

அதன் கீழ் இலங்கை அரசாங்கத்துக்குப் பல கடப்பாடுகள் இருந்தன. அவற்றை நிறைவேற்ற இரண்டு ஆண்டு காலம் கொடுக்கப்பட்டது. ஆனால், அவற்றை நிறைவேற்றாமலேயே இலங்கை அரசாங்கம் இருந்து வந்தது.

2017 மார்ச் மாதத்தில் ஜெனிவாவில் நடைபெற்ற மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பிலான தீர்மானம் ஒன்று (34/1) நிறைவேற்றப்பட்டது. இதற்கு இலங்கை அரசாங்கமும் அனுசரணை வழங்கியது. பொறுப்புக்கூறலை உள்ளடக்கிய நிலைமாறு கால நீதிப் பொறிமுறையை உருவாக்குவதற்கு மேலும் இரண்டு வருடகால அவகாசம் இதன்போது வழங்கப்பட்டது. அதன் பிற்பாடும் அரசாங்கம் இன்னமும் ஐ.நா. பிரேரணையில் வழங்கப்பட்ட கோட்பாடுகளை நிறைவேற்ற முடியாத நிலையில் இருப்பது போர்க் குற்றவியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளமையை தெட்டத் தெளிவாக சர்வதேசத்துக்கு எடுத்துக்காட்டுகிறது .

இந்நிலையில் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவிருக்கும் ஐ.நா. கூட்டத் தொடரில் **UNHCR 30/1** மற்றும் 34/1 தீர்மானங்களின் பரிந்துரைகளை இலங்கை அரசு நிறைவேற்றத்தவறிய பட்சத்தில் இலங்கை அரசை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு பரிந்துரை செய்யும்படி பிரித்தானிய அரசாங்கத்தை வலியுறுத்தி மனுவொன்றை சமர்ப்பிப்பதற்கான கையொப்பமிடும் நடவடிக்கைகளை பிரித்தானியாவின் பலபாகங்களிலும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. (இ-7)

# புதையல் அகழ்வில் ஈடுபட்ட பெண் உட்பட எட்டுப்பேர் கைது

(கொழும்பு)

அகுணுகொலபெஸ்ஸ, ஜதுர பகுதியில் தொல்பொருட்களை பெற்றுக்கொள்ளும் நோக்கில் புதையல் அகழ்வில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பெண்ணொருவர் உட்பட எட்டுப் பேரை பொலிஸார் நேற்று அதிகாலை கைது செய்துள்ளனர்.

தனியார் தோட்டம் ஒன்றில் புதையல் அகழ்வில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து புதையல் அகழ்விற்காகப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் மற்றும் பூசைப் பொருட்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் தெனியாய மற்றும் அகுணுகொலபெஸ்ஸ ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் அகுணுகொலபெஸ்ஸ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# அடையாள அட்டைகளை வழங்க அறவிடப்படும் கட்டணங்களில் திருத்தம்

(கொழும்பு)

ஆட்களைப் பதிவு செய்து அடையாள அட்டைகளை வழங்குவதற்காக அறவிடப்படும் கட்டணங்களானவை எதிர்வரும் முதலாம் திகதியிலிருந்து திருத்தம் செய்யப்பட்டுள்ளதென ஆட்களைப்பதிவு செய்யும்திணைக்களம் அறிவித்தலொன்றை விடுத்துள்ளது.

இதன்படி 15 வயது பூர்த்தியடைந்து முதற்தடவையாக அடையாள அட்டைக்கென விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளுக்கு 100 ரூபாவும் அடையாள அட்டையின் திருத்திய இணைப் பிரதியொன்றை வழங்குவதற்கு 250 ரூபாவும் மற்றும் காணாமல்போன அடையாள அட்டையொன்றின் இணைப் பிரதியை வழங்குவதற்கு 500 ரூபாவும் அறவிடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# அறுவடைக்குப் பின்னரான பாதிப்பால் 18,000 மில்லியனை இழக்கும் இலங்கை

## சீன நிபுணர்கள் குழு கண்டறிவு

(கொழும்பு)

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் பயிர்ச்செய்கை அறுவடைக்குப் பின்னர் ஏற்படும் இழப்புக்களால், வருடாந்தம் 18 ஆயிரம் மில்லியன் ரூபாயை இலங்கை இழப்பதாக, சீன நிபுணர்கள் குழு மேற்கொண்ட ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது.

மிருகங்களால் பயிர்களுக்கு ஏற்படும் பாதிப்பு, அறுவடையின் போது ஏற்படும் பாதிப்புகள், அறுவடைக்கு உரிய விலை கிடைக்காமை போன்ற காரணங்களால், உற்பத்திகளை கைவிடுதல் போன்றவற்றையும் இந்த இழப்புக்கான காரணமாக அமைவதாக, குறித்த ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது.

இலங்கையில் அறுவடைக்குப் பின்னர் ஏற்படும் பாதிப்புக்கள் குறித்து, சீனா அரசாங்கத்தின் செலவில் ஆய்வுகளை முன்னெடுத்த சீனப் பிரதிநிதிகள் குழு கடந்த வாரம் இது தொடர்பான அறிக்கையை விவசாயத் துறை அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் கையளித்தது. அதில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள், அறுவடைக்குப் பின்னராக ஏற்படும் பாதிப்புக்களைத் தடுப்பதற்கான விடயங்கள் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை, இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் பயிர்களில் வருடாந்தம் 30 சதவீதமான பயிர்ச்செய்கை மிருகங்களால் சேதமாக்கப்படுவதுடன், வரட்சி உள்ளிட்ட காரணங்களால் 30 சதவீதம் அழிவடைந்து, 40 சதவீத உற்பத்திகளே மனித பாவனைக்குப் பெற்றுக் கொள்ளப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-7)

# போதையில் கலகம்; அறுவர் கைது

நவத்தேகம பகுதியில், மதுபோதையில் பொது இடத்தில் கலகம் விளைவித்த குற்றச்சாட்டில் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். நவத்தேகம நகர எல்லைப் பகுதியில் வைத்து நேற்று முன்தினம் இரவு இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மது போதையில் இருந்த இவர்கள், குறித்த பகுதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த உபகரணங்கள் மற்றும் பூச்சாடிகளை சேதப்படுத்தியுள்ளனர். அத்தோடு அஞ்சல்பெட்டியை காலால் உதைத்துள்ளனர் எனவும் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் (இ-7)

# சர்ச்சைகளைத் தொடர்ந்து மீண்டும் அரைக்கம்பத்தில் அமெரிக்க தேசிய கொடி



(வோஷிங்டன்)

மறைந்த அமெரிக்க செனட்டர் ஜோன் மக்கெய்னுக்கு மரியாதை செலுத்தும் வகையில் வெள்ளை மாளிகை உள்ளிட்ட சகல அரச கட்டடங்களிலும் மீண்டும் அரைக் கம்பத்தில் தேசிய கொடி பறக்கவிடப்பட்டுள்ளது.

மக்கெய்னுக்கு துக்கம் அனுஷ்டிக்கும் முகமாகவும் அமெரிக்க தேசிய கொடி வெள்ளை மாளிகை உட்பட அனைத்து அரச கட்டடங்களிலும் சனிக்கிழமையன்று அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டன.

ஊனினும்இராணுவத்தலைமையகமான பென்டகன், அமெரிக்க உச்ச நீதிமன்றம் மற்றும் வெள்ளை மாளிகை போன்ற இடங்களில் மீண்டும் முழுக் கம்பத்தில் பறக்கவிடுமாறு ட்ரம்ப் உத்தரவிட்டிருந்தார்.

ட்ரம்ப்பை கடுமையாக விமர்சிப்பவர்களுள் மக்கெய்னும் ஒருவர். அந்தவகையில், முன்விரோதம் காரணமாகவே ட்ரம்ப் இவ்வாறு இவ்வாறான உத்தரவை பிறப்பித்துள்ளாரென கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து, மக்கெய்னின் உடல் நல்லடக்கம் செய்யப்படும் தினமான செப்டெம்பர் 2 ஆம் திகதி வரை வெள்ளை மாளிகை உள்ளிட்ட சகல அரச கட்டடங்களிலும் அமெரிக்க தேசிய கொடி அரைக் கம்பத்தில் பறக்கவிடப்படுமென ட்ரம்ப் நேற்று அறிவித்தார்.

ஒரே கட்சியைச் சேர்ந்த ட்ரம்ப் மற்றும் மக்கெய்னுக்கு இடையே கடந்த காலங்களில் பல தருணங்களில் கருத்து மோதல்கள் இடம்பெற்றுள்ளன. அனைவரும் நினைப்பதைப் போன்று மக்கெய்ன் போர் நாயகனாக கருதப்பட வேண்டியவர் இல்லை என கடந்த தேர்தல் பிரசாரத்தின்போது ட்ரம்ப் குறிப்பிட்டிருந்தார்.

இதனால் ட்ரம்ப் கடும் விமர்சனங்களுக்கு உள்ளாகியிருந்தார். அதன் பின்னணியிலேயே தற்போதும் செயற்பட்டுள்ளார் என்றும் விமர்சிக்கப்பட்டது.

எவ்வாறெனினும், தனக்கும்மக்கெய்னுக்கும்இடையே அரசியல் ரீதியான கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் நாட்டிற்கு அவர் ஆற்றியுள்ள சேவைகளை மதிக்கிறேன் என ட்ரம்ப் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (7)

## இம்ரான்கானின் அடுத்த அதிரடி

# பாகிஸ்தான் விமான நிலையங்களில் இனிமேல் முக்கிய பிரமுகர்களுக்கு அரசமரியாதை இல்லை



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் விமான நிலையங்களில் முக்கிய பிரமுகர்களுக்கு அளிக்கப்படும் அரச மரியாதை இரத்து செய்யப்படுவதாக இம்ரான் கான் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானின் புதிய பிரதமராக இம்ரான்கான் பதவி ஏற்றதில் இருந்து அதிரடி சிக்கன நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

ஆடம்பர பிரதமர் அறை தேவையில்லை என்று கூறி இராணுவ செயலாளரின் 3 படுக்கை அறையுடன் கூடிய வீட்டில் தங்கியுள்ளார். தன்னுடன் 2 பணியாளர்களை மட்டுமே உதவிக்கு வைத்திருக்கும் அவர் 2 அரச கார்களை மட்டுமே பயன்படுத்துகிறார்.


ஆளுநர் மாளிகைகளில் ஆடம்பர வசதி கூடாது என உத்தரவிட்டுள்ளார். ஜனாதிபதி, பிரதமர், இராணுவ தலைமை தளபதி மற்றும் அரச அதிகாரிகள் விமானத்தில் முதல் வகுப்பு பயணத்துக்கு சமீபத்தில் தடை விதித்தார்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் மற்றொரு அதிரடி நடவடிக்கை மேற்கொண்டார். பொதுவாக விமான நிலையங்களில் அரசியல்வாதிகள், நீதிபதிகள் மற்றும் இராணுவ அதிகாரிகளுக்கு அரச மரியாதை வழங்கப்பட்டு வருகிறது.

இனி அவர்களுக்கு விமான நிலையத்தில் அரச மரியாதை வழங்கக் கூடாது. மீறி சிறப்பு மரியாதை அளித்தால் விமான நிலைய குடியுரிமை அதிகாரி மற்றும் ஷிப்ட் பொறுப்பு அதிகாரியும் பதவி நீக்கம் செய்யப்படுவர் என உள்துறை அமைச்சகம் கடும் உத்தரவு பிறப்பித்துள்ளது. (இ-7)

# சிறுவர் அரங்கம்

## பணமூடை



மூன்னொரு காலத்தில் பணக்கார பிரபு ஒருவருக்கு இரண்டு மகன்கள் இருந்தனர். மூத்தவன் அமுதன் மிகவும் நல்லவன். இரக்க குணமுடையவன். இளையவன் யாசகன் மிகவும் கெட்டவன்.

கொஞ்ச நாட்களில் பணக்காரர் இறக்கவே அண்ணனும் தம்பியும் வியாபாரத்தைக் கவனித்து வந்தனர். அவர்கள் இருவரும் ஒருமுறை ஒரு கிராமத்திற்குப் போய் தமக்கு வர வேண்டிய ஆயிரம் பவுண்களை வசூலித்தனர்.

அதனை ஒரு பையில் போட்டுக் கொண்டு இருவரும் ஊர் திரும்ப ஆற்றங்கரைக்கு வந்து சேர்ந்தனர். படகுக்காரன் எங்கோ போயிருந்ததால் தம்பியிடம் பண மூடையைக் கொடுத்து விட்டுச் சற்று கண்மூடித் தூங்கினான் அண்ணன். இதற்குள் தம்பி அதே போல ஒரு பண மூடையில் கற்களை வைத்துக் கட்டி எடுத்து ஒளித்துக் கொண்டான்.

சற்று நேரத்திற்கெல்லாம் படகுக்காரன் வரவே தம்பி தன் அண்ணனை எழுப்பி அவரோடு படகில் ஏறி உட்கார்ந்தான். படகும் கிளம்பியது. படகு நடு ஆற்றில் போகும் போது தம்பி ஒரு மூடையை எடுத்து ஆற்றில் நழுவ விட்டு, "ஐயோ அண்ணா பண மூடை ஆற்றில் விழுந்துவிட்டதே" எனக் கூறினான்.

"போனால் போகட்டும். அது நம் பணமாக இருந்தால் நமக்கே கிடைக்கும் எனக் கூறினான் அமுதன். தம்பியும் தான் தந்திரமாக ஆயிரம் பவுண்களை தட்டி விட்டதாக எண்ணி மகிழ்ந்தான். ஆனால், அவன் அவசரத்தில் ஆற்றில் போட்டது பண மூடையைத்தான். கற்களை வைத்துக் கட்டிய மூடைதான் அவனிடம் இருந்தது. அந்த ஆற்றில் ஒரு பூதம் இருந்தது. தம்பி மூடையை ஆற்றில் போட்டதும் ஒரு மீனை உடனே விழுங்கச் சொல்லி கட்டளை இட்டது அது. மீனும் அப்பூதம் சொன்னபடி செய்தது.

பூதம் தம்பி செய்த மோசடியை புரிந்து கொண்டது. எனவே, அந்தப் பண மூடையை எப்படியும் அண்ணனிடம் சேர்த்து விட எண்ணி மூட்டையை விழுங்கிய மீன் எங்கும் போகாதபடி காவல் காத்தது.

அண்ணனும் தம்பியும் காசிக்கு வந்து தம் வீட்டை அடைந்தனர். தம்பி வீட்டில் தனியாக ஓரிடத்திற்குப் போய் தன்னிடமிருந்த மூடையை அவிழ்த்துப் பார்த்தான். அதில் கற்கள் இருப்பதைக் கண்டு, "ஐயோ! நான் அண்ணனை ஏமாற்ற எண்ணி நானே ஏமாந்தேனே..." என எண்ணி மனம் புழுங்கினான்.

அன்று சில மீனவர்கள் ஆற்றில் வலை போட்ட போது பூதம் மீனவராக மாறி அந்த மீனை எடுத்துக் கொண்டு அண்ணனின் வீட்டுக்குச் சென்றது. அண்ணன் அவன் கேட்டபடி ஒரு பவுணைக் கொடுத்து அந்த மீனை வாங்கிக் கொண்டார். அதனை அவர் தன் மனைவியிடம் கொடுக்கவே அவள் அதனை இரண்டாக நறுக்கினாள். அதன் வயிற்றிலிருந்து பண மூடை வெளியே விழுந்தது.

அதைக் கண்டு திகைத்தான் அமுதன். "இது நம் பணமே. இதனை நம்மிடம் கொடுக்கவே இந்த மீனவன் வந்திருக்கிறான். இவனுக்கு எப்படி இது தெரிந்தது?" என எண்ணி ஆச்சரியப்பட்டான்.

அப்போது, "அமுதா... நீ மிகவும் நல்லவன். இந்த ஊரில் உள்ள ஏழைகளுக்கு நிறைய உதவிகளைச் செய்கிறாய். ஒரு முறை நீங்கள் படகில் சென்ற போது உன் கையில் இருந்து நழுவிய உணவு பொட்டலத்தை உண்டேன்.

"அது எனக்கு மிகுந்த பலத்தைக் கொடுத்தது. அதனால் தான் உன்னுடைய பணமூடையை உன் தம்பி வேண்டுமென்றே தூக்கி வீசிய போது அதை விழுங்கும்படி இந்த மீனுக்கு கட்டளை கொடுத்தேன். அந்த மீனையும் எடுத்துக் கொண்டு வந்தேன். நல்லவர்களுக்கு எல்லாமே நல்லதாய்த்தான் நடக்கும்..." என்று சொல்லி மறைந்தது.

அதைக் கேட்டு மகிழ்ந்தான் அமுதன். மறைக்காமல் அதில் பாதியான ஐந்நூறு பவுண்களைக் தன் தம்பியிடம் கொடுத்தார். தம்பியும் தனது அண்ணனுடைய கால்களில் விழுந்து மன்னிப்புக் கோரினான்.

## பழமொழிகள்

☆அரசன் இல்லாத நாடு அச்சில்லாத தேர்.

☆அற்ப அறிவு அல்லற் கிடம்.

☆அன்பு இருந்தால் ஆகாததும் ஆகும்.

☆அன்னைக்கு உதவாதவன் யாருக்கும் ஆகான்.

☆இட்டுக் கெட்டார் எங்குமே இல்லை.

☆உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும்.

☆ஊசியைக் காந்தம் இழுக்கும் உத்தமனைச் சிநேகம் இழுக்கும்.

☆எதை அடக்காவிட்டாலும் நாக்கை அடக்கவேண்டும்.

☆கற்கையில் கல்வி கசப்பு, கற்றபின் அதுவே இனிப்பு.

☆குணம் பெரியதேயன்றிக் குலம் பெரியதன்று.

☆கொற்றவன் தன்னிலும் கற்றவன் மிக்கோன்.

☆சொல்வல்லவனை வெல்லல் அரிது.

## அறிவியல் பொதுஅறிவு

✦காந்தத் தன்மையற்ற பொருள்- கண்ணாடி

✦இரும்பின் தாது - மாக்னடைட்

✦ பதங்கமாகும் பொருள் - கற்பூரம்

✦ அணா கடிகாரத்தில் பயன்படும் உலோகம் - சீசியம்

✦அறைவெப்ப நிலையில் தன் வடிவத்தை மாற்றிக் கொள்ளாதது - கிரிக்கெட் மட்டை

✦நீரில் கரையாத பொருள் - கந்தகம்

✦நாம் பருகும் சோடா நீரிலுள்ள வாயு - காபனீரொட்சைட்

✦நீரில் கரையாத வாயு எது - நைதரசன்

✦ பனிக்கட்டி நீராக மாறும் நிகழ்ச்சி - உருகுதல்

✦ நீரில் சிறிதளவே கரையும் பொருள் - ஸ்டார்ச் மா

✦ மின்காந்தம் பயன்படும் கருவி - அழைப்பு மணி

✦வெப்ப கடத்தாப் பொருள் - மரம்

✦திரவ நிலையிலுள்ள உலோகம் - பாதரசம்

✦ ஒளியைத் தடை செய்யும் பொருள் - உலோகத்துண்டு

✦இலேசான பொருட்களை கனமான பொருட்களிலிருந்து பிரித்தெடுக்கப் பயன்படும் முறை - புடைத்தல்

✦ஒரு படித்தான தன்மை கொண்டது - தூய பொருட்கள்

✦கலவைப்பொருள் என்பது - பால்

✦கலவையில் கலந்துள்ள பகுதிப் பொருட்களின் நிறம், அளவு, வடிவம் ஆகியவை வேறுபட்டால் அவற்றைப் பிரிக்கக் கையாளும் முறை - கையால் தெரிந்து எடுத்தல்

✦கடல்வாழ் செடிகளின் சாம்பலில் இருந்து தயாரிக்கப்படும் சேர்மம் - சோடியம் கார்பனேட்

✦தீயின் எதிரி என அழைக்கப்படுவது - காபனீரொட்சைட்

✦ போலிக் கூரைகள் தயாரிக்கப் பயன்படும் வேதிச் சேர்மம் - பாரிஸ் சாந்து

✦அசிட்டிக் அமிலத்தின் நீர்க் கரைசல் - வினிகர்

✦ கீட்டோன் வரிசையின் முதல் சேர்மம் - அசிட்டோன்

✦40 சதவீத பார்மால்டிஹைடின் நீர்க்கரைசலின் பெயர் - பார்மலின்

✦ 100 சதவீத மறுசுழற்சி செய்யப்படும் பொருள் - கண்ணாடி

✦100 சதவீத தூய எத்தில் அற்ககோல் - தனி அற் ககோல் என அழைக்கப்படுகிறது.

✦பளபளப்புக்கொண்ட அலோகம் - அயோடின்

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2018.08 29

❖1782-திருகோணமலை கோட்டையை பிரெஞ்சுக்காரர் பிரித்தானியரிடம் இருந்து மீளக் கைப்பற்றினர்.

❖1825-பிரேசிலைத் தனிநாடாக போர்த்துக்கல் அறிவித்தது.

❖1944-அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி ஜி.ஜி.பொன்னம்பலம் தலைமையில் அமைக்கப்பட்டது.

❖1995-முல்லைத்தீவுக் கடற்பரப்பில் இலங்கைக் கடற்படையினரின் ஜரிஸ் மோனா என்ற கப்பலை விடுதலைப் புலிகள் மூழ்கடித்தனர்.

### பிறப்புகள்

❖1863-கிடுகு வெங்கட ராமமூர்த்தி, தெலுங்கு எழுத்தாளர், மொழியியலாளர், வரலாற்று ஆய்வாளர் (இ. 1940)

❖1887-ஜீவராஜ் மேத்தா, குஜராத் மாநிலத்தின் முதலாவது முதலமைச்சர் (இ. 1978)

❖1887-எவுப்ராசியம்மா எலுவத்திங்கல், கேரளக் கத்தோலிக்கப் புனிதர் (இ. 1952)

❖1905-தியான் சந்த், இந்திய வளைதடிப் பந்தாட்ட வீரர் (இ. 1979)

❖1913-கே. ஜெயக்கொடி, இலங்கைத் தமிழ் அரசியல்வாதி

❖1926-க. இராசாராம், தமிழக அரசியல்வாதி(இ. 2008)

❖1943-விஜயகுமார், தென்னிந்தியத் திரைப்பட நடிகர்

❖1949-கே.ராதாகிருஷ்ணன், இந்திய அறிவியலாளர்

❖1959-அக்கினேனி நாகார்ஜுனா, தென்னிந்தியத் திரைப்பட நடிகர்

❖1977-விஷால், திரைப்பட நடிகர்

### இறப்புகள்

❖1976-காஜி நஸ்ருல் இஸ்லாம், வங்காளக் கவிஞர், புல்லாங்குழல் மேதை (பி. 1899)

❖1985-எம்.கே.ராதா, இந்தியத் தமிழ் நாடக, திரைப்பட நடிகர் (பி. 1910)

❖1987-நயி அல் அலி, பாலத்தீன கேலிச்சித்திர ஓவியர் (பி. 1938)

❖2008-ஆர்வி, தமிழக எழுத்தாளர் (பி. 1919)

❖2008-ஆர்வி, தமிழக எழுத்தாளர், பத்திரிக்கையாளர் (பி. 1918)

❖2009-மாவை வரோதயன், ஈழத்து எழுத்தாளர்

❖2017-ஏ.எச்.எம்.அஸ்வர், இலங்கை அரசியல்வாதி (பி. 1937)

### சிறப்பு நாள்

❖அணுவாயுத சோதனைகளுக்கு எதிரான பன்னாட்டு நாள்

❖தேசிய விளையாட்டு நாள்(இந்தியா)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 100 | 100 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 105 | 100 | 95 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 150 | 140 | 140 | 130 | 150 | 180 |
| தக்காளி | 50 | 60 | 80 | 60 | 80 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 40 | 40 | 40 | 30 |
| கோவா | 140 | 140 | 140 | 100 | 160 | 160 |
| கரட் | 250 | 380 | 360 | 280 | 400 | 400 |
| பூசணி | 80 | 70 | 50 | 55 | 80 | 50 |
| புடோல் | 60 | 60 | 80 | 40 | 80 | 60 |
| வாழைக்காய் | 120 | 100 | 80 | 80 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 100 | 90 | 100 | 80 | 120 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 115 | 100 | 90 | 120 | 100 |
| பாகற்காய் | 150 | 160 | 120 | 110 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 50 | 50 | 40 | 40 | 80 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 80 | 60 | 120 | 100 |
| பயற்றங்காய் | 100 | 80 | 80 | 50 | 80 | 60 |
| லீக்ஸ் | 140 | 120 | 120 | 90 | 100 | 140 |
| பீற்றூட் | 80 | 90 | 80 | 60 | 80 | 100 |
| கறிமிளகாய் | 140 | 150 | 160 | 100 | 160 | 200 |
| முருங்கைக்காய் | 100 | 80 | 80 | 60 | 80 | 80 |
| போஞ்சி | 250 | 200 | 180 | 120 | 200 | 250 |
| கத்தரிதம்புள்ள | 100 | 70 | — | 70 | 100 | 50 |
| கீரை - 1பிடி | 30 | 25 | 30 | 20 | 30 | 20 |
| தேசிக்காய் | 60 | 70 | 60 | 70 | 60 | 20 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 40 | 45 | 30-50 | 30-60 |
| இராசவள்ளி | 150 | 140 | 150 | 120 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 150 | 130 | 120 | 160 | 200 | 100 |
| முள்ளங்கி | 40 | 60 | 60 | 30 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 40 | 20 | 30 | 40 |
| வல்லாரை | 15 | 40 | 20 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 70 | 50 | 130 | 80 | 20 |

நல்லது போனால் தெரியும்.
கெட்டது வந்தால் புரியும்.

– யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஜெனிவாவைச் சமாளிக்க அபிவிருத்திச் செயலணியா?

சிங்கள ஆட்சியாளர்கள் காலத்துக்கு காலம் நம்மை ஏமாற்றுகின்றனர் என்பது தெரிந்த உண்மை.

எனினும் அந்த ஏமாற்றங்களைப் புரிந்து கொள்ளாமல் நம் அரசியல் தலைமை நடந்து கொள்கிறதா? என்றால் இல்லை. தமிழ் அரசியல் தலைமைக்கும் தெரிகிறது எனும்போது தனித்து தமிழ் மக்கள்தான் ஏமாறுகிறார்கள் என்பது நிஜமாகிறது.

இதை நாம் கூறும்போது, சிங்கள ஆட்சியாளர்கள் ஏமாற்றுகிறார்கள் என்று தெரிந்தும் நம் தமிழ் அரசியல் தலைமை எதற்காக அரசாங்கத்துடன் இணைகிறது என்ற கேள்வி எழும்.

இங்குதான் நேர்மையான அரசியல் தலைவர்களின் பஞ்சத்தை தமிழினம் அனுபவிக்கின்றது எனக் கூறிக் கொள்ள முடியும்.

ஆம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலருக்கு இரண்டு கோடி ரூபாய் இலஞ்சமாக வழங்கப்பட்டது என்று கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் பகிரங்கமாகக் கூறியிருந்தார்.

அவர் கூறியது சரி; பிழை என்பதற்கப்பால், கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தான் சார்ந்த கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தலைக்கு இரண்டு கோடி ரூபாயை இலஞ்சமாகப் பெற்றுக் கொண்டனர் எனக் கூறும்போது,

அதனை நிறுதிட்டமாக நிராகரிப்பது சம்பந்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் கடமையாக இருந்திருக்க வேண்டும்.

ஆனால், பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனின் குற்றச்சாட்டை கவனத்தில் எடுக்காததுபோல் கூட்டமைப்பு நடந்து கொண்டது.

இதன் அடுத்த கட்டமாக, கூட்டமைப்பு செல்வாக்கையும் பணத்தையும்தான் எதிர்பார்க்கிறது என வடக்கு மாகாண முதலமைச்சர் கடந்த ஒரு சில தினங்களுக்கு முன்னர் கூறியிருந்தார்.

இவ்வாறு முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை பார்க்கும்போது, அபிவிருத்திச் செயலணியில் பங்குபற்றுவதன் பின்னணி என்னவாக இருக்கும் என்ற ஊகங்கள் தவிர்க்க முடியாததே.

அதாவது அபிவிருத்திச் செயலணியில் பங்கேற்பது என்பது உண்மையில் அபிவிருத்தி கருதியதாக இருந்தாலும் குற்றச்சாட்டுக்களும் செயலணியின் போக்கும் பாதகமாக இருக்கும்போது, உண்மையான சிந்தனையும் ஐய வினாவுக்கு உட்படவே செய்யும்.

எதுவாயினும் அபிவிருத்திச் செயலணி இலங்கை அரசை ஜெனிவாவில் காப்பாற்றுவதற்கானது என்று தமிழ்ப் பற்றாளர்கள் கூறிக் கொள்ளும் அதேநேரம், வடக்கு கிழக்கு அபிவிருத்தியில் படையினரும் பங்கேற்பதால் அவர்கள் மீதான போர்க்குற்ற விசாரணை என்பது அர்த்தமற்றதாகி; இலங்கைப் படையினர் தமிழ் மக்களுக்காக மிகப்பெரும் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கின்றனர் என்பதாக நிலைமை மாறும்.

இதற்காகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அபிவிருத்திச் செயலணியில் பங்கேற்கிறது என்ற கருத்து முன்வைக்கப்படுகிறது.

தவிர, சின்னஞ்சிறு பிள்ளைகளிடம் உங்கள் அப்பா ஆனந்தசுதாகரனை விடுதலை செய்வேன் என்று உறுதியளித்த ஜனாதிபதி அதனைச் செய்யவில்லை எனும்போது, சம்பந்தருக்கு வழங்கிய அபிவிருத்தி என்ற உத்தரவாதத்தை மட்டும் நிறைவேற்றுவார் என்று எப்படி நம்ப முடியும் என்ற கேள்வியை முன்வைப்போர்,

ஜனாதிபதியைப் பொறுத்தவரை குழந்தைகளும் முதியவர்களும் ஒரே நிலைதான் எனத் தெரிகிறது என்கின்றனர்.

# அரசாங்கத்தின் செயற்பாடு தொடர்பில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது

## நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில

சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை ஊடாக, சிங்கப்பூரின் குப்பைகள் மட்டுமன்றி, ஐரோப்பிய நாடுகளின் குப்பைகளும் நாட்டுக்குள் கொண்டுவரப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக ஒருங்கிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினரான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில், நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை ஊடாக அங்குள்ள குப்பைகள் இங்கு வரும் என நாம் ஆரம்பத்தில் கூறியபோது, இந்த அரசாங்கத்தினர் எம்மை விமர்சித்தார்கள்.

ஆனால், சிங்கப்பூரின் குப்பைகள் இலங்கையில் கொட்டுவதற்கான பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. சிங்கப்பூர் தனது குப்பைகளின் பெரும்பாலானவற்றை சீனாவுக்கே ஏற்றுமதி செய்து வந்தது.

எனினும், 2018 யூலை மாதம் முதலாம் திகதி முதல், வெளிநாட்டுக் குப்பைகளை இறக்குமதி செய்யக் கூடாது என சீனா தீர்மானித்ததையடுத்து அந்தச் செயற்பாடு தற்போது நிறுத்தப்பட்டுள்ளது.

அதேபோல் வியட்நாம், தாய்லாந்து, மலேசியா போன்ற நாடுகளும் சுற்றாடல் பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு இதே தீர்மானத்தை எடுத்துள்ளன.

இதனால், சிங்கப்பூருக்கு மட்டுமன்றி, அமெரிக்கா உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளில் குப்பை முகாமைத்துவம் தொடர்பில் தற்போது பாரிய பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.

இந்தநிலையில், இந்த சுதந்திர வர்த்தக உடன்படிக்கை ஊடாக, சிங்கப்பூரின் குப்பை மட்டுமன்றி, ஐரோப்பிய நாடுகளின் குப்பைகளும் மில்லியன் டொன் அளவில், சிங்கப்பூர் ஊடாக இலங்கைக்கு வரக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது.

அதேநேரம், சிங்கப்பூரேனும் ஒப்பந்தத்தின் ஊடாகத் தான் குப்பைகளை அனுப்பவுள்ளது. ஆனால், இந்தியாவோ எவ்வித உடன்படிக்கையும் இன்றி தமது நாட்டின் மருத்துவக் கழிவுகளை தற்போது கடல் வழியாக இலங்கைக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறது.

இதுதொடர்பில், எந்தவொரு முறைப்பாட்டையும் அரசாங்கம் இதுவரை செய்யவில்லை. இந்திய அரசாங்கத்துக்குக் கூட இந்த விடயம் தொடர்பில் அறிவிக்கப்படவில்லை.

இவ்வாறான நிலையில் தான் அரசாங்கத்தின் செயற்பாடு தொடர்பில் எமக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

வெளிநாடுகளின் குப்பைகளை நாட்டுக்குக் கொண்டு வரும் நோக்கம் அரசாங்கத்துக்கு உண்மையாக இல்லையென்றால், சிங்கப்பூர் ஒப்பந்தத்தின் ஊடாக நாட்டுக்குள் சுதந்திரமாக கொண்டுவரப்படும் பொருட்களின் பட்டியலில் இருந்து குப்பை வர்க்கங்களை உடனடியாக நீக்க வேண்டும் என்று நாம் அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறோம் என தெரிவித்துள்ளார். (ம)

# மதுபோதையில் பொது இடத்தில் குழப்பம் விளைவித்தவருக்கு 5 ரூபாய் தண்டம்

## யாழ்.நீதவான் நீதிமன்றம் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பொலிஸ் பிரிவில் மதுபோதையில் பொது இடத்தில் குழப்பம் விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட மூவருக்கு தலா 5 ரூபாய் தண்டப் பணம் விதித்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டது.

மதுபோதையில் பொது இடத்தில் குழப்பம் விளைவித்தவர்களுக்கு மதுவரிச் சட்டத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டால் 2 ஆயிரம் ரூபாய்வரை தண்டம் அறவிடப்படும் நிலையில், யாழ்பபாணம் பொலிஸாரால் 1866ஆம் ஆண்டு பொலிஸ் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதால், குற்றவாளிகள் மூவரிடம் தலா 5 ரூபாய் மட்டும் தண்டம் அறவிடப்பட்டது.

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவில் மதுபோதையில் பொது இடத்தில் குழப்பம் விளைவித்த மூவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர கள் மூவருக்கும் எதிராக யாழ்ப்பாணம் நீதிவான் நீதி மன்றில்நேற்று முன்தினம் திங்கட கிழமை தனித்தனியே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் முன்னிலையில் வழக்குகள் விசாரணைக்கு வந்தன. குற்றஞ்சாட்டப்பட்ட மூவருக்கும் குற்றப்பத்திரம் வாசித்துக் காண்பிக்கப்பட்டது. அவர்கள் மூவரும் தமது குற்றத்தை ஏற்றுக் கொண்டனர்.

அதனடிப்படையில் மூவருக்கும் பொலிஸ் சட்டத்தின் அடிப்படையில் தலா 5 ரூபாய் தண்டப்பணம் விதித்து நீதிவான் கட்டளையிட்டார். (ம)

# புளியங்குளம் பகுதியில் மாட்டுடன் கார் விபத்து

## மாடு சம்பவ இடத்திலேயே பலி

வவுனியா புளியங்குளம் பகுதியில் நேற்றிரவு 7.00 மணியளவில் மாட்டுடன் மோதுண்டு கார் விபத்துக்குள்ளானது.

வவுனியாவிலிருந்து ஏ9 வீதியுடாக யாழ் நோக்கி பயணித்த கார் புளியங்குளம் 205ம் மைல்கல்லுக்கு அருகே மாட்டுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இவ் விபத்தில் விபத்துக்குள்ளாகிய மாடு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தது.

காரில் பயணம் மேற்கொண்டவர்களுக்கு எவ்வித உயிர்ச்சேதங்களும் ஏற்படவில்லை என்பதுடன் காரின் முற்பகுதி பகுதியளவில் சேதமடைந்துள்ளது. (ம-281)

# வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதிக்கு திடீர் இடமாற்றம்

வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி அல் ஹாபில் என்.எம்.மொகமெட் அப்துல்லாஹ், மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதியாக இடமாற்றப்பட்டுள்ளார். வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதியாக யாழ்ப்பாணம் குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதி இராமநாதன் கண்ணன் மாற்றம் பெறுகிறார்.

இந்த இடமாற்றம் வரும் செப்ரெம்பர் முதலாம் திகதி சனிக்கிழமை நடைமுறைக்கு வரும் வகையில் என நீதிச் சேவை ஆணைக்குழுவால் வழங்கப்பட்டுள்ளது.

மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதி தாவூத் லெப்பை அப்துல் மனாப், யாழ்ப்பாணம் குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதியாக இடமாற்றப்படுகிறார்.

மேல் நீதிமன்ற நீதிபதியாக பதவியுயர்வு பெற்ற அல் ஹாபில் என்.எம். மொகமெட் அப்துல்லாஹ், கடந்த மே 14ஆம் திகதி வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-9)

# மணவாளக்கோல பெருவிழாவும் மணிக்கூட்டுக்கோபுர திறப்பும்

(யாழ்ப்பாணம்)

சுண்டுக்குளி சாமுண்டாபிகா சமேத ஞானவைரவர் ஆலய மகா கும்பாபிஷேக மணவாளக்கோலப் பெருவிழா இன்று மாலை 5 மணிக்கு ஆரம்பமாகி 6.30 மணிக்கு நிறைவு பெறுவதுடன் அதனைத் தொடர்ந்து மாலை 6.30 மணிக்கு மணிக்கூட்டுக்கோபுர திறப்பு விழாவும் இடம்பெறும். (இ-7)

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### நம்பிக்கையுடன் இரு



✦ கடவுளைச் சரணடைந்தவனுக்கு வாழ்வில் தளர்ச்சியே உண்டாவதில்லை.

✦ மனிதனின் நம்பிக்கை தீவிரமாகி விட்டால் அவன் விருப்பம் விரைவில் நிறைவேறி விடும்.

✦ பணத்தால் மனிதனின் குணம் மாறி விடும். அதனால், அதில் அதிக நாட்டம் வைப்பது நல்லதல்ல.

✦ உடலால் துன்பம் நேர்ந்தாலும், உண்மையான பக்தனின் மனதை துன்பம் நெருங்க முடியாது.

✦ கடவுளைப் பற்றிய உண்மையை உணர்ந்தவன் எப்போதும் மகிழ்ச்சியில் திளைப்பான்.

# கோப்பாய் விளையாட்டுக்கழகத்தை வீழ்த்தி மல்லாகம் ஸ்ரார் அணி சம்பியன்



கோப்பாய் விளையாட்டுக் கழகம் நடத்திய அணிக்கு 8 பேர் 6 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி அண்மையில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் மல்லாகம் ஸ்ரார் விளையாட்டுக்கழகமும் கோப்பாய் விளையாட்டுக்கழகமும் பலப்பரீட்சை நடத்தின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கோப்பாய் விளையாட்டுக்கழக அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மல்லாகம் ஸ்ரார் அணி 6 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகளை இழந்து 51 ஓட்டங்கள் பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் ரமேஸ் ஆட்டமிழக்காமல் 20 ஓட்டங்களையும் கஜன் 12 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் பிரணவன், சிந்து ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

52 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கோப்பாய் விளையாட்டுக்கழக அணி 3 விக்கெட்டுகளை இழந்து 46 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதன்மூலம் 6 ஓட்டங்களால் மல்லாகம் ஸ்ரார் அணி வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை வென்றது.

பந்து வீச்சில் சஜன், ரமேஸ், யூவின் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக மல்லாகம் ஸ்ரார் அணியின் ரமேஸ் பெற்றுக் கொண்டதுடன் தொடர் நாயகனாக மல்லாகம் ஸ்ரார் அணியின் கஜன் பெற்றுக் கொண்டார்.

தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரராக மல்லாகம் ஸ்ரார் அணியின் டிலான் பெற்றுக் கொண்டார். (க)

# சுவாரஸ்யமாக நடைபெற்ற நீர்மூழ்கி செஸ் போட்டி



இங்கிலாந்தின் லண்டன் நகரில் நடந்த நீர்மூழ்கி செஸ் சம்பியன்ஷிப் போட்டியில், Rajko Vujatovic என்ற வீரர் வெற்றி பெற்றார்.

லண்டன் நகரில் நீர்மூழ்கி செஸ் சம்பியன்ஷிப் போட்டி நடத்தப்பட்டது. இதற்காக நீச்சல் குளம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த போட்டியின் விதிமுறைகள் என்னவென்றால், வீரர்கள் காந்தப்பலகை மற்றும் காந்த செஸ் காய்களைப் பயன்படுத்தி, நீருக்குள் மூழ்கி விளையாட வேண்டும்.

ஒவ்வொரு முறை காயை நகர்த்துவதற்கும் நீரில் மூழ்கும் வீரர் ஒருவர், காயை நகர்த்தாமல் வெளியே வந்து மூச்சு வாங்கக்கூடாது. அத்துடன் வீரர்கள் எந்தவித சுவாசக் கருவிகளையும் பயன்படுத்தக்கூடாது. இந்த ஆட்டம் ஒரு மணிநேரம் மட்டுமே நடைபெறும். மிகவும் வித்தியாசமானதாகவும், விறுவிறுப்பாகவும் நடைபெற்ற இந்த போட்டியில் வீரர்கள் ஆர்வத்துடன் விளையாடினர். போட்டியின் முடிவில் Rajko Vujatovic என்ற இங்கிலாந்து வீரர் சம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றார். இந்த போட்டி குறித்து அவர் கூறுகையில், 'எதிலும் உலக சம்பியனாக இருப்பதில் நான் பெருமைப்படுகிறேன். நீர்மூழ்கி செஸ் சம்பியனாக இருப்பது எவ்வளவு பெரிய விடயம். இது முற்றிலும் பத்தமாக இருந்தது. எனினும் முதல் மற்றும் முன்னனியில் இருப்பது வேடிக்கையாக உள்ளது' என தெரிவித்துள்ளார். (க)

# துவாரகசீலனின் பொறுப்பான துடுப்பாட்டம்; யாழ்.பல்கலைக்கழக அணி அரையிறுதியில்

ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழகம், யாழ்.மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கிரிக்கெட் அணிகளுக்கிடையில்30 ஓவர்கள்மட்டுப்படுத்தப்பட்ட சுற்றுப் போட்டியொன்றை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்தி வருகின்றது.

இந்தச் சுற்றுப்போட்டியின் முதல் காலிறுதிப் போட்டி கடந்த 26 ஆம் திகதி நடைபெற்றது. இதில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணியை எதிர்த்து சென்ரல் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி, துவாரகசீலனின் பொறுப்பான ஆட்டத்தால் 30 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகளை இழந்து 210 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் ப.துவாரகசீலன் 87, ஜனநதன் 26 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் சென்ரல் அணி சார்பாக சுபதீஸ் 3 விக்கெட்டுகளையும், தீபன் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். சென்ரல் அணி போராடிய போதும் கைவசம் விக்கெட்டுகள் இல் லாமையால் தோல்வியைத் தழுவியது. 29.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து; 178 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 32 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில் மதுசன் 26, சலிஸ்ரர்ஸ் 28, கிருசாந்தன் 30 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி சார்பாக ஜனார்த்தன் 3, லோகதீஸ்வரன் மற்றும் கஜன் ஆகியோர் தலா 2 விக் கெட்டுகளைக்கைப்பற்றினர் (சு-26)



வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபனின் 2018 ஆம் ஆண்டுக்கான நிதியொதுக்கீட்டின் கீழ் அரியாலை காந்தி விளையாட்டுக்கழகத்துக்கு ரூ.40 ஆயிரம் பெறுமதியான விளையாட்டுச் சீருடைகள் வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபனால் விளையாட்டுக்கழக நிர்வாகிகளிடம் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

கடந்த திங்கட்கிழமை யாழ். மாநகரசபையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன், யாழ்.மாநகரசபையின் பிரதி மேயர் து.ஈசன், யாழ்.மாநகர சபை உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள், மாநகரசபை உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (க)



கரும்புலிகளின் நினைவு சுமந்த உதைபந்தாட்ட கிண்ணம் 25 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வு கடந்த 25ஆம் திகதி டென்மார்க்கில் நடைபெற்றது.

நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக டென்மார்க் தேசியக் கொடி, தமிழீழத் தேசியக்கொடி ஏற்றப்பட்டது. அதன் பின்பு தமிழீழ மண்ணின் விடியலுக்காய் தம்மை வெடியாக்கி வீரகாவியமான அனைத்து கரும்புலி மாவீரர்களையும் நெஞ்சில் நிறுத்தி விளையாட்டுவீரர்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் மக்கள் ஈகைச்சுடர், மலர்வணக்கம், அகவணக்கமும் செலுத்தினார்கள். அதனைத்தொடர்ந்து உதைபந்தாட்டம் ஆரம்பமானது. ஐரோப்பாவின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்து போட்டியில் கலந்து கொண்டார்கள். உதைபந்தாட்ட போட்டியானது மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றது. டென்மார்கிலிருந்தும் பல விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றின.

# நல்ல கிரிக்கெட்டை விளையாடினோம் அதனால்தான் வெற்றி கிட்டியது

## பசுமை நினைவுகளுடன் சனத்

1996 உலகக் கிண்ணத்தை வென்று இலங்கை அணி, உலக அணிகளுக்குச் சவால் விடுத்துக் கொண்டிருந்த தருணம் அது.

மேலும், இலங்கை அணியைக் கண்டாலே அனைவருக்கும் ஒரு பயம் கலந்த எரிச்சலும், தேவையற்ற ஏளனமும் இருந்த காலகட்டம். ஜெயசூர்யா, ரொமேஷ் கலுவிதரன, அரவிந்த டி சில்வா ஆகியோர் எதிரணியை கதிகலங்கச் செய்து கொண்டிருந்தனர்.

அப்போது உலகக் கிண்ணத்தை வென்று 2 ஆண்டுகள் ஆனபின்பு கூட இலங்கையை இங்கிலாந்து டெஸ்ட்



தொடருக்கு அழைக்கவில்லை, பின்னர் ஒரேயொரு டெஸ்ட் போட்டி கொண்ட தொடருக்கு அழைத்தது.

இப்போட்டியின் முதல் இன்னிங்சில் இங்கிலாந்து 445 ஓட்டங்கள் எடுக்க இலங்கை அணி 591 ஓட்டங்கள் குவித்து அதிர்ச்சியளித்தது. தொடர்ந்து ஆடிய இங்கிலாந்து 2ஆவது இன்னிங்சில் 181 ஓட்டங்களுக்கு சுருண்டது. முத்தையா முரளிதரன் 65 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்டுகளைச் சாய்த்தார். வெற்றிக்குத் தேவையான 37 ஓட்டங்களை 5 ஓவர்களில் ஜெயசூர்யா முடித்தார்.

இப்போட்டி குறித்து நினைவுகூர்ந்த சனத் ஜெயசூர்யா, அப்போது எங்களுக்கு எதிராக ஒரு டெஸ்ட் போட்டியில் ஆடுவதைக்கூட நேர விரயம் என்று இங்கிலாந்து நினைத்தது.

நாங்கள் ஏதோ பித்துப் பிடித்த நபர்கள் என்றும் அனாயாச மட்டை சுழற்றிகள், கன்னாபின்னாவென்று அடிப்பவர்கள் என்ற பெயர் இருந்தது.

இந்தப் போட்டிக்கு முன்பாக நான் சரியாக ஆடவில்லை.

ஆனால் அணித்தலைவர் பக்கபலமாக இருந்தார்.

இங்கிலாந்து அணியினரும் என்னை வெறும் அனாயாச மட்டைச் சுழற்றி. டெஸ்ட் போட்டிகளில் தாங்கமாட்டார் என்றெல்லாம் கருத்து கூறியதும் எனக்கு உத்வேகமூட்ட இந்த டெஸ்ட்டில் நிரூபிக்க வேண்டும் என்று முடிவெடுத்தேன்.

நல்ல கிரிக்கெட்டை ஆடினோம், உண்மையான கிரிக்கெட் ஷொட்களை ஆடினோம். இதனால் எங்களுக்கு வெற்றி சுலபமானது என நினைவுகூர்ந்துள்ளார். (க)

## காணி விடுவிப்பு...

அமைச்சின் தகவல்கள் இதனைத் தெரிவிக்கின்றன.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 522 ஏக்கர் காணிகளை விடுவிப்பதற்காக படைத்தரப்பினர் அடையாளப்படுத்தி இருக்கின்றனர்.

எனினும் அந்த காணிகளில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ உட்கட்டமைப்பினை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு பல கோடி ரூபாய்கள் கோரப்பட்டிருந்தன.

அவ்வாறு கோரப்பட்ட நிதியில் ஒரு பாதி கிடைக்கப்பெற்றுள்ள நிலையில், எஞ்சிய தொகையும் கிடைக்கப்பெற்றால் அவை விடுவிக்கப்படும் என்று இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

ஆனால் அதற்கான நிதியைப் பெற்றுக் கொள்வதில் சிக்கல் இருப்பதாக மீள்குடியேற்றத்துறை அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கான நிதியைக் கோரி அமைச்சரவையில் முன்வைக்கப்படுகின்ற அமைச்சரவைப் பத்திரங்களும், நிதியில்லை என்று காரணம் காட்டி நிராகரிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம)

## வடக்கில் குடிப்பரம்பலை...

சித்தார்த்தன் எம்.பி குற்றம் சுமத்தியுள்ளார்.

முல்லைத்தீவில் மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் பெயரில் மேற்கொள்ளப்பட்டு வரும் சிங்களகுடியேற்றங்களை தடுத்து நிறுத்த கோரி நேற்றுக் காலை முல்லைத்தீவில் மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இப் போராட்டத்தில் பங்கு பற்றி உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த நாடு சுதந்திரமடைந்த நாள்தொடக்கம் சிங்கள தலைமைகள் மிகத்தெளிவான கொள்கையுடன் வடகிழக்கில் இருக்கக்கூடிய தமிழ் மண்ணை முழுமையாக குடிப்பரம்பலை மாற்றவேண்டும் என்ற நோக்கத்துடன் அம்பாறையில் கல்ஓயா திட்டத்தில் ஆரம்பித்து சுதந்திரம் அடை ந்தவுடன் அன்றைய பிரதமராக இருந்த டி.எஸ்.சேனநாயக்க அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு அது இன்று வரை தொடர்ந்து 70 ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றது.

இந்த வெலிஓயா திட்டம் மூலம் எங்கள் தாயகபூமியை இரண்டு கூறாக ஆக்கிவிடலாம் என்ற ஒரு நினைப்பில் இந்த அரசாங்கமும் இதற்கு முன்னர் இருந்த அரசாங்கமும் நடவடிக்கையினை எடுத்துவருகின்றது. இந்தபேரணியில் உள்ள மக்களை கண்டால் அவர்கள் நினைப்பினை மாற்றிக்கொள்வார்கள்.

இவ்வளவு பெருந்திரளான மக்கள் எங்கள் நிலங்களை பறிகொடுக்கமாட்டோம் என்று மிகத்தெளிவாக தமிழர்கள் கூறுகின்றார்கள் என்பதை அரசிற்கு மாத்திரம் அல்ல உலகிற்கும் காட்டியுள்ளோம்.

இதனை இந்த அரசு உணர்ந்து கொண்டு உடனடியாக இந்த திட்டத்தினை நிறுத்த வேண்டும் என்ற இந்த அமைப்பின் கோரிக்கையுடன் நாங்களும் இணைந்து கொள்கின்றோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-281)

## சர்வதேசத்தை ஏமாற்றவே...

அழைப்பு விடுத்துள்ளது.

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு நாளை 30 ஆம் திகதி யாழ்.மாவட்ட செயலக முன்றலில் பாரிய கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. அதற்கு ஆதரவு தெரிவித்து மேற்குறித்த அமைப்பின் தலைவர் அருட்தந்தை மா.சத்திவேல் அனுப்பியுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளமை வருமாறு.

வடகிழக்கில் நிலவிய அசாதாரண யுத்த சூழ்நிலையின் போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவரின் உறவுகள் தம் உறவுகளை தேடி தீர்வுகிட்டாத நிலையில் 2015 தேர்தலில் புதிய அரசு உருவாக வாக்களித்து காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் நீதி கிட்டும் என எதிர்பார்த்தனர்.

நல்லாட்சி அரசும் தமிழர் விடயத்தில் இன ஆதிக்க மனப்பான்மையில் செயற்படுவதோடு காணாமல்போனோர் தொடர்பில் உண்மையை வெளிக்கொணர்வதில் அசமந்த போக்கை கடைபிடிப்பதால் தம் உறவுகளுக்கு நீதி கேட்டு 500 நாட்களை கடந்தும், தொடர் போராட்டம் நடத்துகின்றனர்.

இவர்களின் மனவலிமையை அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு கௌரவத்தோடு பாராட்டுவதோடு இவர்களால் சர்வதேச காணாமல் போனோர் தினத்தில் நடத்தப்படும் பாரிய கவனயீர்ப்பு போராட்டத்திற்கு தமது முழு ஆதரவையும் வழங்குவதோடு, நீதிக்கான போராட்டத்தில் அனைவரையும் ஆதரவு வழங்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றது.

இராணுவ சுற்றிவளைப்பில் கைது செய்யப்பட்டோர் விசாரணைக்கென அழைத்து செல்லப்பட்டோர், சோதனை சாவடிகளில் தடுத்து வைக்கப்பட்டோர், யுத்த இறுதி நாட்களில் சரணடைந்தோர், உறவுகளால் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டோர் என பல ஆயிரம் பேர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

சர்வதேசத்தை ஏமாற்றுவதற்காக, காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் உண்மையை கண்டறிய கடந்த மகிந்த ஆட்சி காலத்தில் உடலகம ஆணைக்குழு, மாஹறாநாம திலக்கரட்ண ஆணைக்குழு அமைக்கப்பட்ட போதும் அவற்றிற்கு அரசு பூரண ஆதரவு அளிக்காததினாலும், சர்வதேச வழிமுறை பிரமாணங்களுக்கு அமைய விசாரணை மேற்கொள்ள முடியாமையாலும், ஆணைக் குழுக்களின் செயற்பாடுகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டன.

ஐ.நா மனித உரிமைகள் அமைப்பின் 2015 30/1 அழுத்தம் காரணமாக தற்போதைய ஆட்சியாளர்கள் காணாமல் தேடி அறிவதற்கான அலுவலகம் தொடர்பில், 2016-ம் ஆண்டே பாராளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போதும், சர்வதேசத்தை ஏமாற்றுவதற்காக நீண்டகால அமைதியின் பின்னர், இவ்வாண்டே அலுவலகம் செயற்பட இடமளித்தனர்.

இவ்வலுவலகம் மக்களின் நீதிக்கான கோரிக்கையை நிறைவேற்றுவதற்காக அமைக்கப்பட்டதல்ல. ஆட்சியாளர்களின் இனவாத அரசியல் தேவையை நிறைவேற்றவே அமைக்கப்பட்டுள்ளது. காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு சலுகைகளை பெற்றுக்கொடுத்து அவர்களை அமைதியாக்குவதும், காணாமல் ஆக்கப்படுதலுக்கு காரணமாயிருந்த அரச தரப்பினரை, இராணுவத்தினரை பாதுகாக்கும் உள்நோக்கம் கொண்டதாகவே காணாமல் போனோரை கண்டறியும் அலுவலகத்தின் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன.

அதுமட்டுமல்ல, தற்போதைய ஆட்சியாளர்களும் அரச சார்புடைய அரசியல்வாதிகளும், எந்தவொரு இராணுவத்தையும் யுத்த குற்றம் காரணமாக எந்தவொரு நீதிமன்றத்திலும் நிறுத்த இடமளிக்கமாட்டோம், தண்டனை வழங்க இடமளிக்கமாட்டோம் என கூறித்திரிவது தமிழ் மக்களுக்கு ஏமாற்றமளிப்பதோடு, நீதிக்கான போராட்டத்தை கொச்சைப்படுத்துவதாக மட்டுமல்ல, காணாமல் ஆக்கப்படுதலுக்கு காரணமானவரை ஊக்கப்படுத்துவதாகவும் அமைகிறது. அது மட்டுமல்ல, காணாமல் ஆக்கப்படுதல் தண்டனைக்குரிய குற்றமாக சட்டக்கோவையில் சேர்த்துக்கொள்ளப்படாமை எதிர்கால சமூகத்தையும் பாதிப்புக்கு உட்படுத்தும்.

1971 மற்றும் 1988, 89 காலகட்டங்களில் தெற்கில் எழுந்த இளைஞர் பிரச்சினையின் போது ஒரு இலட்சத்திற்கும் அதிகமானோர் இனந்தெரியாதோரால் கொல்லப்பட்டும், காணாமல் ஆக்கப்பட்டும் உள்ளனர். கிளர்ச்சிக்கு காரணமாக இருந்து மக்கள் விடுதலை முன்னனி தமது இனவாத அரசியலுக்காகவும், சிங்கள மக்களின் குறிப்பாக இராணுவத்தினரின் கோபத்தை தூண்டக்கூடாது என்பதற்காகவும், கொல்லப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட தமது உறுப்பினர்கள் தொடர்பில் அக்கறையற்று இருக்கின்றார்கள். இவர்கள் வடகிழக்கில் நடந்த யுத்த குற்றங்களுக்கும் பாராளுமன்றத்தில் அனுமதியளித்து அமைதி காத்தார்கள். இதுவும் வெட்கப்பட வேண்டியதே. தம்முடைய மக்களுக்கு குரல் கொடுக்காதவர்கள் தம்முடைய இனத்திற்காக எழாதவர்கள் தமிழ் மக்களுக்கு நீதி வழங்கப் போகின்றார்களா? காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் ஏமாற்றும் இலங்கை அரசின் இன்னுமொரு முகம்.

மேலும் யுத்த காலத்தில் தமிழர்கள் காணாமல் ஆக்கப்பட்ட நிலையில் ஐ.நா மனிதவுரிமைகள் அமைப்பு மனிதவுரிமை மீறலை மையப்படுத்தியே நோக்குகின்றது. அத்தோடு தனிமனித உரிமை சார்ந்தும் சிந்திக்கின்றது. யுத்த காலத்தில், யுத்தத்தின் இறுதியில் தமிழர்கள் காணாமல் ஆக்கப்பட்டமை தமிழ் மக்களின் அரசியலோடும், இன அழிப்பின் இன்னுமொரு செயற்பாட்டு வடிவமாகவும் பார்க்காமை ஏமாற்றமளிக்கின்றது.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டம் தனித்தனி குடும்பங்களாக சலுகைகளையும், உதவிப்பொருட்களையும், காணாமல் போனமைக்கான சான்றிதழையும் பெற்றுக்கொள்வதற்கல்ல. அது நீதிக்கான போராட்டம். தமிழ் மக்களின் அரசியலை மையப்படுத்திய அரசியல் தீர்வுக்கான போராட்டம். ஆதலால் தமிழ் மக்களின் அரசியலாளர்கள், அரசியல் செயற்பாட்டாளர்கள், சமூக ஆர்வலர்கள் இப்போராட்டத்தை தமதாக்கினாலேயே தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலம் நம்பிக்கைக்குரியதாக அமையும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## முல்லையில் மாபெரும்...

வட மாகாணத்தில் தமிழ் மக்களின் காணிகளை ஆக்கிரமித்தும், அபகரித்தும் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதற்கு எதிரான போராட்டத்திற்கு மாகாவலி எதிர்ப்பு தமிழர் மரபுரிமைப் பேரவை அழைப்பு விடுத்திருந்தது.

இப்போராட்டத்திற்கு தமிழ் அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்கள் என்பன ஆதரவு தெரிவித்திருந்தன. இதற்கமைய மேற்படி பேரவையின் ஏற்பாட்டில் பேரணியும் எதிர்ப்பு போராட்ட கூட்டமும் கரைதுறைப்பற்று பிரதேச சபை விளையாட்டு மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

இப்போராட்டத்தையடுத்து முல்லைத்தீவு மாவட்ட நகர வர்த்தக நிலையங்கள் அனைத்தும் பூட்டி அங்குள்ள மக்கள் முழுமையான ஆதரவை வெளிப்படுத்தியிருந்தனர்.

நகர வீதியூடான பேரணியின் போது எமது நிலம் எமக்கு வேண்டும், மகாவலி திட்டமோ குடியேற்றமோ எமக்கு வேண்டாம். திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை தடுத்து நிறுத்து, பறிக்காதே பறிக்காதே எமது நிலத்தை எம்மிடமிருந்து பறிக்காதே, நல்லாட்சியே நாசகார வேலை செய்யாதே போன்ற பல்வேறு கோசங்களை போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் எழுப்பியிருந்தனர்.

இப்போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் மாகாண சபை அமைச்சர்கள் உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மத தலைவர்கள் பொது மக்கள் என ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை இவ்விடயம் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவிக்கையில்,

மகாவலி அதிகார சபையினூடாக திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெற்று வருவதனையும் அதனைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்றும் மக்கள் பிரதிநிதிகளாகிய நாங்கள் தொடர்ந்தும் வலியுறுத்தியே வருகின்றோம்.

ஆனால் அதற்கு எந்தவிதமான நடவடிக்கைகளையும் அரசாங்கம் முன்னெடுக்கவில்லை. இவ்வாறான நிலையிலேயே மகாவலி அதிகார சபையினால் அண்மையில் சிங்கள மக்களுக்கு காணிகளும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த விடயம் குறித்து நேற்று நடைபெற்ற ஜனாதிபதி செயலணியில் நாங்கள் கூறிய போது அவ்வாறு ஏதும் நடைபெறவில்லை என ஜனாதிபதி கூறியுள்ளார். ஆனாலும் காணிகள் வழங்கப்பட்டுள்ளதாக கூறிய நிலையிலேயே தாம் அது தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி கூறினார். ஆகவே மகாவலி அதிகார சபையினால் தமிழ் மக்களின் காணிகள் ஆக்கிரமிப்பதை அரசாங்கம் நிறுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார். (ம-9,281)

## பிரதமர் ரணில்...

துணை செயலாளர் திருமதி ஹெலிஸ் வேல்ஸ்குமிடையில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

வியட்நாமில் இடம்பெறும் இந்து சமுத்திர மாநாட்டுக்கு முன்பதாக இந்த சந்திப்பு கடந்த 27ஆம் திகதி இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கருத்திட்ட முகாமைத்துவம் இளைஞர் அலுவல்கள் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்நாயக்க பிரதம அமைச்சரின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க வியட்நாமுக்கான இலங்கைத் தூதுவர் ஹசந்தி திஸாநாயக்க பிரதம அமைச்சரின் மேலதிக செயலாளர் சமன் அதாவுத ஹெட்டி வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் சமுத்திர அலுவல்கள் மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பான பிரிவின் பணிப்பாளர் சஷிகலா பிரேமவர்தன உதவிச் செயலாளர் ருவன் குணவர்தன, பிரதம அமைச்சரின் விசேட உதவியாளர் சென்ட்ரா பெரேரா உள்ளிட்ட அதிகாரிகள் இலங்கையைப் பிரதி நிதித்துவப்படுத்தி கலந்துகொண்டனர். (ம)

## ஆட்சேர்ப்பு பரீட்சை...

இச்சம்பவம் யாழ்ப்பாணத்தில் உள்ள மூன்று பாடசாலை மண்டபங்களில் நடைபெற்றுள்ளதுடன். பறிமுதல் செய்யப்பட்ட கையடக்கத் தொலைபேசிகள் அடங்கிய பொதி கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ம)

## ஜனாதிபதி இன்று...

இந்த மாநாட்டில் நேபாளம், பங்களாதேஷ், பூட்டான், மியன்மார் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன் இந்த மாநாட்டின் போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியையும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சந்தித்து கலந்துரையாடவுள்ளதாக கூறப்படுகின்றது.

இதன்போது இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்வது தொடர்பில் கலந்துரையாடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ம)


செவன
திகதி 2018/08/28
சீட்டிழுப்பு இலக்கம் 113
ஆங்கில எழுத்து Q
வெல்லப்பட்ட இலக்கங்கள் 34 47 57 59
தேசிய லொத்தர் சபை

நீரோகா
திகதி 2018/08/28
சீட்டிழுப்பு இலக்கம் 439
லக்கினம் குடும்பம்
வெற்றி இலக்கங்கள் 06 15 37 69
01
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2018.08.28
சீட்டிழுப்பு இலக்கம் 1865
ஆங்கில எழுத்து H
வெல்லப்பட்ட இலக்கங்கள் 10 35 69 71
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2018/08/28
சீட்டிழுப்பு இலக்கம் 3734
ஆங்கில எழுத்து Q
வெல்லப்பட்ட இலக்கங்கள் 5 1 8 6 1 4
தேசிய லொத்தர் சபை

## வீடு வாடகைக்கு

நல்லூரில் சிறிய குடும்பத்துக்கு வீடு வாடகைக்கு உண்டு.

(5407) தொடர்பு- 0776798668

2018 தரம் 5 புலமைப்பரிசில் தோற்றிய மாணவர்களுக்கானது

CLOUDS ACADEMY OF ENGLISH

Date of Commencement 2018.09.01
சனிக்கிழமை 9.30 மணி

யாழ் இந்துக்கல்லூரி ஆசிரியர் பொ.துஜீவ் நேரடி வழிகாட்டலில்

0772247650 - நல்லூர் தெற்கு (Stanley College அருகில்)

தரம் 6 - 11 வகுப்புக்கள் நடைபெறுகின்றன (5496)

## ஆங்கில வகுப்பு

தரம் 02, 03, 04, 05, 06, 07, 08, 09, 10 ஆம் O/L, A/L மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தொழில் புரிபவர்களுக்குமான English Spoken With Grammar வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு : 076 707 0069 **M.Suren**

## ஆட்டோ விற்பனைக்கு

QI XXXX இலக்கமுடைய பஜாஜ் பட்டர் கலர் ஆட்டோ விற்பனைக்கு உண்டு. தொடர்பு:

(5475) 0771386980

## பதிவுத் திருமண அழைப்பு

### 30.08.2018

கடந்த 23.08.2018 அன்று நடைபெறவிருந்து பிற்போடப்பட்ட நிறூஜன் – ஹம்சவதனி ஆகியோர்களின் பதிவுத் திருமண வைபவம் 30.08.2018 அன்று வியாழக்கிழமை பிற்பகல் 5 மணி தொடக்கம் இரவு 8.00 மணி வரையில் கிராமக்கோடு சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ள S.S Complex மண்டபத்தின் 2-வது மாடியில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

ஏற்கனவே வழங்கிய அழைப்பிதழினை இவ்வைபவத்திற்கும் அழைப்பாக ஏற்று தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசிர்வதித்து தொடர்ந்து நடைபெறும் இராப்போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
இங்ஙனம் தங்கள் நல்வரவை இனிதே நாடும்.

திருமதி மகேஸ்வரி
கந்தசாமி குடும்பத்தினர்
வீரக்கொடியார் வீதி,
மீசாலை வடக்கு, மீசாலை.
077 392 3754

திரு.திருமதி இராமச்சந்திரன்
சுகிர்தராணி குடும்பத்தினர்
சாளம்பை, புலோலி மேற்கு,
பருத்தித்துறை.

(இருவீட்டார் அழைப்பு) (சி-3669)

## NEW SCIENCE HALL

KANNATHIDDY ROAD, JAFFNA.

## 2019 A/L DAY CLASSES

2018 August பரீட்சைக்கு தோற்றியவர்களுக்குரியது.
திங்கள் தொடக்கம் வெள்ளி

| | |
|---|---|
| COM. MATHS 7.00 | திரு.P.செந்தில்நாதன் திரு.S.சிவகரன் |
| BIOLOGY 7.00 - 9.30 | வழமையான ஆசிரியருடன் திரு.T.கெங்காதரன் |
| CHEMISTRY 9.30 - 11.30 | திரு.K.சிவத்திரன் |
| PHYSICS 11.30 - 1.30 | திரு.G.பிரபா திரு.S.சோதிலிங்கம் |
| AGRICULTURE | திரு.M.றோய் |

ஆரம்பம் : 05.09.2018 புதன் காலை 7.00

தொடர்பு: 077 791 7611

https://facebook.com/newsciencehalljaffna (C-3664)

## CNR உள்நாடு, வெளிநாடுகளுக்கான தபால், பொதிகள் விநியோக சேவை

- அதிவேக மற்றும் சிக்கன பொதிகள் சேவை
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும் வசதி
- அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தரவாதம்
- கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்குப் பரிமாற்ற சேவை

CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062, 077 6655413 (C-3658)

## நீங்கள் A/L எழுதி விட்டீர்களா? இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்

எதிர்காலத்தை வெற்றிகொள்ள சர்வதேச ரீதியில் விஸ்தரிக்கப்பட்டுள்ள எமது நிறுவனத்தில் வட மாவட்டங்களான யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களில் இருந்து O/L தகைமையுடன் எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.

- ஆரம்பம் 17,500/=
- அனுபவம் அவசியமற்றது.
- தங்குமிடம், உணவு வசதிகள் உண்டு.

தொடர்பு- 0775566224, 0215679001 (5513)

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி

- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org (5491)

021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

## INFORMATION TECHNOLOGY PARK

Jaffna, Srilanka
Under the purview of the Ministry of Telecommunication & Digital Infrastructure

ITP

OFF.NO :- 021 222 3641 FAX.NO :- 021 222 3643

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது

**Diploma Cources** (06 Month)
- Dip.in Microsoft Office
- Dip.in Desktop Publishing
- Dip.in Information Technology
- Dip.in Computer Programming

**Online Cource** (06 Month)
- Dip.in PC Application & Office Management

**Workshop** (20 Hours)
- Internet & e-mail
- Webpage Designing & Development

**Languages** (06 Month)
- VB.net
- PHP
- C Sharp
- Java

விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளலாம்

CENTRE FOR INFORMATION TECHNOLOGY

வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம் 21.09.2018
வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பம் 22.09.2018

127,K.K.S.Road, Jaffna, Srilanka - Executive Officer -

## வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

WESTERN UNION 070 330 5500 WESTERN UNION

அண்ணா பொதிகள் சேவை

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும் நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்
முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை (C-3566)

## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)

DELIVERY IN 3-5 DAYS (C-3589)

0768226240

- மானிப்பாய்
- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

V2 TRAVELS


## உழவு...

இறந்துள்ளதாக அறிய முடிகிறது

சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-312-315)

## எல்லை...

சுந்தரம்பிள்ளை, ஆர்.எம்.ஏ.எல்.ரட்நாயக்க, பெரியசாமி முத்துலிங்கம் மற்றும் கலாநிதி ஏ.எஸ்.எம்.நௌபல் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

கட்சிகளின் அங்கீகாரத்துடன் ஐந்து பேர்அடங்கியகுழுவை சபாநாயகர் நியமித்துள்ளார். பிரதமர் தவிர்ந்த குழுவில் அங்கம் வகிக்கும் ஏனைய உறுப்பினர்கள் துறைசார் கற்றறிந்தவர்களாவர்.(ம)

## பொலி...

ஸார் ஒருவர் காயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று இரவு 7.30 மணிக்கு மணியந்தோட்டம் சந்திக்கு அருகில் யாழ். பொலிஸார் நடமாடும் சேவையில் இருந்துள்ளனர். அப்போது அந்த வீதி வழியே முச்சக்கர வண்டியில் வந்த இளைஞர்கள் சிலரை பொலிஸார் இடைமறித்துள்ளனர்.

அப்போது முச்சக்கர வண்டியில் இருந்து கீழே இறங்கிய இளைஞர்கள் பொலிஸாரை தாக்கிவிட்டு அந்த இடத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளனர். காயமடைந்த பொலிஸாரை ஏனைய பொலிஸார் மீட்டு யாழ் போதனா வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

இது தொடர்பாக பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில்இரு இளைஞர்களை கைது செய்துள்ளனர்.

குறித்த பகுதியில் கஞ்சா மற்றும் மணல் கடத்தல் இடம்பெறுவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸார் நடமாடும் சேவையை ஆரம்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.08.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.